விரைவில் வருகிறது!
பிரகாஷ் புரொடக்ஷன்ஸ்
பெற்ற தாய்
G.வரலக்ஷ்மி · நாகேஸ்வரராவ் · M.N.நம்பியார்
T.D.வஸந்தா · K.R.செல்லம்
ஸ்டுடியோ: பிரகாஷ்
டைரக்ஷன்: பிரகாஷ் ராவ்
G.H.RAO
யோகஸ்தர்கள்: ஏவிஎம் லிமிடெட். மதராஸ்.2

M211,N42,P
N53.11.9

நடிகையின் தாயார்: (தம்பியிடம்) உன் மருமகள் பெரிய ஸ்டாராயிட்டா
லுங்கூட உன்னைப் பார்த்தா மாத்திரம் இன்னும் வெட்கப் படரு!

600 008
89674

படம் 11

காட்சி 9

பேசும் படம்

★ மே 1953 ★

பொருளடக்கம்

1.	கார்ட்டூன்	... 2
2.	தலையங்கம்	... 4
3.	ஸ்டுடியோ விஜயம்	... 6
4.	இம்மாத நக்ஷத்திரம்	... 17
5.	ராமராவ்-பானுமதி - மூவர்ணப் படம்	18
6.	சாவித்திரி-ராமசர்மா - மூவர்ணப் படம்	19
7.	பண்டரிபாய்-வாழ்க்கைச் சித்திரம்	... 20
8.	மனிதன்—திரைக்கதை, வசனம்	... 30
9.	படக்காட்சிகள்	... 38
10.	ஜெனேவா-இரு வர்ணப்பட அநுபந்தம்	... 45
11.	கேள்வி-பதில்	... 53
12.	நான் ரஸித்த காட்சி	... 57
13.	தபால் பெட்டி	... 63
14.	செய்திச் சுருள்	... 65
15.	குமாஸ்தா—திரைக்கதை, வசனம்	... 72

PESUM PADAM, Tamil Monthly Magazine: Printed and Published by T. V. Ramanath, at RAMANATH PRESS, 188, Royapettah High Road, Madras - 14. (Phone: 86001) Proprietors: RAMANATH PUBLICATIONS. Managing Editor: T. V. Ramanath. Sole Agents for Ceylon: Mohan & Co., Ltd., 66, First Cross Street, Colombo. Sole Agent for Malaya: P. Sivaguru, 27, Scott Road, Kuala Lumpur and 8, China Street, Penang.

Editorial & Publication Offices:

188, Royapettah High Road, Madras - 14

MEMBER: AUDIT BUREAU OF CIRCULATIONS LTD.

'பேசும் படம்' பேசுகிறது

திரை படும் பாடு

சென்ற வாரம் பார்லிமெண்டின் மேல் சபையில், சினிமா மந்திரி டாக்டர் கேஸ்கர் சினிமாடோகிராப் சட்டத் திருத்த மசோதாவைப் பிரேரேபித்தார்.

பார்லிமெண்டின் கீழ் சபையில் ஏறக்குறைய விவாதமின்றி நிறைவேறிய இம்மசோதாவை, மேல் சபை இரண்டு நாள் வியாக்யானத்துக்கு உட்படுத்தியது.

ஆனால் யாரும் இம்மசோதாவைக் குறைகூறவில்லை; நிர்ாகரிக்கவுமில்லை. இம்மசோதாவின்படி சர்க்காருக்குக் கிடைக்கும் அதிகாரம் போதுமானதல்ல என்பதுதான் சபையின் ஏகமனதான அபிப்பிராயம்.

எதிர்க்கட்சி அங்கத்தினர்களும், குறிப்பாக நிறைய ஸ்திரீ அங்கத்தினர்களும் இம்மசோதாவைச் சாக்கிட்டு வெள்ளித் திரையைக் குத்திக் கீறிச் சின்னாபின்னமாக்கி விட்டனர்.

"இன்றைக்கு நமது சினிமாக்களில் காட்டப்படும் படங்களின் தரம் அதலபாதாளத்தில் இருக்கிறது: ஆபாசக் களஞ்சியமாக இருக்கிறது. அமெரிக்காவிலிருந்து வரும் ஹாலிவுட் படங்களும், அதைப் பின்பற்றி, அதன் அடிச் சுவட்டிலே தயாரிக்கப்படும் நம் நாட்டுப் படங்களும் பார்க்கச் சகிக்கவில்லை. இந்திய கலாசாரத்தையோ, சமுதாய முறைகளையோ பிரதிபலிக்காத இத்தகைய படங்கள் இந்தியப் பண்பாட்டையே கெடுத்துக் குட்டிச் சுவராக்குகின்றன.

மகாத்மா காந்திஜின் மகோன்னதமான உபதேசங்களை அடிப்படையாகக் கொண்ட இந்தியாவிலிருந்து இத்தகைய படங்கள் வெளிவருவது அவமானம். மகாத்மாவின் உபதேசங்களை வெளிநாட்டினருக்குத் தெரிவிக்கும்படியான படங்களன்றோ நம் நாட்டில் தயாரிக்கப்படவேண்டும்?

அதற்கு மாறான முறையில் வாலிபர்களையும், வயதுவந்தவர்களையும் கெடுக்கும் படங்களே இங்கே தயாராகின்றன. இந்திய சர்க்கார் சினிமாப் படங்களைப் பற்றி அதிகம் அக்கறை காட்டுவதில்லை; அன்றியும் இன்றைய தணிக்கை முறையினால் கொஞ்சமும் பிரயோஜனமில்லை.

இந்தத் தணிக்கை இலாகாவையே மாற்றித் திருத்திப் புதுப்பித்து அமைக்க வேண்டும். படத் தயாரிப்பாளர்களைக் கட்டுப்படுத்திக் கண்காணிக்கும்படியாக நிறைய அதிகாரம் இருக்கும்படிச் சட்டம் செய்யவேண்டும்.

தேசிய கார்ப்பொரேஷன் ஒன்றை ஏற்படுத்தி இத்-

தொழிலை அந்தக் கார்ப்பொ ரேஷனிடம் ஒப்படைக்க வேண்டும். அல்லது சர்க் காரே இத்தொழிலை மேற் கொண்டு நடத்தவேண்டும்.

'பெரியவர்களுக்கு மட் டும்', 'எல்லோரும் பார்க் கும்படியான படம்' என் றெல்லாம் 'ஏ', 'யு' அத் தாட்சிகளை வழங்குவதில் பயனில்லை. மேலும் இத்த கைய அத்தாட்சிகள் படங் களுக்குக் கூடுதலான விளம் பரத்தையே தருகின்றன.

நம்நாட்டுப் படங்களின் தரம் உயர்ந்து, நமது நாட்டின் வாலிபர்களும், குழந்தை களும் கெட்டுப் போகம லிருப்பதற்காக, ஏதாவது கடுமையாக உடனே செய் யத்தான் வேண்டும்.''

என்று மத்திய கௌன்சிலின் எல்லா அங்கத்தினர்களும் ஏகோபித்துக் கூறியிருக்கிறார் கள்.

ஆகவே, சினிமாத் தொழி லைப்பற்றி இதுவரையிலும் சர்க் கார் கொண்டிருந்த அபிப்பி ராயம் விளங்கிவிட்டது. அவர் கள் இன்றளவும், இத்தொழி லுக்கு எந்த விதமான உதவி யும் செய்யாமல், உபத்திரவம் கொடுத்து வந்ததின் உண்மை யும் விளங்கிவிட்டது.

இந்தியாவின் முக்கிய கைத் தொழில்களில் ஒன்றும், அமெ ரிக்காவுக்கு அடுத்தபடியாக வும் இருக்கும் நமது சினிமாத் தொழிலைப்பற்றி இந்திய சர்க் காரில் எதிர்ப்பில்லாத ஒரே அபிப்பிராயம் நிலவி வருவது இத்தொழிலின் துரதிருஷ்டத் தையே காட்டுகிறது.

இந்திய சினிமாத் தொழிலை பரிசுத்தப்படுத்தி அதன் தரத்தை உயர்த்தக் கூடிய எல்லா முறைகளையும் விரை வில் கையாளுவதாக, சபை யின் அங்கத்தினர்களுக்கு உறுதி கூறியிருக்கிறார் டாக் டர் கேஸ்கர்.

இந்த நிலைமையிலே இந்திய படத் தயாரிப்பாளர்கள் தாங் களாகவே சற்றுப் பரந்த நோக் கத்தோடும், விரிந்த மனப் பான்மையோடும் நடந்து கொண்டு, கொள்ளை லாப ஆசையை விட்டொழித்து, இந்திய கலாசாரப் பண்பாடு களை மதித்து, இத்தொழிலின் கெட்ட பெயரைப் போக்க முன்வர வேண்டும் என்பதே நமது அவா.

அறிவிப்பு

மின்சார வெட்டுக் காரணமாக நமது அச்சகம் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை மிகவும் வருத்தத்துடன் அறிவித்துக் கொள்ளுகிறோம். தேவையான அளவு மின்சார சக்தி கிடைக்காததால் இந்த இதழ் 'பேசும் படம்' சில நாட்கள் தாமதமாக வெளியாகியிருக் கிறது. 5-5-53-ம் தேதிய 'ரஸிகன்' பத்திரிகையையும் இதே காரணத்தி னால் நிறுத்தி வைக்கவேண்டியிருக்கிறது. அடுத்த 'ரஸிகன்' இதழைச் சற்றுக் கூடுதலான பக்கங்களுடன் இம்மாதம் மூன்றாவது வாரத்திற்குள் வெளியிட எண்ணியிருக்கிறோம்.

மின்சார வெட்டுக் காரணமாகத்தான் 'பேசும் படம் மலர் 1953' தாமதப்பட்டு வருகிறது என்றும் சொல்லத் தேவையில்லை.

ராமநாத் பப்ளிகேஷன்ஸ் :: சென்னை 14.



தலத்மொஹமது ஹிந்தி 'சண்டிராணி'க்காகப் பாடுவது ஒலிப்பதிவு செய்யப்படுகிறது.

ஸ்டுடியோ விஜயம்

நமது 'விசேஷ காமிரா நிபுணர் ஸ்டுடியோக்களைச் சுற்றி வருகிறார்

சென்னை நகரத்தில் சென்ற மாதம் இரண்டு பெரிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஓடாமலேயே ஓடிக் கொண்டிருந்த மின்சார டிராம் வண்டிகள் திடுதிப்பென்று ஓட்டப் படாமல் நிறுத்தப்பட்டு விட்டன! 'அண்ணாமலை மன்றம்' என்ற 'கலை மாளிகை' திறந்து வைக்கப்பட்டது.

இந்த இரண்டு நிகழ்ச்சிகளையும் விட முக்கியமானதொரு நிகழ்ச்சி படவுலகிலே நடைபெற்றிருக்கிறது. படவுலகில் சம்பந்தப்பட்டவர்களுக்கு

கொடைக்கானலில் 'சண்டிராணி' குழுவினர்.



குந்துலையும், சுதாகரையும் தட்டிக்கொடுக்கிறார் டைரக்டர் டி. எல். ராமச்சந்திரா.'

இந்த நிகழ்ச்சி பெரியதொரு புரட்சி என்றே பட்டிருக்கும்.

புரட்சிகரமான இச் செய்கையைச் செய்தவர் விஜயா புரொடக்ஷன்ஸ் நிர்வாக டைரக்டரான பி. நாகி ரெட்டி. வாஹினி ஸ்டூடியோவின் குத்தகையாளரான இவர், ஸ்டூடியோ வாடகைப் பணத்தில் முன்னூறு ரூபாயைக் குறைத்ததுடன், சென்ற வருஷத்தில் வாஹினியில் படமெடுத்த படத்தயாரிப்பாளர்கள் ஒவ்வொருவருக்கும், அவர்கள் படப்பிடிப்பு நடத்திய அத்தனை 'கால்ஷீட்'டுக்கும் முன்னூறு ரூபாய் திருப்பித் தந்து விடுவதாகத் தீர்மானித்திருக்கிறார்.

ஆகவே தனக்கு மட்டுமின்றி, தென்னாட்டுப் பட வுலகுக்கே தனிப் பெருமையையும், புகழையும் தேடிக் கொடுத்த நாகிரெட்டியின் வாஹினிக்குள் இம்மாதம் நான் நுழையும் போது வழக்கத்திற்கு அதிக

பள்ளிக்கூட விழாவுக்குத் தலைமை வகிக்கும்படி...

மாகவே சற்று தலை நிமிர்ந்து நடந்து ஒரு 'ஸெட்'டுக்குள் நுழைந்தேன்.

உள்ளே ஒரே அழுகைக் குரல் கேட்டது.

நான் 'ஸெட்'டின் வாயிலிலேயே, என் காமிராவை அணைத்தபடி நின்று கொண்டிருந்தேன். என்னமோ, ஏதோ? நாம் நுழையும் சந்தர்ப்பம் எக்கச்சக்கமாகி விடக் கூடாதல்லவா?

சில நிமிஷங்கள் சென்றிருக்கும். அழுத கண்ணும்' சிந்திய

...சூர்யகாந்தத்தையும், துரைசாமியையும் அழைக்கிறார் அதிகாரி.





ஆர். ஸி. பிலிம்ஸ் ஆரம்பவிழாவில் கலந்து கொண்டவர்கள்.

மூக்குமாக புஷ்பவல்லி வெளியே வந்தார். அவரைத் தொடர்ந்து டைரக்டர் பிரஸாத் மந்தஹாஸ சிரிப்புடன் ராஜநடை போட்டுக் கொண்டு வெளியே வந்தார். அவரைத் தொடர்ந்து குமாரி துளசி சிரித்துக் கொண்டே புள்ளிமான் போலத் துள்ளிக் குதித்துகொண்டு வந்தார்.

பாவம்! புஷ்பவல்லி என்ன சோகமாக காணப்படுகிருர். ஆனல் இவர்களோ கொம்மாளமும், குதிப்புமாக வெளியே வருகின்றனர். ''அடடா! என்ன சொரணையற்ற சோர்வுற்ற சமூகம்! அழுது அரற்றி அலறும் ஒரு அபலையை, ஆனந்தக் கூத்தாடும் இந்த ஆணும் பெண்ணும் சூழ்ந்த கும்பலிலா சிக்க வைப்பது? ஆண்டவனே . !''

''ஒய்! இது என்னய்யா? ஏதாவது வசனம் கிசனம் எழுதுகிறீரா?'' என்று கேட்டுக் கொண்டே அப்போது என் அருகில் வந்தார் 'பெற்ற மனம்' படம் உதவி டைரக்டர்.

''பாவம்! பாரய்யா அங்கே! நடக்காத காரியம் நம்ம கண்ணெதிரிலே நடக்குது! புஷ்பவல்லி கலங்கிய கண்களுடன் வெளியேற, இவர்களோ...''

வந்தவர் வயிறு மார்பில் முட்டும் வரையில் குலுங்கக் குலுங்கச் சிரித்தார்.

''இதைச் சொல்ல வந்து விட்டீரே! செத்துப் போனவரே உயிர் வந்து அதோ எழுந்து போகிருரே! இதை விட பெரிய அதிசயம் என்ன இருக்கிறது?'' என்று சொல்லியவாறே சற்று தூரத்தில் சென்று கொண்டிருந்த குமாரி துளசியைச் சுட்டிக் காண்பித்தார் அவர்.

''என்ன செத்து பிழைத்தவரா? அதைப்பத்தி இப்போதுதானே அமெரிக்காவிலேயே ஆராய்ச்சி நடக்குது!''

''மிஸ்டர்! பரமசிவனும் பார்வதியும், ராவணனும் ராமனும் எல்லாம் இங்கே நடமாடுவாங்க. இது ஸ்டூடியோ அல்லவா? இங்கு நடக்காத, நடக்க முடியாத அதிசயம் என்ன இருக்கிறது?''

''ஓஹோ! படப்பிடிப்பிலே வருதா இதெல்லாம்? அதுவும் 'நீங்க' சொல்லறதிலிருந்து **பெற்ற மனத்திலே** தான் இதுவும் வருகிறது போலிருக்கிறது.''

''ஒருவழியா இப்பவாவது புரிஞ்சுக்கிட்டீரே!'' என்று குத்தலாகக் கூறிவிட்டு அன்றையதினப் படப்பிடிப்பைப்பற்றி என்னிடம் விவரித்தார் அவர்.

காலக் கோளாறினல் விதியின் கோரச் சிரிப்புக்கு ஆளான ஒரு ஸ்திரீ தன் கணவனை இழந்து பல துன்பங்களை அனுபவிக்கிருள். வாழ்வு வற்றிப்போன அவளுக்கு இதயம் வரண்டு போகவில்லை. எதிர்காலத்தைப்பற்றிய கற்பனை கருகிச் சுருங்கி விடவில்லை.

பொய்யையும் புரட்டையும், தகிடுதத்தத்தையும் தகல்பாஜித்தனத்தையும் விட இன்று உலகில் அதிக அளவில் பெருகிவிட்ட 'இல்லை' என்ற மூன்றெழுத்துச் சொல். அவள் வேலை கேட்டுவந்த ஒவ்வொரு இடத்திலும் முதன் முதலில் வந்து நின்றது.

ஆண்டவனை நோவதா? அல்லது சமூகம் சிரிக்கும்படி—அவல வாழ்வில் தனனை விட்டுப் போகும்படி—தன் கணவனது ஆவியை ஆகர்ஷித்துக் கொண்ட கூற்றுவனை நோவதா? அல்லது 'இல்லை' என்ற சொல்லை 'மும்மூர்த்தி'களின் சக்திக்கும் அதிகமாகச் செய்துவிட்ட தமிழ் தேவியைச் சபிப்பதா?

ஆனல் அவளும் ஒரு பெண்; பொறுமைசாலி! ஆனலும் அவள் கண்ணகிபோல் யாரையும் சுட்டெரிக்கவில்லை; நளாயினியைப் போல் வசைபாடி சபிக்கவில்லை! வேலை தேடிக்கொண்டே போனுள்! போனுள்!!

வெந்த உள்ளத்துக்கு ஒரு அருமருந்தாக—எரிமலையெனக் குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருந்த அவளது இதயக்கனலுக்குகுளுமை தரும் தென்றலாக ஒரு வேலை கிடைத்தது அவளுக்கு! அதுவும் 'ஹோம் டிபார்ட்மெண்ட்'டின் சிபார்சால் ஒரு வீட்டு வேலைக்காரியாக.

அவளது அன்றாட வேலைகளில அந்த சின்ன எஜமானியை எழுப்பி, காபி கொடுப்பதும் ஒன்று.

அன்று......

ஆர். ஸி. பிலம்ஸ தயாரிப்புக்கு ரெஹ்மான் காமிராவை முடுக்குகிருர்.





ஸ்ரீமதி கெம்பராஜ்
கண்காணிக்க...

கோழி கூவிற்று. கதிரவன் பிறந்தான். அம்மாதும் எழுந்தாள்.

வழக்கத்திற்கு அதிகமாக, சின்ன எஜமானியின் அறையில் அமைதி நிலவியது. சுருங்கச் சொல்ல போனால் சின்ன எஜமானி அம்மாள் மூச்சுவிடும சப்தம் கூட வழக்கத்திற்கு மாருக அன்று கேட்கவில்லை!

"அம்மா!" என்று கூப்பிட்டுக் கொண்டே கட்டிலில் மல்லாந்து படுத்துக் கொண்டிருந்த அவளை • எழுப்பினுள் வேலைக்காரி.

தன் :கூப்பாட்டுக்கு செவி கொடுத்துப் பொருட் படுத்தாததால் அவள் கையை மெல்ல எடுத்து, தன் கையிலிருந்த காபி டம்ளரை அவளிடம் கொடுத்தாள் அவள்.

பிடி நழுவி, டம்ப்ளர் கீழே விடப்பட்டு காபி சிந்தி சிதறியதுதான் மிச்சம்!

கெம்பராஜ் டைரக்ட் செய்ய...

அடுத்தபடி அவள் முகத்தினருகில் சென்று தலையை ஆட்டினுள் அவள். ஆடிய தலை ஆட்டப்பட்டபடி அசைந்து கொடுத்தது!

வேலைக்காரிக்கு விஷயம் புரிந்து விட்டது! வழக்கத்திற்கு அதிகமாக அந்த அறையில் அமைதி நிலவி ஆழ்ந்த பயங்கரத்தை உண்டாக்கியதற்கு விளக்கமும் அவளுக்குத் தெரிந்து விட்டது!!

ஆம்! அன்ருட நியதி நிலை தவறி அந்த சின்ன எஜமானியம்மாளும் சொல்லாமல் கொள்ளாமல் மூச்சு விடுவதை நிறுத்தி விட்டாள்.

...கற்கோட்டை
சுடப்படுகிறது.



தன்னை 'சுட்ட' காமிராவைக் கட்டிக்கொண்டு என் காமிராவுக்கு 'போஸ்' கொடுத்தார் ஸ்ரீராம்.

இருந்தும்—

'பழிவோரிடம் பாவம் ஓரிடம்' என்ற பழமொழியை எழுத்துலகச் சிற்பிகள் சும்மாவா செதுக்கி வைத்தார்கள்? நீதி மன்றத்தின் நேர்மையான கண்களால் அம்மாது பார்க்கப்பட்டு குற்றவாளி—கொலைகாரி என முடிவு செய்யப்படுகிறாள். ஆயுள் தண்டனை அவளை அரவணைக்கிறது!

இந்த காட்சியிலே சின்ன எஜமானியாக துளசி நடிக்கிறார்.

'பெற்ற மனம்' டைரக்டர் பிரஸாத்தின் சொந்தத் தயாரிப்பு. முடிவடையும் தறுவாயிலிருக்கும் பெற்ற மனம் திரைக் கதையை மு. வரதராசனார் எழுதியிருக்கிறார்.

* * *

வாஹினியை அடுத்து எனது முகாமை ரோகிணி ஸ்டுடியோவில் போட்டேன்.

இங்கு ஒரு பள்ளிக்கூட விழா நடந்து கொண்டிருந்தது. ஆனால் இது திறப்பு விழாவல்ல; தலைமை வகித்து பரிசளிக்க வேண்டிய விழா!

ஹாலில் போடப்பட்டிருந்த பெஞ்சுகளிலும், நாற்காலிகளிலும் ஏராளமான பள்ளி மாணவ, மாணவியர்களும் பிரமுகர்களும் உட்கார்ந்து கொண்டிருந்தனர்.

மேடையிலே ஒரு பெரிய மேஜை போடப்பட்டிருந்தது. அதன் மேல் பல வெள்ளிக் கோப்பைகளும் பதக்கங்களும் பரப்பி வைக்கப்பட்டிருந்தன, பரிசு பெற்றவர்களுக்கு உரியதாக்க!

பள்ளிக்கூட சார்பில் ஒருவர் எழுந்து மைக்குக்கு முன்னால் வந்து நின்றார்.



தொழிலாளியும் முதலாளியும்

திரை 'அழகி' கிருஷ்ணகுமாரியும், அவர் நடித்து வரும் 'அழகி' பட டைரக்டர் சுந்தர்ராவ் நட்கர்ணியும், ஜி. எம். பஷீரும்.

மைக்குக்கு முன்ஞல் வந்து நின்ற பள்ளிக்கூட அதிகாரி பேச ஆம்பித்தார். "நமது பள்ளிக்கூட விழாவுக்கு இங்கு அமர்ந்திருக்கும் பெரியவரைத் தலைமை தாங்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன். அவருடன் அமர்ந்திருக்கும் ஸ்ரீமதி சித்ராதேவியாரைப் பரிசுகள் வழங்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்."

சித்ராதேவியும், அந்தப் பெரியவரும் எழுந்து சென்று மேடையில் உட்கார்ந்து கொண்டனர். பள்ளிக்கூட அதிகாரி அவர்களிருக்கும் மாலை அணிவித்தார்.

ஒரே கை தட்டல். காது செவிடு படும்படி; கட்டிடம் அதிர்ந்து போகும்படி!

மேஜைக்கு முன்பாக, ஒரு பெரியவரும், அவருக்குப் பக்கத்தில் ஒரு பெண்மணியும் உட்கார்ந்திருந்தனர்.

ரோகிணியின் 'லெகஸி' தமிழ், தெலுங்குப் படத்தில் இச்சிறு காட்சி வருகிறது.

ஆனந்த், ரகு இருவரும் ஒரே பள்ளியில் படித்து வருகிருர்கள். ஆனந்தின் தாயார் கமலா அவனை ஒரு நல்ல பையனுக வளர்க்கிருள், ரகுவின் தாய் சித்ரா, தன் மகனை ஒரு போக்கிரியாக்கி விடுகிருள்.

நாட்டின் எதிர்கால நன்மைக்கு நற்குணம் படைத்த வாலிபர்களை வளர்த்து அளிப்பது தாய்மார்களின் முக்கிய கடமை என்பதை 'லெகஸி' கதை விளக்குகிறதாம்.

'கல்யாணம் பண்ணிப்பார்'ரில் அட்டகாசம் செய்த சிறுவன் குந்து இதில் ஆனந்தாக வருகிருன். சுதாகர் ரகுவாகத் தோன்றுகிருன். சித்ராதேவியாக சூர்யகாந்தம் வருகிருர். டி. எல். ராமச்சந்திரா டைரக்ட் செய்யும் இது முடிவடையும் தறுவாயிலிருக்கிறது.

'பிரேம தரங்யா' என்ற சிங்களப் படத்தில் அய்ஷா வீரக்கூன்.

* * *

ரோகிணியிலிருந்து திரும்பி வரும் வழியில் நடிகர் ஸ்ரீராம் கன குஷியாக

காரில் வந்துகொண்டிருப்பதைப் பார்த்தேன்.

"எங்கே இப்படி?" என்று விசாரித்தேன்.

"கொள்ளை யடிக்கப் போகிறேன்!" என்றார் அவர், சிரித்துக் கொண்டே.

"பட்டப் பகலிலா? இதென்ன பகற்கொள்ளையா?' என்றேன் நான்.

"பட்டப் பகலில் நடைபெறும் இராக் கொள்ளை" என்றார் அவர் கிண்டலுடன், கண்களை சிமிட்டிய படி.

"ஓஹோ! அப்படியா? அதாவது ஏதோ படத்தில் இராக் கொள்ளை 'ஸீன்' ஒன்று வருகிறது. அதில் கலந்து கொள்வதற்காக 'பக'லில் நீங்கள் கிளம்பி யிருக்கிறீர்கள். விஷயம் இதுதானே?" என்றேன். தலையை ஆட்டினார் அவர்.

"எந்த ஸ்டுடியோவில்? எந்தப் படத்திற்கு?" என்று அடுத்தாற் போல ஒரு கேள்வி என்னிட மிருந்து அவரிடம் தாவியது.

"பிரகாஷ் ஸ்டுடியோவில் மீலுகொலுபு என்ற படத்திற்காக" என்றார் அவர் நானும் ஸ்ரீராமுடன் பிரகாஷ் ஸ்டுடியோவுக்குள் நுழைந்தேன்.

'ஸெட்'டிலே ஒரு பாங்கின் உட்புறக் காட்சி நிர்மாணிக்கப் பட்டிருந்தது.

நடுநிசி! ஊரடங்கிக் கிடந்ததால் ஓசையின்றி அந்த கட்டிடம் அமைதிசூழ நின்றது. அவற்றில் மாட்டப்பட்டிருந்த கடிகாரத்தின் 'டிக் டிக்' என்ற ஓசையைத் தவிர வேறு எதுவும் கேட்கவில்லை.

டைரக்டர் வேல்சாமி கவியும், பி.எஸ். கோவிந்தனும் மலர் கொய்ய வரவில்லை! 'பத்மினி' படப்பிடிப்பின் போது கோவை சென்டிரலில



'மனிதனும் மிருகமும்' படத்திற்கான ஒரு விவாதக் கட்டம். டைரக்டர் கே. வேம்பு, எஸ். டி. சுந்தரம் இருவரும் படத்தில் இருக்கின்றனர்.

'முயற்சி'யில ரேவதியும் தாமஸ்ஸும்

நடிகர் ஸ்ரீராம் அந்த கடிகாரத்தின் கீழே போடப்பட்டிருந்த மேஜையின் முன்பு உட்கார்ந்து கொண்டிருந்தார். அவருக்கு நேரெதிராக பக்கவாட்டில் 'கஜானா' இருந்தது.

டைரக்டர் பிரகாஷ் ராவ் காமிராவை இயக்க உத்தரவு போட்டார்; ஸ்ரீராமும் தன் நடிப்பை ஆரம்பித்தார்.

தட்டுத்தடுமாறி பணப்பெட்டிக்கு அருகில் சென்று அதை மெள்ளத் திறந்து கத்தை நோட்டுகளை எடுத்துக் கொண்டார். இந்த விஷயம் அந்த அறையில் மங்கலாகப் பிரகாசித்துக் கொண்டிருந்த மின்சார விளக்குக்கும், ஆழ்ந்த அமைதிக்கும்தான் தெரியும்!

இந்தக் காட்சி முடிந்ததும் ஸ்ரீராம் என் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டார். காட்சி விவரத்தைப் பற்றி அவரிடம் கேட்டேன்.

சேகர் என்ற பாத்திரதாரியாக அவர் வருகிறாராம். சேகர் பி. ஏ. ஹானர்ஸ் பரிட்சையில் முதல் வகுப்பில் தேர்வு பெறுகிறான். மேல்நாட்டு படிப்புக்காக 'ஸ்காலாஷிப்'பையும் எதிர்பார்க்கிறான்.

வயது சென்ற பெற்றோர்கள், ஒரு அக்காள், ஒரு தங்கை, ஒரு இளைய சகோதரன் ஆக இத்தனை பேர்களை தன் குடும்பத்தில் கொண்ட சேகர் மேற்கொண்டு படிப்பைத் தொடர முடியாமல் போய் விடுகிறது. இந்த நிலையில் வேலை தேடி அலைந்த அவனுக்கு ஒரு பாங்கியில் குமாஸ்தா வேலையும் கிடைக்கிறது.

பாங்கு பியூன் பரம ஏழை. சேகருக்கு அவன் பல வகையிலும் உதவியாக இருந்து வருகிறான். அவனது மனைவி திடீரென்று நோய்வாய்ப்பட்டு விடுகிறாள். சேகரிடம் பண உதவி கோருகிறான் அவன்.

சேகரிடம் பணமில்லை; ஆனால் அந்தச் சேவகனுக்கோ கண்டிப்பாக உதவ வேண்டும். இந்த நிலையில் அவனுக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. சிந்தித்துச் சிந்தித்துச் சிந்தனையை வற்ற விட்ட அவனுக்கு ஆபீஸ் பண அலமாரிதான் சிரித்துக் கொண்டு எதிரே நின்றது.

அன்றிரவு ஆபீஸில் வேலைசெய்த போது அவன் பகலில் சிந்தனை

செய்தது செயல வடிவில் திரிந்து நின்றது!

'ஆனந்தா புரொடக்ஷன்ஸ்' தயாரிக்கும் இந்தப்படத்திற்கு இன்னும் தமிழ்ப் பெயர் இடப்படவில்லை. பூத்து வரும். புது சமுதாயத்தின் தேவையான மறுமலர்ச்சியின் அறைகூவலாக இப்படம் இருக்குமாம். பிரகாஷ் ராவ் இந்தப் படத்தை டைரக்ட் செய்து வருகிறார்.

* * *

மங்கியவொளியில், அந்த மலர் வனத்தில், மணம் நிறைந்த மாலைத் தென்றல் காற்று குளுகுளுவென வீசிக் கொண்டிருந்தது—இது பரணி ஸ்டுடியோவுக்கு ஒரு விளக்கம்!

பானுமதியின் சொந்த ஸ்டுடியோவான பரணியில் இம் முறைதான் நான் முதன் முதலாக நுழைந்தேன். ஸ்டுடியோ சக்ரவர்த்தினி தனது முக்கிய சிப்பந்திகளுடன் ஏதோ மந்திராலோசனை நடத்திக் கொண்டிருந்தார்.

ஒரு பிரபல நடிகை, படமுதலாளினி, ஸ்டுடியோ ஒன்றின் உரிமையாளர், பட டைரக்டர் ஆக இத்தனை பெரும் பொறுப்புகளை வகிக்கும் ஒருவர் நமது தென்னாட்டைச் சேர்ந்தவர் என்ற எண்ணம் வந்தபோது ஒரு தனி மகிழ்ச்சியே ஏற்பட்டது.

சண்டிராணி படம் தமிழ், ஹிந்தி, தெலுங்கு ஆக இப்பாஷைகளில் தற்போது பரணியில் தயாராகி வருகிறது. இப்படம், பரணியின் சொந்த தயாரிப்பு. இதில் பானுமதி கதாநாயகியாக என், டி. ராமராவுடன நடிக்கிறார்; படத்தையும் டைரக்ட் செய்கிறார்.

அந்தத் தோட்டத்தின் வெட்ட வெளியில் வெட்டி அரட்டை அடித்துக் கொண்டு சிலர் உட்கார்ந்திருக்கிறார்கள்.

அடிமேல் அடிவைத்து அடுத்த வருக்கும் தன் நடை ஒலி கேட்காத வகையில் ஒருத்தி அந்தப் பக்கமாக வந்து கொண்டிருக்கிறாள்.

அவள் நினைத்தது பலிக்கவில்லை; ஆனால் நடந்துவரும் அடியோசையினால அவள் வரவு தெரிந்து விடுவதில்லை. வெட்டி அரட்டை அடித்து காலத்தைக் கொன்று கொண்டிருந்த அக்காவலாளிகள் எதேச்சையாக சுற்றுப்புறம் திரும்பிப் பார்த்தபோது அவள் உருவம் அவர்கள் உள்ளத்தில் பாய்ந்து, அந்த உணர்ச்சியின வேகத்தில் ''யார் அது?'' என்ற கேள்வியையும் பிறப்பித்து விடுகிறது

அடுத்து ஒருவன் ''சண்டிராணியா?'' என்ற கேள்வியைப் பிறப்பிக்கிறான்.

''சப்பாராணி!'' என்ற குரல் அப்பெண் தொண்டையின் அடிவாரத்திலிருந்து வருகிறது.

''ஓ, நீங்களா?'' — காவலாளிகளின் கூப்பாடு.

''கிஷோர் இருக்கிறாரா?'' சப்பாராணியின் இதயத்திலிருந்து அன்பைப் பொழிந்து தள்ளிக் கொண்டு புறப்படுகிறது இக்கேள்வி.

'ரோகிணி'யில் ஜம்பு மணி.

சென்ற மாதம் 23-ம் தேதியன்று 'ஜாதகம்' என்ற தனது சொந்தப் படத்திற்கு ஏவி. எம்.மில் பூஜை போட்டார் நடிக டைரக்டர் ஆர். நாகேந்திரராவ்

''இருக்கிறார்! ஆமாம் நீங்கள் எப்படி உள்ளே வந்தீர்கள்?''—காவலாளிகள் விளக்கம் கேட்டனர்.

சப்பாராணி சொல்கிறாள், சுரங்க வழியே வந்ததாக. அதையே அக்காவலாளிகளுக்கும் காண்பிக்கிறாள். காலக் கோளாறினால் அசந்தர்ப்ப நிகழ்ச்சி ஏற்பட்டு உயிருக்கு ஆபத்து வரும்போது இந்த வழியையே அவர்களும் உபயோகிக்கலாம் என்று சப்பாராணி காவலாளிகளிடம் சொல்கிறாள்.

ஜெமினியின அபூர்வ சகோதரர்களைப் போன்ற மாறுபாட்ட கருத்தைக் கொண்ட கதை சண்டிராணி. இதிலே சண்டிராணி, சப்பாராணி என்ற இரு பாத்திரங்கள் இருக்கின்றன. கதையமைப்பின்படி இவர்கள் இருவரையும் அருகில் நிற்க வைத்து ''யார் சண்டிராணி? யார் சப்பாராணி?'' என்று கூறும்படிக் கேட்டால நிச்சயம் விடைகொடுக்க முடியாது! காரணம் சண்டிராணிக்கும் சப்பாராணிக்கும் அவ்வளவு உருவப் பொருத்தம்; தோற்றம்!

இவர்கள் இருவருமே கிஷோர் என்பவனைக் காதலிக்கின்றனர். காதல் விஷயத்தில் இரு பெண்களிடையே போட்டி என்றால் கதையின சுவாரஸ்யத்திற்குக் கேட்க வேண்டுமா?

அந்த சமயமாகப் பார்த்து கிஷோருக்குப் பயித்தியம் பிடித்து விடுகிறது. காதல் முற்றியதால் அல்ல; கன்னிப் பெண்கள் இவரது கண் வீச்சுக்குள் விழுந்து விட்டதாலும் அல்ல!

காரணப் பைத்தியம்!

முடிவில் பைத்தியமும் அவனுக்குத் தெளிந்து விடுகிறது.

இந்த சண்டிராணி கோடைக்கானலில் கொஞ்சநாள் சமீபத்தில் வாசம் செய்து விட்டு வந்தாளாம். அங்குள்ள இயற்கைக் காட்சிகள் வெகு உயர்தரமாக ஒளிப்பதிவு செய்யப்பட்டிருக்கின்றனவாம்.

சண்டிராணி பரணியின் முதல் அகில இந்திய தயாரிப்பு! ஆதிக்கம் செலுத்தாமல் போகுமா என்ன?

மாதுரிதேவி

சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ள 'மனிதன்' படத்தில் மாதுரிதேவி இளைய மனைவி பாத்திரத்தில் பிரேமா என்ற பெயரில் தோன்றி மிகவும் அருமையாக நடித்திருக்கிறார்.

தமிழ்ப் படங்களில் மாதுரிதேவி ஏற்று நடிக்காத பாத்திரங்களே இல்லை என்று சொல்லலாம். நவரஸங்களையும் அனாயாசமாகப் பிரதிபலித்து அதி இயற்கையாக நடிக்கும் திறமை பெற்றிருக்கும் மாதுரிதேவி 'மனித'னில் சிருங்காரரஸ பாத்திரத்தில் பிரமாதமாக நடித்திருக்கிறார்.

பிரேமா உணர்ச்சிக்கு அடிமையாகி விட்டவள். கிழக்கணவனிடம் பெற முடியாத இன்பத்தை பாலிய நண்பன் ராஜன் மூலம் அனுபவிக்கத் தீர்மானிக்கிறாள். ஓவியனுக்கு உள்ளத்தில் இடமளித்ததுடன் இல்லத்திலும் இடமளித்து அவனை அடைய முயற்சிக்கிறாள். கடைசியில் அவள் கனவு நனவாகாமலேயே பைத்தியம் பிடித்து விடுகிறது அவளுக்கு.

விபசாரத்தைத் தூண்டி வளர்க்கும் ஒரு கதாபாத்திரமாக துரதிருஷ்ட வசமாக பிரேமாவின் பாத்திரம் அமைந்து விட்டதற்காக வருந்தினாலும், அந்தப் பாத்திரதாரியாகவே மாறி மாதுரி அற்புதமாக நடித்திருப்பதைப் பாராட்டத்தான் வேண்டும்!

'பிரேமா என்றும் புது மணப் பெண்தான்' என்று தோழிகள் கூறும் அளவுக்கு, இளையாளான பிரேமா தளுக்கி குலுக்கி மினுக்குகிறாள். அவள் ராஜனை அடையச் செய்யும் முயற்சிகள் நம்மையே மயக்கி விடுகின்றன! அவள் ஏமாறும்போது, 'வேண்டும் நன்றாக' என்று கூறிச் சிரிக்கிறோம் கடைசியில் அவள் திட்டங்கள் தவிடுபொடியாகும் போது கொலை, காமம், பதித்துரோகம் எல்லாவற்றுக்குமான தண்டனையாக அவளுக்குப் பைத்தியம் பிடித்து விடுகிறது. பாவம், பேதைப்பெண் என்று நமக்கு அவளிடம் அப்போதும் அனுதாபம் ஏற்படுகிறது.



ராமராவ் – பானுமதி

பானுமதி சுயமாகத் தயாரித்து, டைரக்ட் செய்து, நடிக்கும் படமான சண்டிராணியில் ராமராவை ஜோடி சேர்த்துக் கொண்டிருக்கிறார்.

சாவித்திரி — ராமசர்மா

ஷோபா பிலிம்ஸாரின் பரோபகாரத்தில்
இந்த இளம் ஜோடியைச் சந்திக்கலாம்.

பண்டரி பாய்

வாழ்க்கைச் சித்திரம்

தமிழ்ப்படவுலகுக்கு ஆந்திரத்தின் அன்பளிப்பாக வந்து இங்கே ஐக்கியமாகிவிட்ட கண்ணாம்பா சோகரஸ நடிப்புக்கு ஈடு இணையற்றவராகி விட்டார். அந்தக் கட்டங்களிலே கண்ணாம்பா தோன்றி நடிக்க ஆரம்பித்து விட்டால், கதறிக் கதறிக் கண்ணீர் விடும் அந்தக் கதாபாத்திரம் நம் உள்ளத்தைத் தொட்டு நம் கண்களையும் கடல்களாக்கி விடும். உணர்ச்சிப் பிரவாகத்தில் சிக்கிக் கரையேற முடியாது தவித்துப் போய் விடுவோம்.

அதற்குப் பிறகு சமீபகாலமாகப் படவுலகின் போக்கு மாறிவிட்டது. அந்தச் சோகக் கட்டங்களில் நடிக்க கண்ணாம்பாவுக்கு அடுத்தபடியாக திரௌபதி வந்து சேர்ந்தார். அவரால் முடிந்த வரை அழுது தீர்த்து நம்மையும் அழ வைத்து விட்டார். ஆனால் பெரும்பாலோர் 'கிளிசரின்' உதவியினாலேயே அழுவதாலோ என்னவோ தற்போதைய பட உலகின் சோகக் கட்டங்கள் எடுப்பாக இல்லை. சில படங்களில் சோகக் கட்டங்கள் அதிகமாய்ப் போய் விடுவதால் அது ஹாஸ்ய கட்டமாகமாறி ரஸிகர்களை வயிறு குலுங்கும்படிச் சிரிக்க வைக்கிறது. சமீபவெளியீடுகள் ஒன்றில் இந்த அனுபவம் ஏற்பட்டது. 'வில்லி' வேஷதாரி ஒருவர் பல இடங்களில் நீலிக்கண்ணீர் வடிக்கிறார். அது ஹாஸ்யச் சுவையை ஊட்டுகிறது. ஆனால் இதே

பண்டரி - மைனாவதி



நடிகை சோக கட்டத்தில் அளவுக்குமீறி முகத்தைக் கோணலாக வைத்துக் கொண்டு கூவிக் கதறும்போது, அதுவும் நீலிக் கண்ணீர் வடிக்கும் ஒரு கட்டம் என்று ரஸிகர்கள் தீர்மானித்துக் குபீர்ச் சிரிப்பு சிரிக்கிறார்கள்! இந்தக் கலாட்டாக்களிலிருந்து விடுபட, கன்னடம் தந்தது ஒரு கட்டழகுக் காரிகையை. படவுலகிற்கு வந்த அந்த அழகியை தமிழ்நாடு—தமிழ்ப் படவுலகம் ஆசி கூறி வரவேற்றது.

வந்த அழகி எந்த விதத்திலும் வசதிபெறவில்லை, ஆரம்பத்தில். காரணம் சனி பகவானின் துணை கொண்டு அவர் வந்ததுதான். ஆனால் ஆதவன் முன் பனி மறைவதுபோல, அதிர்ஷ்டதேவதையின் கடைக்கண் பார்வை இந்த அழகி மீது விழவே சனி பிய்த்துக் கொண்டது. சோக கட்டங்களிலே தோன்றும்போது பாத்திரத்தோடு ஐக்கியமாகி அந்தச் சூழ்நிலைக்கே ஒரு தனிச்சோக உருக் கொடுத்து பார்ப்பவர்களின் உள்ளங் கரையும்படிச் செய்வதுதான் உயரிய நடிப்பு. இன்னும் கேட்டால் அந்த இடத்தில் அதை நடிப்பு என்று கூடச் சொல்ல

முடியாது. அனுபவிப்பு
என்றே சொல்லலாம்.
இந்தத் திறமை இயற்
கையிலேயே உடலில்
ஊறியிருக்க வேண்டு
மானல் அந்தப் பாத்
திரமேற்று நடிக்கும் நபர்
சிறிதேனும் பக்தியுள்
ளவராக இருக்க
வேண்டும்.

இத்தனையுமுள்ள
சோக சித்திர நடிகை,
மைசூர் தந்த மாணிக்
கம், பண்பட்ட நடிகை
பண்டரிபாய் என்று
நான் சொன்னல்
யாரும் ஆக்ஷேபிக்க
மாட்டார்கள். ஆனல்
பண்டரி ரஸிகர்
கள் நினைப்பதுபோல்
சோகக் கட்டங்களில்
நடிப்பதில் மட்டும்தான்
திறமை பெற்றிருக்
கிறர் என்பதல்ல. நவ
ரஸங்களையும் பிரதிபலிக்
கக்கூடிய சிறந்த நடி
கை அவர். பட உலகம்
அவரைப் பற்றித் தவ
றன அபிப்பிராயம்
கொண்டு சோக ரஸ
பாத்திரத்திற்கே தேர்ந்
தெடுப்பதை நான்
வெறுக்கிறேன். அழகும்
தேக அமைப்பும்
பொருந்திய திறமை
கொண்ட நடி, ஒரு
குறிப்பிட்ட பாத்திரத்
தில் சிறப்பாக நடித்து
விட்டார் என்பதற்காக
அதே பாத்திரத்தில்
தான் நடிக்கச் செய்
வது என்ற குறுகிய
எண்ணம் மாறி அவ
ரைக் கதாநாயகியாக



நடிக்கச் செய்ய முதலாளிகள் முன்வர வேண்டும்.

நவரஸங்களேயும் பிரதி பலிக்கக்கூடியவர் என்று சொன்னேன். இதற்குக் காரணம் அவர் கதா காலக்ஷேபம் செய்து வந்தவர் என்பதுதான். எல்லாக் கலேயையும்விட காலக்ஷேபக் கலேதான் மிகவும் சிரமமானது; சிறந்ததும் கூட. பக்தி மார்க்கத்தைப் போதிக்க சிறந்த மார்க்கம் காலக்ஷேபம் தான்.. கதையின் ஆரம்பத்திலிருந்து முடிவு வரை எல்லாக் கோணங்களிலும் அந்தந்தச் சம்பவங்களே ரஸிகர்கள் முன் நிறுத்த வேண்டும். ஒவ்வொரு கதா பாத்திரத்தின் தன்மைகளேயும் உடனுக்குடன் பிரதிபலிக்க வேண்டும். பல பாஷைகளும் அவற்றில் ஏராளமான ஸ்லோகங்களும், பாடல்களும், கதைகளும் அறிந்தவராக இருக்க வேண்டும். மறதி இவரது சத்ரு. இவ்வளவு சிறப்பான அம்சங்களேப் பெற்றிருக்க வேண்டும். பண்டரி இதில் தனிப் பெருமை பெற்று கர்னடக பிரதேசத்தில் ஒரு தனி ஜோதி





தமையனார் குழந்தை யுடன் மைனா.

யாய்ச் சுடர் விட்டுப் பிரகாசித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

"ஆதௌ கீர்த்தனாரம்பத்திலே..... சாவித்திரியின் கணவன் சத்தியவான் பிணமாக இருக்கும் போது, அவன் உயிரைக் கொண்டு வருவதற்காக யமதர்மனால் அனுப்பப் பட்ட கணங்களும் கிங்கரர்களும் பதிவிரதையான சாவித்திரியின் அருகில் நெருங்க முடியாமல் யமனிடம் ஓடிப் போய் விட்டார்கள்.

பார்த்தான் யமதர்மராஜன், தன் பரிவாரங்கள் சாவித்திரியை அணுகமுடியாதபடி அக்னி ஜ்வாலை வீசுவதை யறிந்து தானே புறப்பட்டான். சாவித்திரி அவனைக் கண்டு 'நீ யார்?' என்றாள். உடனே,

அண்டத்துயர்க் கதிபன்—யான்
எண்டிசையில் எல்லோரும்
யமனென்ற பெயரைக் கேட்டால்
இடிமுழக்கத்துடன் துடிதுடிக்கச்—
செய்யும் (அண்)

என்று யமன் பாட ஆரம்பித்து விடுகிறான்.

சாவித்திரி கெஞ்சினாள்; கதறினாள்; கேவினாள். பலனில்லை!

பதியின் உயிருடன் போகும் யமனிடம் அவள் மன்ருடுதலுக்கு வழி பிறக்கிறது. அவள் பிள்ளேயைப்பெற ஆசீர் வதிக்கிருன், கணவன் உயிரைத் தவிர வேறு எதுவும் தரச் சம்மதிக்கும் யமன்!...

ஒன்பதே வயது மதிக் கத்தக்க சிறுமி யொரு த்தி கையிலே சப்ளாக் கட்டை ஏந்தி அபார மாகக் காலக்ஷேபம் செய்து கொண்டிருந் தாள். அவளது கதை யிலே உணர்ச்சி பிர வாகமெடுத்தது. யமகிங் கரர்கள் நடுங்கித் திரும் பிச் செல்வதாக அந்தச் சிறுமி அபிநயித்தபோது ரஸிகர்களுக்கு ஹாஸ்ய ரஸம் கிடைத்தது. சாவித்திரி கணவன் உயிருக்காக மன்ருடும் போது சிறுமியின் நடிப்பு சபையிலே கண்ணீர் வழியச் செய்தது. ஸ்ம சான அமைதி நிலவியது. யமன் ஏமாறும்போது அந்த பாவம் மாறி ரஸி கர்கள் மீண்டும் சிரிக்கி ருர்கள். வயது ஒன்பது. உலக அனுபவமற்றவள், ஆனுல் தான் கதை சொல்லுவதன் மூலம் ஆயிரக்கணக்கான மக்க ளின் மனதிலே இடம் பெற்றுவிட்ட சிறுமி பண் டரியின் வரலாறு இது. இந்தக்கலே உலகப் பிர வேசம் அவர் ரத்தத்தில் ஊறிய கலே உணர்ச்சி யின் பிரவாக பலன் தான்.

எந்தக் கலையிலும் தம்பதிகள் குறைவு. கணவன் மனைவி இருவரும் ஒரே துறையில் ஈடுபட்டிருப்பதை நாம் அதிகம் காண முடிவதில்லை. ஆனால் இப்படி இருவரும் ஒரே துறையில் பிரவேசித்திருப்பதை இப்போது நாம் பார்க்கப் போகிறோம். வட கன்னட ஜில்லாவிலே இந்த உபாத்தியாய தம்பதிகள் இருந்திருக்கிறார்கள். அந்த ஜில்லாவில் பட்கல் என்ற ஊரில் ரங்கராவ் என்பவரும் அவர் மனைவி காவேரி பாயும் நிம்மதியாக வாழ்ந்து வந்தனர். ரங்கராவ் சித்திரக் கலையில் தேர்ந்தவர். அவர் டிராயிங் மாஸ்டராக உத்தியோகம் பார்த்து வந்தார். காவேரி பாய் உபாத்தியாயினியாகப் பணி செய்து வந்தார்.

இந்த ஒற்றுமை வாழ்க்கையில தம்பதிகளுக்குப் பத்து குழந்தைகள் பிறந்தனர். இந்த பத்துக் குழந்தைகளும் கலைஞர்களாக பிரகாசிப்பார்கள் என்று தம்பதிகள் கனவிலும் நினைத்திருக்க மாட்டார்கள். அவர்கள் அப்படி நினைப்பதற்கு ஏற்ற சூழ்நிலை அப்போது இல்லை. ஆனால் குழந்தைகள்—ஏன் ரங்கராவ் உள்பட கலைஞர்களாக மாற நேர்ந்தது.

ரங்கராவுக்கு நாடகக் கலையில் அபார மோக மிருந்தது. தூரிகை கொண்டு சித்திரம் தீட்டி, சாகாமல் செத்துக் கொண்டிருப்பதைவிட நாடகக் கலையில் நாலு காசு பெற்று நல் வாழ்வு வாழலாம் என்று தீர்மானித்தார். அவரது தீர்மானம் உருவான வுடனேயே டிராயிங் மாஸ்டர் உத்தியோகத்துக்கு தலைவலி வந்துவிட்டது! உத்தியோகத்தை விரைவில் உதறித் தள்ளிவிட்டார் ரங்கராவ். ஆனால் அவர் மனைவி காவேரிபாய் மட்டும் சமீப காலம் வரை உபாத்தியாயினியாகப் பணியாற்றி வந்தார்.



உத்தியோகத்தை உதறித் தள்ளிய ரங்கராவ் 'அம்பா

பிரஸாதிகா நாடக மண்டலி' என்ற நாடகக் கம்பெனியை சொந்தத்திலேயே ஆரம்பித்து நடத்தி வந்தார். அவரும் அவரது குமாரர்களும் இந்தக் கம்பெனியின் நாடகங்களில் நடித்தனர். ஆனால் அந்தக்கால நாடகக் கலையின் நிலைமையில் அவர் கம்பெனியை வேறொருவருக்கு விற்றுவிட்டதில் வியப்பில்லை. விற்றுவிட்ட போதிலும் அவருக்கு நடிப்பிலும் நாடகக் கலையிலும் இருந்த ஆர்வம் குறையவில்லை. சில நாள் சும்மா இருந்த பிறகு மீண்டும் 'ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய நாடக சபா' என்ற நாடகக் கம்பெனியை ஆரம்பித்தார். அந்தக் காலத்தில் நாடகக் கம்பெனிகளின் பெயர்கள் ஒரு மைல் நீளம் இருக்கும். இந்த மைசூர் ராவும் அதே போல வைத்தார். ரங்கராவ் நாடக நடிகர். சைத்ரிகர் என்பதோடு ஒரு சிறந்த பௌராணிகர் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும். அவரது காலக்ஷேபங்களுக்கு நல்ல வரவேற்பிருந்ததால் இந்த நஷ்டத்தை அதிலும் அந்த நஷ்டத்தை இதிலும் என்ற அளவில் சரிக்கட்டி வந்தார்.

அந்தக் காலத்தில் நாடகத்தில் நடிப்பது என்பது கேவலமாகக் கருதப்பட்டு வந்தது. அதிலும் பெண்கள் அதில் ஈடுபடுவதென்றால் அதை மிகவும் தாழ்மையாகக் கருதினார்கள். 'நடிகன்' என்று இப்போது நாம் குறிப்பிடும் நபர் அன்று 'வேஷம் கட்டறவன்' 'கூத்தாடி' என்று அழைக்கப்பட்டார். தான் நாடகக் கலையில் சம்பந்தப்பட்ட போதிலும். சமூகத்திற்குப் பயந்து. தன் குமாரிகள் அதில் ஈடுபடக் கூடாது என்று விரும்பினார் ரங்கராவ். பெண்கள் அந்த 'ஈன'த் தொழிலில் ஈடுபடக் கூடாது என்பது அவரது அன்றைய எண்ணம்! ஆனால் தெய்வ வழிபாட்டை அடிப்படையாகக் கொண்ட காலக்ஷேபக் கலையில் தன் மகள் பண்டரி ஈடுபடுவதை அவர் வரவேற்றதுடன் தானே குமாரிக்குப் பயிற்சி யளிக்கவும் செய்தார்.

சின்னஞ் சிறுமியாகப் பள்ளியில் படிக்கப் புகுந்த பண்டரி, அத்துடன் காலக்ஷேபம் செய்வதிலும் தேர்ச்சி பெற்று வந்தார். அவரது ஒன்பதாவது வயதிலேயே பாவாடை சித்தாடை கட்ட ஆரம்பித்து (பாவாடை சொக்காயுடன் மேடையில் தோன்றினால் 'இது'க்கென்ன தெரியும்?'' என்று சொல்லி விடுவார்களாம்! அதறகாக அப்போதே சித்தாடை கட்டிக் கொண்டு 'பெரிய மனுஷி" என்று நினைத்துக்கொண்டு விட்டார்!) காலக்ஷேபமும் செய்ய ஆரம்பித்து விட்டார். வெளியூர்களிலும் உள்ளூரிலுமாக அவரது கதைகளுக்கு நிறைய வரவேற்பிருக்கவே இரண்டாவது பாரத்துடன் பள்ளிப் படிப்புக்குப் 'புல்ஸ்டாப்' வைத்து விட்டார். கன்னடம், மராத்தி இருபாஷைகளும் அவருக்குத் தலைகீழ்ப்பாடம். ஆகவே இரண்டு பாஷைகளிலும் 'காலக்ஷேபம்' பண்ணி காசு பண்ணினார்! சுகன்யா, புரந்தரதாஸ் முதலிய அவரது கதைகளுக்கு மக்களிடம் மகத்தான வரவேற்பிருந்தது.

அவரது திக்விஜயங்களை முடித்துக் கொண்டு அவர் மைசூரின் தெற்குப்



பண்டரியின் குடும்பம்

பிரதேசங்களுக்கு வந்தார். அங்கே பண்டரியின் சகோதரர் 'ஆதர்ஸ நாடக சபா' என்ற நாடகக் கம்பெனியை ஆரம்பித்தார். அந்தக் காலத்தில் நாடகங்களில் பெண்கள் நடிக்க முற்படாததால், "அயன் ஸ்திரீ பார்ட்"டுக்கு ஒரு ஆண் நடிகர் தான் தேவையாக இருந்தது. அந்த வேஷத்தில் சோபிக்கக்கூடிய திறமை சிலரிடம்தான் இருந்தது. அவர்களுக்குப் பிரமாதமான வரவேற்பிருந்ததால் அவர்களது நடிப்புக்கு நிறைய தொகை கொடுகக வேண்டிய நிர்ப்பந்த மேற்பட்டது. ஆனல் பண்டரியின் சகோதரருக்கு இது பிடிக்கவில்லை. ஆகவே தன் சகோதரியையே ஸ்திரீபார்ட்டில் நடிக்க வைக்கத் தீர்மானித்து விட்டார். உறவினர்களே பாத்திரமேற்கும் போது இதில் தவறெதுவும் இல்லை என்ற அபிப்பிராயம் அவருக்கு. இதைப்பற்றி தகப்பனரிடம் சமாதானமாகச் சொல்லிப் பார்த்தார். ஆனல் அவர் அதற்குச் சம்மதிக்கவில்லை.

இதைக்கேட்டு அஞ்சி விடவில்லை அவர் மகனன இளஞ்சிங்கம். பரபரவென்று பண்டரியை இழுத்துக் கொண்டு போய் 'வேஷம் கட்டி' விட்டார்! அது முதல் சில நாட்கள் வரை தந்தை மகன் விரோதம் இருந்தது. ஆனல் பாசம் விடுமா? விரைவிலேயே தானும் அதே நாடகக் கம்பெனியில் நடிக்கவும் ஆரம்பித்தார்.

'கிழவன் கல்யாணம்,' 'விக்ரம சசிகலா,' 'கௌதம புத்தர்' முதலிய அவர்களது கன்னட நாடகங்களுக்கு அமோக வரவேற்பிருந்தது. நாடகங்களில் பண்டரியின் நடிப்பு பலராலும் பாராட்டப்பட்டது. அந்த நாடகங்களில் ஒன்றை, குறிப்பாக பண்டரியின் நடிப்பை, பிரபல வயலின் °மேதை டி. சௌடய்யா பார்க்க நேர்ந்தது. பண்டரியை தான் தயாரித்து வந்த 'வாணி' என்ற படத்தில் நடிக்கச் செய்து விட்டார். வாணியில் பண்டரிக்கு ஒரு சிறு பாத்திரம் கிடைத்தது. ஆனல் சினிமா உலகிலேயே 'தொழிலாளி நடிகை'யாக வேண்டுமென்ற ஆசை அவருக்கு அப்போது ஏற்படவில்லை. காலக்ஷேபம் செய்தே 'காலக்ஷேபம்' செய்து வந்தார் அவர்.

ஆனல் வம்புக்கு வராதவரை வலுச்சண்டைக்கு இழுக்கும் குணம் பலருக்கிருக்கும்போது பண்டரி அவர்களிடமிருந்து தப்ப முடியுமா என்ன?

(69-ம் பக்கம் பார்க்க)

ஜூபிடர்-லாவண்யா

மனிதன்

திரைக் கதை

காட்சி 1

சாம்பசிவம் ஒரு பெரிய பணக்காரர். அவர் மூத்த மனைவியின் மகள் சாவித்திரி அவரது உயிருக்குயிரானவள். பிரேமாவை இரண்டாந்தாரமாக மணக்கிறார் சாம்பசிவம். சாவித்திரிக்கும் சுகுமார் எம் பி பி.எஸ் ஸுக்கும் திருமணம் நடக்கிறது. பிரேமாவும் அவள் தம்பி சுரேயும் அவன் நண்பன் 'பிரண்'டும் வேலையாள் கஜேந்திரனும் விருந்தினர்களை பிரமாதமாக வரவேற்று உபசரிக்கிறார்கள்.

பிரேமா ஒரு விருந்தாளியிடம் ஐஸ் கிரீம் கொடுக்கிறாள்.

பிரே: சும்மா சாப்பிடுங்க. கல்யாண வீட்டுக்கு வந்தா சாப்பிடறதுக்குத் தயாரா யிருக்கணும்.

விருந்தாளி: போதும் பிரேமா! அளவில்லாதெ சாப்பிட்டா அப்புறம் சிரமமாயிடும்.

பிரே: ஒண்ணும் ஆகாது. மனையிலே இருக்கிறவரே ஒரு டாக்டர்! ஏன் கவலைப் படுறீங்க? கஜேந்திரா...!

பாத்திரங்கள் :

டி. கே. ஷண்முகம்	ராஜன்
டி. கே. பகவதி	டாக்டர் சுகுமார்
கே. ராமசாமி	பிரண்ட்
ஸி.வி.வி. பந்துலு	சாம்பசிவம்
மாதுரிதேவி	பிரேமா
கிருஷ்ணகுமாரி	சாவித்திரி
பண்டரிபாய்	சரஸா

கதை, வசனம் :

பா. ஆதிமூலம்,
நா. சோமசுந்தரன்

டைரக்ஷன் :

கே. ராம்நாத்

தடியான ஆள் கஜேந்திரன் வருகிறான்.

கஜே: ஸார்! கொஞ்சம் வழி விடுங்க. கொஞ்சம் வழி...

பிரண்ட்: கொஞ்சமில்லே, தாராளமாய் வழி விடுங்க.

பிரே: கஜேந்திரா! இவுங்களையெல்லாம் கவனி.

சுரே: ஏது! இவனைக் கவனிக்கவே எட்டு ஆள் தேவை.

அவன் 'பிரண்'டை யாவருக்கும் அறிமுகப்படுத்துகிறான்.

சுரே: இந்தப் பெரிய மனிதரைப் பற்றி உங்களுக்கு அறிமுகப்படுத்துவது எனது கடமை. அட சீ ..! இவருடைய குணாதிசயத்தைப்பற்றி விளக்கிச் சொல்வது அதிகப் பிரசங்கித்தனமாகும்.

பிர: கரெக்ட்! அப்படிச் சொன்னாலும் யாருக்கும் புரியாது.

சுரே: இவர் எங்கள் குடும்ப நண்பர், பெயர்...

பிர: ...பிரண்ட்!

சாம்: பிரேமா! உன் சிநேகிதிகள் எல்லாரும் வந்திருக்காங்க, அங்கே போய் அவங்களைக் கவனி.

விரு: சுரே! யாரப்பா இந்த ஜரிகைத் தலைப்பா, உன் பாதரா?

சுரே: போடா பூல்! என் ஸிஸ்டர்ஸ் ஹஸ்பெண்டு.

விரு: ஓ மை காட்!

சுரே: என்னடாது?

விரு: இல்லே, புருஷனைத் தகப்பனார்னு நினைச்சேன்.

பெண்கள் பகுதியில் வரவேற்கிறாள் பிரேமா.

பிரே: கமான் ரஞ்சனி,, நிர்மலா!

நிர்: ரஞ்சனி! மணப் பெண் சாவித்திரியா, இல்லே, பிரேமாவா?

ரஞ்: இதிலே என்னடி சந்தேகம்? உனக்கு புது மணப்பெண்ணு சாவித்திரி, என்னைக்கும் மணப் பெண்ணு தான் நம்ம பிரேமா.

பிரே: வாங்க போகலாம்.

கலியாண தடபுடல் தீர்ந்ததும் பிரேமாவிடம் மணமக்களின் படத்தைக் கிழவர் சாம்பசிவம் காட்டும் போது அவள் வருந்துகிறாள். அப்போது பால்கனியில் அந்த மணமக்கள் பேசிக் கொண்டிருக்கின்றனர், இன்பமாக.



சுகுமார்: என்ன அழகான சூழ்நிலை!

சாவித்திரி: பூத்துக் குலுங்கும் புஷ்பங்களும்......

சுகு: புது மணத்தை அள்ளிவரும் தென்றலும்...

சாவி: நம்மைப் பார்த்து மகிழும் பளிங்கு நிலாவும்....

சுகு: அதன் அழகைப் பழிக்கும் உன் களங்கமற்ற வதனமும் என்னை எங்கேயோ கொண்டு செல்கின்றது சாவித்திரி......!

அப்போது ஒரு தந்தியுடன் சாம்பசிவத்திடம் வருகின்றனர் சுரேயும் பிரண்டும்.

சுரே: அத்தான்! எக்ஸ்பிரஸ்தந்தி. மாப்பிள்ளை 'இம்மீடியட்டா' புறப்படணுமாம்.

சாம்: என்ன அது? அவன் யாருடா அவன், அப்படித் தந்தி கொடுத்தவன்? கலியாணமாகி ஒரு நாள்கூட ஆகல்லே.

சுரே: அவன்தான்...

பிர: ராணுவத் தலைமை அதிகாரி.

சாம்: உம்.... அங்கே இருந்தா? என்ன உத்தியோகன்டா அது?...சுரே! விடிஞ்சதும் ஒரு தந்தி மூலம் உத்தியோகத்தை ராஜினாமா பண்ணச் சொல்லு.

சுரே: ராஜினாமா தந்தி போனா ராணுவ முகாம்லே இருந்து ஒரு வாரண்ட் வரும்.

பிர: கரெக்ட்! ராணுவத்திலே சேர்றது நம்ம இஷ்டம். விலக்கறது அவுங்க இஷ்டம்.

பிரே: இதென்னடா தொல்லை? அப்போ, சுரே! போ, தந்தியைக் கொண்டு போயி மாப்பிள்ளைகிட்டே குடு.

சாம்: இரு இரு. கொஞ்சம் பொறு சுரே... குடுக்கலாம். பொழுது விடியட்டும்.

காட்சி 2

அந்தத் தந்தியைக் கண்டு தம்பதிகள் வருந்துகின்றனர். முக்கியமாக சாவித்திரி மிகவும் துயர மடைகிருள்.

சாவி: நீங்கள் போகத்தான் வேண்டுமா?

சுகு: அதிகாரியின் அழைப்பை அலட்சியம் செய்ய முடியாதே.

சாவி: எப்போ திரும்பி வருவீங்க?

சுகு; சீக்கிரம் வந்துவிடுவேன்,

சாவி: ரெண்டு நாள்லே வந்திடுவீங்களா?

சுகு: மெட்ராஸ் போனதும் விவரமாக லெட்டர் எழுதுகிறேன்.

சாவி; ஒரு வாரத்துக்குள்ளே வந்துடுவீங்களா?

சுகு: அங்கு போனதும் உடனே லீவுவாங்கிக் கொண்டு ஓடி வருவேன். சரிதானே.. ம்... போயி வரட்டுமா?

சாவி: போயிட்டு வாங்க... திரும்பி வரும்போது?

சுகு: என்ன வேண்டும் சாவித்திரி...சொல்லு!

சாவி: செத்துப் போனவர்களுக்கு உயிரைக் கொடுக்க முடியுமா?

சுகு: அதெப்படி முடியும் சாவித்திரி?

சாவி: அது முடியாவிட்டால்..... திரும்பி வந்து உங்க சாவித்திரியைப் பார்க்க முடியாது.

சுகு: சாவித்திரி...

சுரே அங்கே வருகிருன்.

சுரே: கார் ரெடி! நானும் பிரண்டும் உங்ககூட மதருஸ் வரைக்கும் வரப்போகிறேம்... கஜேந்திரா! இந்தப் பெட்டி படுக்கை யெல்லாம் காரிலே கொண்டுவை...



காட்சி 3

பிரேமா தன் சிநேகிதிகளுடன் பொருட்காட்சிக்குக் கிளம்புகிறாள். சாவித்திரியை சாம்பசிவம் போகச் சொல்லியும் அவள் மறுக்கவே பிரேமா போய் விடுகிறாள். அங்குள்ள, பல பொம்மைகள் அவள் உணர்ச்சியைக் கிளறி விடுகின்றன. அந்தக் காட்சியிலே அவளது பாலிய நண்பனும் சைத்ரீகனுமான ராஜனின் சித்திரசாலைக்குச் செல்கிறாள் பிரேமா.

பிரே: *ராஜன்!*

ராஜன்: *பிரேமா!*

பிரே: எவ்வளவு காலமாச்சு பாத்து? சௌக்கியமா?

ராஜ: ஏதோ இருக்கேன்...

பிரே: சரஸா எப்படியிருக்கா? கலியாணம் ஆயிட்டுதா?

ராஜ: கல்யாணமா? காசு இல்லாமெ கலியாணம் பண்ண முடியுமான்னு பாத்துக்கிட்டு இருக்கேன்.

பிரே: ஏன் இப்படிச் சொல்றே ராஜன்?

ராஜ: வேறெ எப்படிச் சொல்றது? நான் எழுதிய இந்த உயிரோவியங்களுக்கு எல்லாம் விலையில்லாத போது...பிரேமா! உனக்கு இந்தப் படங்கள்ளே ஏதாச்சும் பிடிக்குதா?.... ம்... வேண்டியதை எடுத்துக்கிட்டு போ. உன் பங்களாவையாவது அலங்கரிக்கட்டும் இந்த ஓவியங்கள்.

பிரே: ராஜன்! நாம் கட்டின மனக்கோட்டை இப்படித் தகர்ந்து போகும்னு நினைக்கவே இல்லே.

ராஜ: அதைப் பத்தியெல்லாம் என்ன இப்போ? காலம் நமக்குச் சாதகமா இல்லே. ஏதோ நீயாவது சுகமாயிருக்கியே, அதொரு திருப்தி எனக்கு.

(86-ம் பக்கம் பார்க்க)



ஆனந்தகுமார் புரொடக்ஷன்ஸ் ஆரம்ப விழா







★

மத்திய தணிக்கை போர்டின் அக்கிராசனரையும் தணிக்கை போர்டின் அங்கத்தினர்களையும் சந்திப்பதற்காக, தென்னிந்திய பில்ம் வர்த்தக சபையில் ஒரு விசேஷக் கூட்டம் சென்ற மாதம் 22-ம் தேதியன்று நடைபெற்றது. தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள் வர்த்தக சபை அங்கத்தினர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். தணிக்கை முறை பற்றி அன்றைய தினம் விவாதம் நிகழ்ந்தது. அன்று மாலை சென்னை 'உட்லண்ட்'ஸில் வர்த்தக சபையின் சார்பில் தணிக்கை அதிகாரிகளுக்கு ஒரு தேநீர் விருந்தளிக்கப்பட்டது.

★


ஆர். ஆர்.
வாழப்பிறந்தவள்?

வெளிவரவிருக்கும் படங்களிலிருந்து காட்சிகள்





அசோஸியேடட்
புரொட்யூஸர்களின்
பெயரிடப்படாத படம்.


அசோகா புரொடக்ஷன்ஸ்
பத்மினி

பரணி
சண்டி ராணி

ஷோபா பிலிம்ஸ்
பரோபகாரம்

சங்கீதா பிக்சர்ஸ்
நால்வர்

விநோதா
தேவதாஸ்

சந்திரா பிக்சர்ஸ்
ஜெனோவா
காட்சிகள்
PSR









சந்திரா பிக்சர்ஸார் எப். நாகூர் டைரக்ஷனில் நியூடோனில் தயாரித்திருக்கும் ஜெனோவா விரைவில் திரையிடப்பட விருக்கிறது. பிரபல நக்ஷத்திரங்களான எம். ஜி. ராமச்சந்திரன், பி. எஸ். வீரப்பா, எம். ஜி. சக்ரபாணி, பி. எஸ். சரோஜா ஆகியோர் நடித்திருக்கிறார்கள்.

89674
600 008

JL
M211, N421P
N53-11.9

ராமச்சந்திரனும் வீரப்பாவும் இருப்பதால் கத்திச் சண்டைகள் இருக்குமென்று எதிர்பார்க்கலாம். நடனங்களுக்கும் காதல் காட்சிகளுக்கும் குறைவிருக்காதாம். கிறிஸ்தவக் கதையான இது ஞானசௌந்தரியைப் போல் வெற்றி பெறும் என்று திடமாக ;நம்பலாம்.



பொ. ரெ. வைத்தியலிங்கம்,
சிங்கப்பூர்–8

திராவிட நாட்டில் அறிஞர் அண்ணாத்துரை, மு. கருணாநிதி ஆகியோரின் முழு விலாசத்தை தெரிவிக்கவும்?

'திராவிட நாட்'டில் வெளிவர வேண்டுமானால் அந்தப் பத்திரிகைக்கு அல்லவா கேள்வி அனுப்ப வேண்டும்!

எம். காதர், வடலிவிளை

எப். நாகூர் விலாசத்தைத் தெரிவிக்க முடியுமா?

2, மண்டபம் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை–10 என்பது அவரது விலாசம்.

வி. க. கனகசெல்வராஜா,
வவுனியா

ரஞ்சன். பிரேம்நாத். திலீப்குமார்' எம். ஜி. ராமச்சந்திரன் இவர்களில் வாட்சண்டை. நடிப்பு. அழகு இவற்றில் சிறந்தவர் யார்?

அழகில் ராமச்சந்திரன்; நடிப்பில் திலீப்குமார்; வாட் சண்டையில் ரஞ்சன்.

நான் இருமுறை மும் மூன்று கேள்விகள் கேட்டிருந்தேன். ஆனால் தாங்கள் ஒரு கேள்விக்கு மட்டும் பதிலளித்திருப்பது ஏன்?

நீங்கள் கேட்டிருந்த கேள்விக்கு இந்தப் பகுதியில் ஏற்கனவே பதிலளிக்கப்பட்டிருக்கும், அல்லது பதிலளிக்க லாயக்கற்றதாக இருந்திருக்கலாம்.

எஸ். என். எம்.,
பொள்ளாச்சி

ஸி. ஆர். ராஜகுமாரிக்கு கல்யாணமாகி விட்டதா?

அவருக்கு ஒரு குழந்தை இருக்கிறது!

அசு. அப்துல்ஹை, அரகண்டநல்லூர்

'ஆவாரா'வில் ராஜ்கபூரின் தந்தையும், தாத்தாவும் நடித்திருப்பதாகக் கேள்விப் பட்டேன். உண்மையா?

உண்மைதான்!

கலை உயர நிலை உயரும்; நிலை உயர என்ன உயரும்?

மதிப்பு!

பின்னணிப் பாடகி ஜிக்கியின் உண்மைப் பெயர் என்ன?

ஜி. கிருஷ்ணவேணி என்பது.

ரசிகர்களாகிய நாங்கள் பொறுமைசாலிகள் என்பது என் அபிப்பிராயம்; உங்கள அபிப்பிராயம்?

'நல்ல படம் வரும், வரும்' என்று படத்திற்குப் படம் எதிர்பார்க்கும் நீங்கள் நிச்சயம் பூமிதேவியைவிடப் பொறுமைசாலிகள்தான்!

வி. சங்கரன், திருவனந்தபுரம்

'பேசும் படம்' செய்திச் சுருளில் பணககாரியைப்பற்றி எழுதுகையில அன்னா கரீனாவை எழுதியவர் ரஷ்யமேதை டால்ஸ்டாய் என்று குறிப்பிட்டிருக்கிறீர். அவா பிரான்ஸ் தேசததைச் சேர்ந்தவராயிற்றே! இது தவறல்லவா?

எது தவறு? மாப்பஸானை நினைவில் வைத்துக் கொண்டு நீர் கேட்டிருக்கும் இந்தக் கேள்விதானே?

எஸ். கிருஷ்ணன்,
எட்டியாந்தட்டை

மற்ற பத்திரிகைகள் சினிமா நக்ஷத்திரங்களைப்பற்றி தாறுமாறாக எழுதுகின்றன. 'பேசும் பட'த்தில் அவர்களைப் புகழ்ந்து எழுதப்படுகிறது. இவற்றில் நாங்கள் எதை நம்புவது?

பிறர் மனம் புண்படாத வகையில், ஆனால் உண்மையை வெளியிடுவதுதான் 'பேசும் பட'த்தின் கொள்கையாக இருந்து வருகின்றது.

எஸ். வெள்ளசாமி, நரிமுடுக்கி

'என் வீடு' புகழ் வித்தியாவதி எந்த ஜாதியைச் சேர்ந்தவர், அவரது வாழ்க்கை வரலாறைச் சுருக்கமாகக் கூற முடியுமா?

அம்புஜம் என்ற இயற் பெயரைக் கொண்ட வித்தியாவதி பிராமண வகுப்பைச் சேர்ந்தவர். விமான நிலையத்தில் ஏர்–ஹோஸ்டஸாக வேலை பார்த்துவந்த அவர் 'என் வீடு' படத்தின் மூலம் படவுலகில் பிரவேசித்தார்.

பி. கே. அமீர்ஹம்ஸ,
சேதுக்குவாய்த்தான்

பிரபல பின்னணி பாடகர் கண்டசாலா என்ன செய்கிறார்?

பின்னணியில் பாடுவதுடன் சங்கீத டைரக்ஷனும் செய்கிறார். தற்போது சொந்தத்தில் படமும் தயாரித்து வருகிறார்.

கே. பி. சிவனு, கொழும்பு–3

என்னிடம் 128 பேசும் படங்கள் இருக்கின்றன. இதை எல்லாம் என்ன செய்வது?

அழகாக பைண்டு செய்து ரகசியமாக வைத்துக் கொள்ளும். யாருக்காவது தெரிந்தால் கிளப்பிக் கொண்டு போய் விடுவார்கள்!

ஏ. மங்களராஜன்,
கொழும்பு–2

சினிமா பத்திரிகைகளில் தங்கள் பத்திரிகை முன்னேறுகின்றது...?

எதற்காக என்னை காக்காய் பிடிக்கிறீர்?

த. க. நாதன், இலங்கை

நடன ஆசிரியர் ராமய்யா பிள்ளையின் விலாசம் என்ன?

பிருந்தாவனம் தெரு, மயிலாப்பூர், சென்னை–4 என்பது அவரது விலாசம். போய்ப்பாரும்–! சலங்கையொலி உம்மை எதிர்கொண்டழைக்கும்!

எஸ். ராமசாமி, டிக்கோயா

பிறர் ரகசியத்தைக் காட்டுத் தீ போல் பரவச் செய்யும் பெண்கள் தங்கள் ரகசியத்தை மாத்திரம் வெளியில சொல்ல குலைந்து நிற்பதேன்?

இல்லாவிட்டால் ஊர்வம்பை அளக்க அவர்களுக்கு வாய்பூட்டு போட்டதாக ஆகிவிடுமே!

சி. கே. நடராஜன், கோவை

இன்றைய நிலையில் மக்களுக்கு சமூகப்படம் தேவையா, அல்லது புராணப்படம் தேவையா?

எந்தக் கட்சி சார்பிலும் பிரசார மற்ற முன்னேற்ற கருத்துக்கள் கொண்ட சமூகப்படங்கள்தான் தேவை.

தற்போது கற்பனைக்கும், கதாசிரியர்களுக்கும் சம்பந்தமில்லை என்று நான்கூறுவதை என்னுடைய நண்பன் நம்ப மறுக்கிறானே, ஏன்?

உமது கற்பனையை நம்பக்கூடிய அளவுக்கு அவரது கற்பனை ஓடாததுதான்!

து. பிச்சை, மோவூர் கிராமம்

தங்கள் காரியாலயத்தில் ஜூன் 1950 'பேசும் படம்' இதழ் கிடைக்குமா?

கிடைக்காது.

திரைக்கதை—வசனகர்த்தா கருணாநிதி ஒரு படத்திற்கு வசனமெழுத எவ்வளவு பணம் வாங்குகிறார்?

தனது தேவைக்கு ஏற்ப படமுதலாளிகளால் கொடுக்க முடிந்த அளவுக்கு!

வி. பொ. ரங்கன், சென்னை-12

அநேக குடும்பத்திலும், சமூகப் படங்களிலும் புருஷனை மனைவிமார் பெயரிட்டு அழைப்பது சரிதானா?

கணவனது பெயர் மறந்துபோய் விடக்கூடாதல்லவா? அதற்காகத் தான்!

லலிதா—பத்மினி வீட்டு விலாசம் தேவை?

உமது கடிதத்திற்கோ, அல்லது உம்மிடமேயோ பதில் சொல்லுமளவுக்கு 'நேரம்' அவர்களுக்கு இடம் கொடுத்து வைக்க வில்லையே!

என். ஏ. எஸ்.,
கோட்டக்குப்பம்

சினிமா உலகில் பழிக்குப்பழி வாங்கலாமா?

அப்படியானால் சினிமா பார்க்காமல் உம்மால் இருக்கமுடியுமா?

ஜி. எஸ். பாண்டியன்,
அவிசாவெல்

இளமையில் ஏற்படும் காதல் பருவவயதில்......

இரும். இரும்! பருவ வயதில் ஏற்படுவதுதான் காதல். நீர் என்னமோ புதிதாகச் சொல்கிறீரே!

என். கே. எ., பெருந்துறை

ராகினியாரின் தர்மதேவதா லலிதா. பத்மினி சகோதரிகளின் சொந்தப்படமா?

அல்ல. டைரக்டர் பி. புல்லய்யாவின் சொந்தப்படம்.

பண்டரிபாய், பி. கே. சரஸ்வதி, ஸ்ரீரஞ்சனி இம்மூவரில் அழகிலும் நடிப்பிலும் சிறந்தவர் யார்?

அழகில் சரஸ்வதியையும் பண்டரிபாயை நடிப்பிலும் சொல்லலாம்.

எல். வெங்கடாசலம்,
நாமக்கல்

டைரக்டர் டி. ஆர். சுந்தரத்தையும் டி. ஆர். ராஜகுமாரியையும் எங்கு சந்திக்க முடியும்?

நீர் போய்ப் பார்க்கும்போது அவர்கள் இருக்க வேண்டுமே! ஆகையால் உங்கள் ஊருக்கு அவர்கள் வரும்போது பார்த்து விடுவதுதான் நல்லது!

எம். சுப்பிரமணியம், சென்னை

ஸ்டுடியோவில் நடக்கும் ஷூட்டிங்குகளை நான் பார்க்கும்படி செய்ய உம்மால் ஏதாவது வழி செய்ய முடியுமா?

'பேசும் பட'த்தில் 'ஸ்டுடியோ விஜயம்' பகுதி இதற்காகத்தானே புகைப்படங்களுடன் வெளியிடப் படுகிறது?

பி. எஸ். சுந்தரம், இலங்கை

எம். கே. டி. பாகவதர் நடித்து வரும் புது வாழ்வு படம் நாலாயிரம் அடிகள் சுடப்பட்டு விட்டதாக வதந்தி. அது உண்மையா?

தவறு! பத்தாயிரம் அடிகள் வரை வளர்ந்திருக்கிறது!

அ. ஆதிலிங்கம், கண்டி

பராசக்தியில் நொண்டியாக நடித்த ராஜேந்திரனின் கால் நன்றாக 'மேக-அப்' செய்யப்படவில்லை...?

உமது விமர்சனத்துக்கு கூவி நேஷனல் பிக்சர்ஸாரைக் கேட்கலாம்!

விண்மீன், குருநாகலை

படமுதலாளிகளுக்கும் பத்திரிகை ஆசிரியர்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

அறிவு.

எஸ். பி. குட்டி, கோழிக்கோடு

ஜாவர் சீதாராமன் ஐ. ஸி எஸ். பட்டதாரி என்பது உண்மைதானா?

சீதாராமன் ஒரு ஐ. சி. எஸ். காரர் அல்ல.

எஸ். ஈ. முகம்மதலி, இலங்கை

நம் நடிகை, நடிகர்களில் யார் யார சொந்தக் குரலில் பாடுகிருர் கள்?

டி. ஆர். ராஜகுமாரி, பானுமதி, பாகவதர், மகாலிங்கம் போன்ற ஒரு சிலர்தான்.

டி. ஆர். பத்தசுவாமி, கொழும்பு

கல்யாணத்திற்கு முன்பு காதலா அல்லது கல்யாணம் முடிந்த பிறகு காதல் பண்ணுவது நல்லதா?

காதல் கொண்ட இரு இளம் உள்ளங்களின் தாம்பத்திய சேர்க்கை பெரும்பாலும் நடப்பதில்லே. ஆகவே கல்யாணம் செய்து கொண்ட பின் காதலிப்பதுதான் சிறந்தது!

பி. கணேசன், குருணுக்கல்

டி. ஆர். மகாலிங்கத்திற்கு சொந்த ஸ்டுடியோ இருக்கிறதா?

இல்லே. படக்கம்பெனிதான் உள்ளது.

யோ. அருள்பிரகாசம், கொழும்பு-13

பின்னணி பாடகிகளான வஸந்தகுமாரி, பட்டம்மாள், பெரிய நாயகி இவர்களில் அதிகப் புகழ் வாய்ந்தவர் யார்?

தற்போது எம். எல். வஸந்தகுமாரி பின்னணி பாடகிகளில் முன்னணியில் நிற்கிருர்.

என். ஏ. சதக்கதுல்லா, கோட்டக்குப்பம்

ஒரு நடிகை தன் வாழ்க்கையில் சதா என்ன நினைப்பாள்?

பணங்கொடுக்கும் நடிப்பைப்பற்றி!

ஆர். சஞ்சீவி, பூனு-3

'பேசும் பட'த்தில் பட விமர்சனம் ஏன வருவதில்லே?

வழக்கமான அந்த அம்சத்தை மலரில் வெளியிட்டு விடுகிருேமே! இதனுல இதர பகுதிகளுக்கு மாதாந்திர இதழில் அதிக பக்கங்கள் அளிக்க முடிகிறதல்லவா?

வாசகர்கள் நட்சத்திரங்களின் விலாசங்களே அறிவதன் நோக்க மென்ன?

தபால் இலாக்கா பிழைக்க!

எம். குணரத்தின, இலங்கை

நான் ஒரு சினிமா நடிகையை... மணம் செய்து கொள்ள முடிவு செய்திருக்கிறேன்...?

உங்கள் வரையில் விஷயம் தீர்மானமாகிவிட்டதால் பாதி கல்யாணம் முடிந்தமாதிரிதான். ஆனல் அவர் சம்மதிக்க வேண்டுமே!

ஜூபிடர் பிரியன், மதுரை

'மங்களா'வில் நம்ம பானுமதி ஒரு கட்டத்தில் விளக்கை அணைக்கிருரே, ஏன்?

அந்தக் காட்சி ஒளிமங்கி (பேட வுட்) மறைவதற்காக!

ஆந்திர ராஜ்யம் பிரிந்தால் சென்னேயிலுள்ள ஆந்திர நக்ஷத்திரங்களெல்லாம் என்ன செய்வார்கள்?

தமிழ் மொழியை மேலும் சிரத்தையோடு கற்பார்கள்!

சாவித்திரி 1937-ம் வருஷம் நவம்பர் மாதம் பிறந்தார். மூன்ருவது பாரம் வரை படித்துள்ளார், என்று 'பேசும் பட'த்தில் வெளியாகி யிருக்கிறது. ஆனல் மற்ருெரு பத்திரிகையிலோ அவர் 1936-ம் வருஷம் ஜனவரி மாதம் பிறந்தவரென்றும் இரண்டாவது பாரத்தோடு படிப்பை நிறுத்தி விட்டார் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் எது சரி?

சாவித்திரி நேரில் கூறிய விவரங்களேயே 'பேசும் பட'த்தில் வெளியிட்டிருக்கிருேம். ஆகவே விஷயத்தை தீர்மானிக்க வேண்டியது உம்முடைய பொறுப்புதான்.

எம். பெருமாள், தர்மபுரி

எம். வி. ராஜம்மா ஏதாவது படங்களில் நடித்து வருகிருரா?

சொசைட்டி பிக்சர்ஸ் உலகம், ஜம்பு புரொடக்ஷன்ஸ் மனேவியின் மகன் முதலிய படங்களில் அவர் நடித்து வருகிருர்.

"நான் ரஸித்த காட்சி"



("சினிமா பார்க்கும்போது ஜனங்கள் ஆபாசத்தைத்தான் விரும்புகிறார்கள். மாயாஜாலப் படங்களும், ஸ்டண்டுகளும்தான் ஓடுகின்றன. அரை நிர்வாண நடனம் இல்லாத படங்கள் தோல்வியடைகின்றன" என்றெல்லாம் கூறும் படமுதலாளிகளை இந்தப் பகுதியைக் கவனமாகப் படிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறோம். ஜனங்கள் எதை ரஸிக்கிறார்கள்; எதைப் பாராட்டுகிறார்கள் என்று தெரிந்து கொள்ள இப்பகுதி மிகவும் உபயோகமாக அமைந்திருக்கிறது-ஆசிரியர்.)

* குமாஸ்தா

ஒரு குமாஸ்தாவை நாம் மனதில் கற்பனை செய்து பார்த்தால் நம் கண் முன் தோன்றுவது ஒருகோட்டு, மைகூடு, பேனா. மைக்கூட்டையும், பேனாவையும் பின்னணியாக வைத்து அதில் தலைப்புகளைக் காட்டுவது மிக அருமையாக இருக்கிறது.

எஸ். ராஜாராமன்.
சென்னை-5.

* மனிதன்

கற்பிழந்த காரிகை சாவித்திரி ராஜனிடம் தன் நிலைபற்றிக் கூறிக் கதறும்போது ராஜன் மனமுடைந்து போகிறான். அப்போது அவள், 'எனக்கு ஒரு உதவி செய்வீர்களா?' என்று கேட்கிறாள். அவளுக்காகத் தன் உயிரையும் பணயம் வைக்க அவன் தயாராகும்போது, தன்னைப் போல் வேறு எந்தப் பெண்ணையும் பாழ்படுத்தாம லிருப்பதாக உறுதி கூறும்படிக் கேட்கும்போது நமது உள்ளம் குலுங்குகிறது, அதிர்ச்சியின் வேகத்தால். சரியான பாடம் கற்பிக்கும் சீரிய காட்சி.

ஆர். பிரசாத்.
மதுரை.

* வாழப் பிறந்தவள்

சுமதி முதலியோர் சங்கத்தில் வைத்த ராஜாவின் படம் கீழே விழுந்து உடைந்ததும் மன நிம்மதியின்றி வீடு வந்து சேரும் சமயம்; அறையினுள், மேஜையி லிருந்து ஜாடியும் தவறுதலாகக் கீழே விழுந்து விடுகிறது. அப்போது மல்லியை (கீதா) நினைத்து வருத்தப் பட்டுக் கொண்டிருக்கும் ராஜா கோபம் கொண்டு "பார்த்து வரப் படாது" என்று சுமதியைச் சத்தம் போடுகிறான். ஏற்கனவே மன நிம்மதி யில்லாத சுமதி இதைக் கேட்டதும் படுக்கையில் விழுகிறாள். ராஜா திடீரென அதை யோசிக்க தன் மன ஆறுதலுக்காகவும், அவன் மன ஆறுதலுக்காகவும் வீணையை எடுத்துப்பாடச் சொல்லுகிறான். மன ஆறுதலுக்காகப் பாடப் போகும் சுமதி, ராஜா மல்லியை நேசிப்பது தாங்காது, மேலும் அவள் உள்ளக் குமுறல் அதிகரிக்கும்படியாகப் பாட்டு பாடுகிறாள். மன ஆறுதலுக்கே பாடியும் அவர்களிருவருக்கும் உள்ளக் குமுறல் தான் காது இருவரும் கண்ணீர் வடிக்கும் போது, அவர்களிருவரின் கதியையும், கண்ணீரையும் காணும் நமது மனமும் படாதபாடு படுவதுமல்லாமல் நம்மையறியாமலேயே கண்ணீர் வடிக்கிறோம்.

'ஒயிட் லென்ஸ்'.
பாளையங்கோட்டை.

மனிதன்

ராஜன் தன் குற்ற முணர்ந்துமனம் வெறுத்துக் கால் சென்ற வழியே செல்லும்போது, டாக்டர் சுகுமார

*இக்குறியிடப்பட்ட மூன்று கடிதங்களுக்கும் தலைக்கு ஐந்து ரூபாய் வீதம் பரிசளிக்கப்பட்டிருக்கிறது.

தம்பி: அண்ணு! பரீக்ஷையைப் பத்தி நீ ஏன கவலைப்படுகிருய்? மதனிக்கு உடம்பு சுகமில்லைன்னு ஒரு தந்தி அடிக்கச் சொல்லு. பேசாமே மாமியார் வீட்டுக்குக் கெளம்பிப் போய், ஜாலியா ஒரு வாரம் சினிமாப் பார்த்துட்டுவா.

னின் காரில் அகப்பட்டுக் காலை இழக்கிருன். அவன் டாக்டர் விருப்பப்படி நடந்த விவரங்களைச் சொல்லிக் கொண்டே வரும்போது டாக்டர் தன் மனைவி சாவித்திரிதான் அவனுல் கற்பழிக்கப்பட்டவள் என்பதறிந்து மார்பைப் பிடித்துக் கொண்டு தவிக்கிருர். அதைக் கண்டு ராஜன் அவர்தான் சாவித்திரியின் கணவர் என்று அறிந்து துடி துடித்துக் கூவிக் கதறித் தன்னையே மண்டையிலடித்துக் கொண்டு மாடியிலிருந்து கீழே விழுந்து மாளுகிருன். கண்களில் நீர் சொரிய வைக்கும் அற்புதமான கட்டம்.

'குபேரன்'.
சென்னை.

சாவித்திரியிடம் ஓடி வருகிருன் ராஜன் அவனுல் களங்கப்படுத்தப் பட்ட அவள் அனலைக் கக்குகிருள் அவன் மீது. தவறை உணருகிருன். ஆயினும் எரிமலையெனக் குமுறும் அவள் முன் அவன் பேசச் சக்தியற்றுப் போகிருன். அவளது நிலை எதுவோ அதுவே அவன் நிலையும். ஆனுல் அவள் மீதுதான் யாருக்கும், ஏன் அவனுக்கேகூட—அனுதாபம் ஏற்படுகிறது. பாவம், இருவரும் சேர்ந்து மனமொப்பி செய்த காரியமானுலும் சமூகம் அவளைப் பழிவாங்கும் விதத்திலே, அவள் வயிற்றிலேதான் கரு வளருகிறது. பெண்களுக்கு ஒரு எச்சரிக்கை!

வீ. ஸம்பத்,
காஞ்சிபுரம்.

பிரேமா கிழவனை மணந்து, உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்ட ஒரு பதித் துரோகி. தன் பழைய காதலன் ராஜனை வீட்டோடு வைத்துக் கொண்டு அவன் மூலம் இன்பம் பெறத் தீர்மானித்து அழைத்து வருகிருள். ஒரு நாள் யாவரையும் நடனக் கச்சேரிக்கு அனுப்பிவிட்டு அவனிடம் வருகிருள். அவள் உள்ள மறிந்த ராஜன் காபி வேண்டுமென்று சொல்லி அவளை அனுப்பிவிட்டு ஓடி விடுகிருன். அவள் காபியுடன் வந்து ஏமாறுவது வேடிக்கையாக இருக்கிறது.

ஆர். குமாரசாமி,
சென்னை.

தன் தவறையுணர்ந்த அந்த மனிதனுக்கு மன்னிப்புக் கொடுக்கிருர் அந்த ராணுவ அதிகாரி. ஆனுல் பக்கத்திலிருக்கும் மனிதரோ 'இதுபோல் நெறி தவறியவர்களுக்கு மன்னிப்புக் கொடுக்கக் கூடாது. மரணம்தான் தக்க தண்டனை' என்று கூறுகிருர். ஆனுல் டாக்டர் சுகுமார் மட்டும், 'எவனெருவன் தவறையுணர்ந்து மன்னிப்புக்கோருகிருனே அவனுக்கு தண்டனை மரணமல்ல; மன்னிப்புதான்! மன்னிக்கும் தன்மையுள்ளவனே மனிதன்' என்பது மனிதத் தன்மையின் உயர்ந்த பண்பை விளக்குகிறது.

ஜி. அமிர்தலிங்கம்,
கும்பகோணம்.

சாவித்திரி தன் அண்ணனுல் கற்பழிக்கப்பட்டு கருத்தரித்து விட்டதைத் தெரிந்த சரஸா, தன் அண்ணனிடம் வந்து, "நீ ஒரு மனிதன் தானு? தாரத்திற்கும், சகோதரத்வத்திற்கும் வித்தியாசமில்லையா? நீ படித்த கலையின் பேரால் கேட்கி

றேன். சோற்றுக்குக்கூட வழியில்லாமல் திரிந்த நமக்கு வழிகாட்டியவரிடமே கன்னக்கோல் வைப்பதா? எது முக்கியம்? நம் கலை முக்கியமா?'' என்று, உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்த ஓவியன் ராஜனை, ஆத்திரத்துடன் கேட்பது, காமாந்தகாரனைத் திருத்த சிறந்த எடுத்துக்காட்டு.

எம். பி. மூர்த்தி,
பாளையங்கோட்டை.

''பெண்ணே உலகின்
கண்ணே—குலப்
பெருமையை உதறிய
பின்னே—நீ
கண்ணிய வாழ்வினை
எண்ணிடலாமோ?''

என்று பாடும் போது சாவித்திரி தன் தவறுதலை நினைத்து வருந்துகிருள். அவள் தன் கணவன் படத்தைப் பார்த்து வெருண்டு பின் செல்கிருள். அந்த அறையில் உள்ள கற்பரசிகளின் படங்களைப் பார்க்கப் பார்க்க சாவித்திரிக்கு தன் குற்றம் நிரம்பக் கொடியது என்று படுகிறது. அவள் அதை நன்கு உணர்ந்து அழுது தீர்க்கிருள். இந்த இடத்தில் நம்மையும் அறியாமல் அவள்மேல் நமக்குப் பச்சாதாபம் ஏற்படுகிறது.

ஒழுக்கம் தவறிய பெண்ணின் அமைதியற்ற மனநிலையின் பிரதிபலிப்பு.

எஸ். பாலசுப்ரமணியம்,
பாண்டிச்சேரி.

தன் காரில் மோதி காலை இழந்த ஓவியன் ராஜனை உயிருக்குயிராக நேசித்து வைத்தியம் பார்க்கும் டாக்டர் சுகுமார், அவன் ஓரளவு குணம் பெற்ற பிறகு அவன் வரலாற்றைக் கேட்கிருர். அவன் தான் ஒரு நயவஞ்சகன், காமாந்தகாரன், துரோகி என்பனவற்றை வெளிப்படுத்தி 'மனித'த் தன்மையற்றவன் என்பதைக் கூறி விடுகிருன். தொடர்ந்து அவனை வற்புறுத்திக் கேட்கவும், அவன் கூறிய உண்மை டாக்டரைக் கதிகலங்கச் செய்கிறது. அந்தக் கிராதகனும் அவர் நிலையை உணர்ந்து அங்கிருந்து போய் விட நினைத்துக் கதறிய போதும்கூட மனிதனின் உயர்ந்த பண்பை வெளிப்படுத்தும் பாணியில் ''நண்பரே! நீர் போகக் கூடாது' என்று தடுக்கிருர். இக் கட்டம் மனதை உருக்கும் ரஸமான காட்சி.

ஜெயராஜ்.
கோயம்புத்தூர்.

குமாஸ்தா

உடல் நலிவுற்ற நிலையிலும் தன் மனைவி சுசீலாவிடம் வலிய வந்து, தன் விருப்பத்திற் கிணங்க வைத்து, அந்த இன்ப அதிர்ச்சி காரணமாக மறுதினம் பிணமாகிருன் ரவி. சுசீலா அவமானமும் துயரமும் அடைகிருள். அவளைச் சமூகம் விபசாரி என்று தூற்றும்போது நம் உள்ளம் வெடித்து விடும் போலாகி விடுகிறது.

எம். தேவி மீனுக்ஷி,
மதுரை.

'மாடி வீடு வேண்டாம். கார் வேண்டாம், நகை நட்டு வேண்டாம். ஒரு நாள்...ஒரே ஒரு நாளாவது வறுமையின்றி ஆனந்தமாகக் கழியக் கூடாதா?' என்கிருர் ரங்கநாதன். நமக்கு மயிர்க்கூச்சலெடுக்கிறது அந்தக் காட்சியிலே.

டி. தியாகேஸ்வரன்,
மஞ்சக்குப்பம்.

வாழை இலை முள் மேலே பட்டாலும் முள் வாழை இலைமேலே பட்டாலும் ஆபத்து வாழை இலைக்குத்தான். பெண்கள் வாழ்க்கை அப்படிப்பட்டது,என்று பெண்களாகிய எங்களை உணரச் செய்கிறது 'குமாஸ்தா'வில் வரும் காட்சி.

டி. வெங்கடலக்ஷ்மி,
கோயம்புத்தூர்.

பணக்காரனுன ரவி தன் காதலி சுசீலாவை அவனுடைய காரில் அவள் வீடு கொண்டு சேர்க்கிருன். அவள் அண்ணன்-குமாஸ்தா ரங்கநாதம் இதைக் கண்டு கலக்க

"இப்ப வர்ற சில படங்கள் மாதிரி கடியாரமும் வந்த உடனே நின்னு போச்சே!"

மடைந்து தங்கையைக் கண்டிக்கிறார். சமாதானம் சொல்ல வருகிறான் ரவி.

"அப்பனே! நீ பணக்காரன். நீ செய்வதை உலகம் கண்டு ஏசாது. நீ எது வேண்டுமானாலும் செய்யலாம்; செய்துவிட்டு சொல்லலாம். ஆனால் நாங்கள் ஏதாவது சமூகத்திற்கு விரோதமாக, நியாயத்திற்குக் கட்டுப்பட்டு நடந்தால்கூட எங்களை சமூகம் ஏசாமல் விடாது. ஊர் சிரிக்கும்" என ரங்கநாதம் ரவிக்குக் கூறுகிறார். பணம் இல்லாமல் மனிதன் வாழ்வதை சமூகம் எப்படி வெறுக்கிறது என்பதை எடுத்துக் காட்டும் உண்மை பொருந்திய ரஸிக்கக்கூடிய கட்டம்.

டி. ஆர். ஜி. ராவ்,
சென்னை–3.

குமாஸ்தாவான தந்தை தன் குழந்தையைக் கொன்ற குற்றத்துக்காக சிறையிலிருக்கிறார். மகன் படித்து பாஸ் செய்து குமாஸ்தா வேலை கிடைத்தவுடன் தந்தையை வந்து சிறையிலே காண்கிறான். குமாஸ்தாவான மகனைப் பார்த்து தந்தை சொல்கிறார்: "நீ ஒரு குமாஸ்தா—உன் தந்தை ஒரு குமாஸ்தா—என் தந்தை ஒரு குமாஸ்தா—இப்படியாக குமாஸ்தா பரம்பரையாகி விட்டது." இப்படி தந்தையாக வரும் நாகய்யா கூறும் போது உணர்ச்சி நமது உள்ளத்தைத் தொடுகிறது.

எஸ் கல்யாணசுந்தரம்,
திண்டுக்கல்.

விதவை சுசீலாவின் மகள் ராணிக்கும் சங்கருக்கும் திருமணம் நடைபெறுகிறது. அப்போது சுசீலாவை விபசாரி என்று கூறி மணத்தைத் தடுக்க முயற்சிக்கின்றனர் அவள் வேட்டகத்தோர். சுசீலாவின் சகோதரன் கோபு லக்ஷ ரூபாய் கொடுப்பதாகக் கூறியும் அந்த மணம் தடைப்படும் போல்தானிருக்கிறது. நல்ல வேளையாக சுசீலாவின் கணவனது நண்பன் டைரி ஒன்றைக் காண்பிக்கிறான். தான் தன் மனைவியுடன் கூடியிருந்ததை அவனே எழுதி வைத்திருப்பதறிந்த பின் யாவரும் சம்மதித்து மணம் நடக்கிறது. உயரிய காட்சி இது.

ஜி. சிதாபதி,
மதுராந்தகம்.

நீண்டகாலத்திற்குப் பிறகு சிறையிலிருந்து விடுதலை பெறுகிறான் குமாஸ்தா ரங்கநாதம். சிறைக் காவலாளி அவரிடம் விடுதலை 'அடைஞ்சுட்டீங்களா?' என்று கேட்கிறான். 'இல்லையப்பா'. சின்ன 'ஜெயில்லேயிருந்து பெரிய ஜெயிலுக்குப் போறேன்' என்கிறார், ரங்கநாதம்.

கே. ராமச்சந்திரன்,
பாளையங்கோட்டை.

தன் மகள் முன்பின் தெரியாத வாலிபனுடன் திரிவதைக் கண்ட சுசீலாவின் நினைவு இறந்த காலத்தை நோக்கிச் செல்கிறது. 'அம்மா! முள்மேல் வாழை இலை பட்டாலும் வாழை இலைமேல் முள் பட்டாலும் இலைதான் கெடுகிறது. உலகத்தில் பெண்ணாகப் பிறந்தாலே அப்படித்தானம்மா!' என்று, தன் மகளுக்குப் புத்தி சொல்லும்போது ரவிக்கு மனதில் ஏதோ சங்கடமாக இருக்கிறது.

வி. கல்யாண கிருஷ்ணன்,
சென்னை.

மரப்பாச்சிக்குக் கல்யாணம் செய்து மகிழும் விளையாட்டுப் பருவத்திலே ராஜாவுக்கும் கீதாவுக்கும் கல்யாணம் நடக்கிறது. பாவம்! கல்யாணம் ஆகியும் கன்னியாக, கணவன் இருந்தும் கைம்பெண்ணாகக் காலம் ஓட்டுகிருள் கீதா இதைக்கண்டு பெற்ற மனம் துடிக்கிறது. அவள் தந்தை அவள் கணவனை அழைத்து வருவதாகப் பணத்துடன் புறப்படுகிருர். கீதாவுக்கு ஒரே ஆனந்தம். இரவிலே கீதாவுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. 'ஏம்மா! அத்தான் சிவப்பா, கருப்பா? அத்தான் முதல்லே பேசுவாரா? நான் முதல்லே பேசணுமா? அத்தானுக்கு தோசை பிடிக்குமா? இட்லி பிடிக்குமா?'' இப்படி அடுக்கடுக்கான கேள்விகளை இடையிடையே அம்மாவை எழுப்பி கீதா கேட்கும் பொழுது ஓர் கன்னிப் பெண்ணின் உண்மையான உள்ளப் பிரதிபலிப்பைக் கண்டு நமக்குச் சிரிப்புத்தான் வருகிறது.

ரா. கணேசன்,

கோயம்புத்தூர்.

பிச்சைக்காரிகளுக்கு அரிசிபோட வந்த நிர்மலா, கீதா அங்கு நிற்பதைக் கண்டு அவளுக்கும் அரிசி போட வருகிருள். ஆனல் கீதா தான் வயிற்றுப் பசியைத் தீர்த்துக் கொள்ள வரவில்லை யென்றும் பணத்தினல் திருப்தி செய்ய முடியாத மாமனுரைத் தன் குணத்தினுலாவது திருப்தி செய்ய வந்திருப்பதாகச் சொல்லவும் 'நீ இந்த வீட்டு மருமகளா?' என்று நிர்மலா ஆச்சரியப் படுகிருள். இக்காட்சி உணர்ச்சி ததும்பச் சித்தரிக்கப் பட்டிருக்கிறது.

மாலதி,

கடலூர்.

மண்டையில் கட்டுடன் படுத்திருக்கும் மல்லி (கீதா)யின் அறைக்கு வந்து கதவைத் தட்டுகிருன் ராஜா. சுமதிக்காகத் தன் வாழ்வைத் தியாகம் செய்யத் துணிந்த மல்லி கதவைத் திறக்க மறுக்கிருள். ஆனல் அவன் ஜன்னலில் மோதி மண்டையில் ரத்தம் கொட்டவே, கணவனுக்காக ஓடி சிசுருஷை செய்கிருள். மனமுருக்கும் காட்சி.

எஸ். செளந்தரவல்லி,

சென்னை.

அப்பா மாமனுர் வீட்டுக்குச் சென்று தன் கணவனை அழைத்து வருவார். தான் அங்கே போக வேண்டும் என்றெல்லாம் ஆசைக் கோட்டைகள் கட்டிய கீதாவுக்குத் தூக்கம் வரவில்லை. 'அம்மா...யம்மோவ் என்றெல்லாம் அடிக்கடி எழுப்பி, அவர் சிவப்பா, 'கருப்பா? இட்டிலி பிடிக்குமா, தோசை பிடிக்குமா' என்றெல்லாம் கேட்டுத் தொந்தரவு செய்யும்போது 'இந்தப் பெண்ணுக்குத்தான் எவ்வளவு ஆசை!' என்று வியக்கிறோம்.

சி. கோபால்,

காஞ்சிபுரம்.

தன் மகளை மருமகனேடு சேர்க்க சம்பந்தி வீடு சென்று அவமானப் பட்டுத் திரும்பும் சதாசிவம், தன் மகளிடம் ஆவேசத்துடன் கதறும் போது நம் மனம் நைந்து கரைந்து போய் விடுகிறது.

ந. சுந்தர ஷண்முகம்,

அரியாங்குப்பம்.

தயாநிதி பொன்னுசாமியை ஏமாற்றி அழைத்துச் சென்று பாழடைந்த கட்டிடத்தில் கட்டிப் போட்டுச் சாவியைக் கேட்கிருன். ஆனல் அந்தப் பயங்கரமான சந்தர்ப்பத்தில்கூட பொன்னுசாமி சாவிக்குப் பதில் உயிரையே கொடுக்கச் சித்தமாக இருப்பது. பணப்பேய்களின் உள்ளங்களைப் பிரதிபலிக்கிறது.

எஸ். பத்மநாபன்,

சென்னை.

நிர்மலா மூலம் மல்லி தன் கணவரின் முதல் மனைவி என்பதறிந்த சுமதி மனம் குமுறுகிருள். அவன் சன்மார்க்கம் போதித்த மஹான்களின் படங்களிடம் தன் நிலை

குறித்து அழுது ஆறுதல் பெறு கிருள். அவள் கதறுதலைக் கேட்டு அந்த மஹான்களே உயிர்பெற்று ஆறுதல் அளிப்பார்களோ என்று நாம் ஒரு கணம் நினைக்கிரும் அரிய காட்சி.

பத்மா,
சென்னை.

ஆனந்த மடம்

மகேந்திரவர்மன் தன் மனைவி கல்யாணியுடன் காட்டில் ஓரிடத்தில் இளைப்பாறுகிருன். அப்போது 'மகனே, மகனே' என்ற குரல் அவன் செவிகளுக்குக் கேட்கிறது. 'யார்?' என்று கேட்கிருன் அவன். பதிலில்லை. பாரதத் தாயின் வாக்கு தான் அது என்று கல்யாணியின் உள்ளத்திலே ஏதோ ஒன்று சொல்ல, அவள் கணவனை விடுதலைப் போரில் சேரும்படி ஊக்குவிக்கிருள். வீரமூட்டும் அரிய காட்சி இது.

ஸி. கருப்பய்யா,
மதுரை.

நாட்டுப் பற்றும், லட்சிய உறுதியும், ஜீவானந்தன், பவானந்தன் போன்றவர்களை பிரம்மசரிய விரதத்துடன் காப்பாற்றி வந்தன. ஆனல் ஜீவானந்தன் பிரம்மசரிய விரதத்தினின்றும் நழுவி விட்டான் என்று சத்தியானந்தர் மனைவி மூலம் அறிந்தபோது, 'அம்மா!' என்று கதறியபடி பாரதத் தாயின் விக்ரகத்திடம் ஓடும்போது நம் உள்ளத்தின் அடித்தளத்திலே விவரிக்க முடியாத உணர்ச்சி பிரவாகமாக ஓடுகிறது.

பி. எஸ். மணி.
தச்சகல்லூர்.

மதனமோகினி

ஏதோ சில காரணத்தால் நாஸ்திகன் ஆகிருன் புலிகேசி. ஆனல் தங்கை குமுதா ஆண்டவனின் அடிமை. தங்கைக்கும் அண்ணனுக்கும் கடும்போர் மூளுகிறது கடவுளைப் பற்றி. கோபங் கொண்ட புலிகேசி கடவுளை அழிக்கச்செல்கிருன். ஆனல் நடந்தது? ஆபத்து நேர்ந்தது. இருந்தாலும் மனம் மாறவில்லை. தங்கை குமுதா அண்ணன் மனம் நிம்மதியடைய பாடுகிருள் பரமனின்மேல். வள்ளுவர், பட்டினத்தார், ராமலிங்க சுவாமிகள் தோன்றுகின்றனர். தன் மனதிற்குச் சாந்தியும், கடவுளின் கிருபையும் கிடைக்கிறது; கிடைத்து விட்டது. "குமுதா" என்று கத்துகிருன். ஆனல் குமுதா "என்ன"வென்று கேட்கவும் "தாகம் தண்ணீர் கொண்டுவா!" என்கிருன். இந்தக் காட்சி வைராக்யத்தின் உறுதியையும் கடவுள் உண்டென்பதையும் உயர்ந்த முறையில் உணர்த்துகிறது.

கே. வி. கிருஷ்ணையன்,
ஐயம்பேட்டை.

தந்தை

தாயில்லாப் பிள்ளையைக் காணுமல் மனவேதனை அடைகிருர் தந்தை. அப்போது சந்திரன் மகன் பாலச்சந்திரனைத் திருவிழாவில் எங்கேயோ விட்டு விடுகிருன். அக்குழந்தை சந்திரனுடைய வேலைக்காரனல் கண்டு பிடிக்கப்பட்டு தன்னுடைய தாத்தாவிடம் வளர்கிருன். அக்குழந்தையைக் கைப்பற்ற சந்திரன் நள்ளிரவில் போகிருன். பாலசந்திரனை எடுக்கும்போது தந்தை பார்த்து விடுகிருர். உடனே தந்தை சந்திரனை கட்டி அழுகிருர். அப்புறம் சந்திரன் "நான் உங்களை மோசம் செய்து விட்டேன்! உங்கள் முகத்தில் விழிக்கவே அவமானமா யிருக்கிறது. என் குழந்தை எனக்குச் சொந்தம். ஆகையால், தந்தையே, என் குழந்தையை என்னிடம் கொடுத்துவிடுங்கள்!" என்கிருன். அப்போது சந்திரனின் தந்தை "பாலச்சந்திரன் உன் மகன்-உனக்குச் சொந்தம். என் மகன் சந்திரன் எனக்குச் சொந்தம்" என்று மார்போடு கட்டி அழுகிருர். சந்திரன் காலடியில் விழுந்து மன்னிக்கும்படிக் கேட்கிருன். தந்தையில் இது உள்ளமுருக்கும் காட்சி.

வி. கோதண்டபாணி,
சென்னை-12

தபால் பெட்டி

தமிழ் நாட்டு நக்ஷத்திரங்களுக்கு !

பம்பாயிலே சில நாட்களுக்குமுன்பு பிரபல பின்னணி பாடகி ஒருவர் அரும்பாடுபட்டு சினிமா நக்ஷத்திரங்களை யெல்லாம் ஒன்று கூட்டி ஒரு கதம்பக் கச்சேரி ஏற்பாடு செய்து வெற்றி பெற்றார். மகாராஷ்டிரத்தில் புயலால் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் மக்களுக்கு தன்னாலான உதவி செய்தார். தானும் அந்த நாடடைச் சேர்ந்தவள் என தாய் நாட்டுணர்ச்சி கொண்டு தன் மக்களுக்காக தன்னாலானதைச் செய்து வெற்றி கண்டார். இதைப் பார்க்கும் போது நமக்கும் அந்த உணர்ச்சி ஏற்படுகிறது. ஒவ்வொரு நடிக நடிகையரும் தாமாகமுன்வந்து நன்கொடையளித்தார்கள்.

ஏன், நமது தமிழ் நாட்டில் புயலால் இன்றும் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் மக்களுக்கு உதவி செய்ய நமது தமிழ் நாட்டு நக்ஷத்திரங்கள் முன் வருவார்களா?

கே. சந்தானம்,
சென்னை.

படக்கலை உருப்பட !

பழங்கால இலக்கியங்களின் அரிய கருத்துக்களைக் கொண்ட கதைகளைப்படமெடுக்காமல் பணத்தையே பிரதானமாகக்கொண்டு சமூகப் படமெனக்கூறிக் கொண்டு மிக மட்டமான படத்தை எடுத்து பாமரர்களை ஏமாற்றுகிறார்கள். சமீபத்தில் வெளியிடப்பட்ட சில படங்கள் வெறும்கட்சிப் பிரசார படங்கள். தங்களுடைய கட்சியின் கொள்கைகளை இதில் விளக்கிக் கூறுவதும், கடவுளை நிந்தனை செய்வதும் தூஷிப்பதுமாகவும் படமெடுத்து ஜனங்களின் ஆத்திரத்தைத் தூண்டுவது மிகவும் கண்டிக்கத்தக்கது. யூகிவாரிசு, சைக்கிள் திருடன் போன்ற நல்ல கதைகளைப் படமாக எடுத்தால் ஓரளவுக்கு எதிர்காலத் தமிழ்ப் பட உலகம் உருப்பட வழியுண்டு.

கே. பி. சாமி,
காரைக்கால்.

வரவர மாமியார்...!

கனம் ராஜாஜி சில மாதங்களுக்கு முன் சினிமாவைப் பற்றித் தனது அபிப்பிராயத்தைக் கூறினபொழுது சினிமா முதலாளிகளும் கலைத்தொண்டர்களும் அவரை ஏகமனதாகத் தாக்கிக் கண்டித்துப் பேசினர். ஆனால் இப்பொழுது, இந்த இரண்டு மாதங்களுக்குள் எனக்கு ''பணம்'', ''மாமியார்'', ''நாம்'' போன்ற படங்களைப் பார்க்கும் துரதிருஷ்டம் ஏற்பட்டது.

இப்பொழுது வரும் அனேக தமிழ்ப் படங்கள் கீழ்த்தர மனப்பான்மையும், மட்டரக ஹாஸ்யமும், அர்த்தமில்லாமல் ஹனுமார் வால்போல் வளரும் கதைகளாகவும் இருக்கின்றன. கலையின் பெயரால் மட்டமான படங்களைத் திரையிடப் படுவதை ஆட்சேபிக்க வேண்டும். இதைச் சீர்திருத்த, இந்தக் காலத்தில் எந்தத் தொழிலுக்கும், உத்தியோகத்திற்கும் பலவித பரீக்ஷைகள் வைத்து, ஆராய்ச்சி செய்து தேர்ச்சி பெற்றவர்களையே ஆதரிப்பதுபோல், இக்கலை வளர்ச்சிக்காக ஓர் கல்லூரி நிர்மாணம் செய்து அக்கலைக்கு வேண்டிய எல்லாவித பயிற்சிகளும், படிப்பும் பெற்றவர்களையே இக் கலைத் தொழிலிலீடுபடச் செய்ய வேண்டும்.

சுய அறிவும், புத்திகூர்மையும், கற்பனு சக்தியும் நிறைந்தவர்களே இத்தொழிலுக்கு அருகதையானவர்கள்.

சுப்பய்யா,
கோயம்புத்தூர்.

திருந்த வேண்டும்

சந்திரலேகா, சம்சாரம், வாழ்க்கை,ஏழை படும் பாடு முதலிய படங்கள் மூலம் உயர்வடைந்த நம் பட உலகம் தாழ்வுப் பாதையில் இறங்கி விட்டது. விபசாரக் காட்சிகளும் அதை விளக்கும் வசன அமைப்பும் கொண்ட இப்படிப்பட்ட படங்கள் கட்சி அரங்கமாக மாறி விட்டன. அதன் பலன் பட உலகம் படுபாதாளத்தை நோக்கிப் போகிறது என்பதுதான். கதையமைப்பு திருந்த வேண்டும்.

பா. கிருஷ்ண மூர்த்தி,
திருவிடமருதூர்.

நல்ல சென்ஸார்!

பட உலகில் பலரும் புதிய பிராந்திய தணிக்கை அதிகாரிபற்றிப் பல விதமாக அபிப்பிராயம் கூறுகின்றனர். இதில் அவரிடம் தங்களுக்குள்ள துவேஷத்தைப் - பிரதிபலிப்போரும் உண்டு. எப்படிப்பட்ட வகைகளில் படங்களைத் தயார் செய்ய வேண்டும்? எக்தெந்த முறைகளை அதற்குக் கையாள வேண்டும் என்பதையெல்லாம் பற்றிக் கவலைப் படாமலிருந்து விட்டு தற்போது ஒருவர் நியாயமாக நடக்க முன்வந்தால், அவர் பாணியில் செல்லாமல் அவரைப் பற்றிக் குறை கூறுவது அழகல்ல.

கே. எஸ். வாஸ்,
சென்னை.

எப்போது ஒழியும்?

தற்போதைய படங்களை மூன்று அம்சங்கள் பற்றிக் கொண்டு விட்டன. முதலாவதாக தாங்க முடியாத சோகத்துடன் தவிக்கும் ஒரு பாத்திரதாரி. அந்தச் சோக உணர்ச்சி பறந்து போய்விடும் வரையில் ஒரு பல்லுடைக்கும் நீண்ட வசனத்தைப் பேசுவார்! இரண்டாவதாக ஒரு குதிரைப் பந்தயக் காட்சி வரும். கதா நாயகனை வில்லன் ரேசுக்கு இழுத்து வந்து பாழ்படுத்துவான்; அல்லது ஒருத்தியுடன் வருவான். மூன்றாவதாக கோர்ட் ஸீன். மற்ற இரண்டை விட இதுதான் விசேஷ அம்சம். வாக்குவாதங்கள் ஆரம்பமாகும்போதே ஒரு குறிப்பிட்ட சாட்சியால் விசாரணை முடிவுற்று கதாநாயக, நாயகிகள் ஒன்று சேர்ந்து, வில்லன் தண்டிக்கப் பட்டு எல்லாம் சுபமாக முடிந்துவிடும். இதையெல்லாம் நம்ப முடியுமா? இந்த கண்ணருவிக் காட்சிகளைக் கண்டு ரஸிக உலகம் அலுத்துப் போய் விட்டது. இது எப்போது ஒழியும்?

ஏ. எஸ். வீரராகவன்,
செங்கற்பட்டு.

வேண்டாம் விபசாரம்

தமிழ்ப் படங்களிலே சமீபகாலமாக ஒரு புதுவியாதிபரவியிருக்கிறது. அனேக படங்களில் வரும் இந்தக் காட்சி பெண்ணினத்திற்கு மாசு புகட்டும் வகையிலே சித்தரிக்கப்பட்டிருக்கிறது. பெரிய குடும்பத்திலே பிறந்த பெண், பருவம் தங்கமுலாம் பூசிய அவள் உடல் அன்னியன் ஒருவனுக்கு யாரும் அறியாமல் அர்ப்பணிக்கப்படுகிறது. 'கற்பிழந்து வாழ்வேனு? கிணற்றில் விழுகிறேன்' என்று கூறி கலாட்டா செய்வாள். ஆனால் கடைசியில் அவள் காதலனை அடைவாள்; அல்லது அவமானப் படுவாள்.

விபசாரத்தை ஒழிக்க அரசாங்கம் ஒரு பக்கம் பாடு படும்போது அதை வளர்க்ககம் தமிழ்ப்பட உலகம் பாடு படுவதை நினைக்கும்போது மிகவும் வருத்தமாக இருக்கிறது. கதாநாயகிக்கு ஒரு காதலனும் வேண்டாம்; அவள் கற்பை யாரும் அறியாமல் அடகு வைக்கவும் வேண்டாம். அந்தப்பாத்திரத்தையே சிருஷ்டிக்க வேண்டாம், சிருஷ்டித்தால் நல்லவளாகவே சிருஷ்டியுங்கள் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பி. ராமசசந்திரன்,
கோவை.

செய்திச் சுருள்

மனிதன்

மனிதன் என்பவன் யார்? ஆறறிவு படைத்தவன் தான் மனிதன் என்று சொல்லப்பட்டு வருகிறது. ஆனால் ஆறறிவு படைத்த ஒவ்வொருவனும் மனிதனாகிவிட முடியுமா என்றால் அதுதான் முடியாது! மன்னிக்கும் சுபாவமுள்ளவன் தான் மனிதனாக முடியும். சென்ற மாதம் 17-ம் தேதி யன்று திரையிடப் பட்டிருக்கும் ஜூபிடர்-லாவண்யா கூட்டுத் தயாரிப்பான மனிதன் திரைப்படம் இக் கருத்தைத்தான் விளக்குகிறது. முன்பே குறிப்பிட்டிருந்தபடி மனிதனில் காமிரா கையாளப் பட்டிருக்கும் முறை உயர்தரமாக அமைந்துள்ளது. டி. கே. எஸ். சகோதரர்கள், மாதுரி தேவி, கிருஷ்ணகுமாரி, பண்டரி பாய், எஸ். ஏ. நடராஜன் முதலியோர் இந்தப் படத்தில் நடித்திருக்கிறார்கள். நெப்டியூனில் இப்படம் தயாராகி யிருக்கிறது.

நால்வர்

தமிழ் நாட்டுக்கு விரைவிலேயே நால்வர் விஜயம் செய்யப் போகிறார்கள். "ஓஹோ! யார் இந்த நான்கு ஆசாமிகள்? எந்த தேசத்து பிரமுகர்களோ?" என்றெல்லாம் நீங்கள் கற்பனையை ஓட விட வேண்டாம். 'நாம் இருவர்' 'மூன்று பிள்ளைகள்' ஆக இந்த பாணியில் 'நால்வர்' என்றொரு தமிழ்ப் படம் வெளிவரப் போகிறது. கோவை சென்டிரல் ஸ்டுடியோவில் சங்கீதா பிக்சர்ஸார் இந்தப்படத்தைத்தயாரித்து வருகிறார்கள். வி. கிருஷ்ணன் டைரக்டராக அமர்ந்திருக்கும் இந்தப் படத்தில் குமாரி தங்கம், மற்றும் பல புது முகங்கள் நடித்திருக்கிறார்கள். நால்வர் ஒரு நல்ல நீதியைப் போதிக்கும் கதையாக இருக்கும்.

மாடர்ன் தியேட்டர்ஸ்

மாடர்ன் தியேட்டர்ஸில் கிரிஜா, பண்டரிபாய், கிருஷ்ணகுமாரி, சிவாஜி கணேசன் முதலியோர் நடித்துவரும் படமொன்று தயாராகி வருகிறது. டி. ஆர். சுந்தரம் இந்தப் படத்தை டைரக்ட் செய்து வருகிறார். மு. கருணாநிதி இப்படத்திற்கான கதை-வசனத்தை எழுதி யிருக்கிறார்.

நரசுவின் சொந்தப்படம்

பிரபல காபி வியாபாரியான வி. எல். நரசு முதலில் பட விநியோகஸ்தராக மாறினார். பின்னர் ஸ்டுடியோ முதலாளியாக மாறினார். தற்போது பட முதலாளியாகி யிருக்கிறார். தமது சொந்த ஸ்டுடியோவிலே விரைவிலேயே அவர் ஒரு படத்தைத் தயாரிக்கப் போகிறார். இந்தப் படத்தை ஏ. எஸ். ஏ. சாமி டைரக்ட் செய்வார் என்று தெரிகிறது.

ஜாதகம்

ஏவி. எம். ஸ்டுடியோவுக்கு சென்ற மாதம் 23-ம் தேதியன்று ஏராளமான பேர்கள் 'ஜாதகம்' பார்க்க வந்தார்கள். ஏவி. எம். ஸ்டுடியோவில் யார் ஜாதகம் கணித்து, புதிரை விடுவிக்கிறார்கள்? என்று உங்களில் பலர் ஜாதகமும் கையுமாக என்னிடம் கேள்வி கேட்கலாம். ஆர். என். ஆர். பிக்சர்ஸ் உரிமையாளரான டைரக்டர் ஆர். நாகேந்திரராவின் சொந்தப்

படமான ஜாதகத்திற்கு அன்றைய தினம் பூஜை போடப்பட்டது. தமிழ், கன்னடம் இரு பாஷைகளிலும் இந்தப் படம் தயாரிக்கப்படும். ஹாஸ்ய ரஸனை மிளிரும் ஒரு சமூக சித்திரம் என்று ஜாதகத்திற்கு விளக்கம் தரப் பட்டுள்ளது.

கணக்கப்பிள்ளை

ஆனந்தகுமார் புரொடக்ஷன்ஸார் கணக்கப்பிள்ளை என்ற தமிழ்ப் படத்தை தயாரிக்கப் போகிறார்கள். சென்ற மாதம் 13–ம் தேதி, தமிழ் புது வருஷ தினத்தன்று இப்படத்திற்கான ஆரம்ப பூஜை அவர்களது காரியாலயத்தில் நடைபெற்றது

நிஜத்தை நம்பமாட்டாரா!

தமிழ்ப் படங்களில் தலைப்பில் மறுமலர்ச்சி தேவை என்று கூக்குரல் எழுப்பியவர்களுக்கு 'நிஜத்தை நம்பமாட்டாரா' ஓரளவு ஆறுதலாக இருக்கும். தலைப்பின் மூலம் புரட்சியை உண்டுபண்ணிய இதன் தயாரிப்பாளர்களான ஆர். வி. பிலிம்ஸார் படப்பிடிப்பிலும் ஒரு விசேஷ அம்சத்தைக் கடைப்பிடிக்கப் போகிறார்கள். அதாவது ஒரு சில காட்சிகள் தவிர, மற்றவை வெளிப்புறக் காட்சிகளாகவே இப்படத்தில் இருக்குமாம். ரேவதி ஸ்டூடியோவில் படம் தயாராகி வருகிறது.

தோழன்

தோழன் என்ற வார்த்தையிலேயே ஒரு குறைவு இருப்பதைக் காணலாம். நண்பன் என்றாலே நமக்குச் சாதகமானவன் என்பதுதானே அர்த்தம்! இந்த நல்ல பெயரைக்கொண்ட பிரபல நாடகத்தை ஏ. டி. எம் புரொடக்ஷன்ஸார் ரேவதி ஸ்டூடியோவில் படமாகத் தயாரித்து வருகின்றனர். பி. வி. கிருஷ்ணன் படத்தை டைரக்ட் செய்து வருகிறார். படமுதலாளிகளுக்கும் பணத்தை அளித்து, ரஸிகர்களுக்கும் அவர்கள் விரும்பி ரஸிக்கும் அளவிலே 'தோழன்' விளங்குவான் என்று எதிர்பார்க்கிறோம்.

ஆனந்தா புரொடக்ஷன்ஸ்

இன்றைய நமது சமுதாயத்திற்கு புதுமைக் கருத்துக்கள் நிறைந்த மறுமலர்ச்சிச் சித்திரங்கள் அநேகம் தேவை. இந்த வகையிலே ஆனந்தா புரொடக்ஷன்ஸாரின் படமும் ஒன்று. ஜி. வரலக்ஷ்மி, ஸ்ரீராம் பிரதம பாகத்தில் நடித்து வரும் இப்படம் பிரகாஷ் ஸ்டூடியோவில், பிரகாஷ் ராவின் டைரக்ஷனில் தயாராகி வருகிறது. தமிழ், தெலுங்கு இரு பாஷைகளிலும் இப்படம் தயாரிக்கப்பட்டு வருகிறது. 'மீலு கொலுபு' என்று தெலுங்கு பதிப்புக்கு பெயரிடப்பட்டிருக்கிறது. தமிழ்ப் பதிப்புக்கு இன்னும் பெயரிடப்படவில்லை.

ரோகிணியின் புதுப்படம்

ஒய். ஆர். ஸ்வாமியின் டைரக்ஷனில் ரோகிணியில் மற்றொரு புதுப் படம் தயாராகி வருகிறது 'புரொடக்ஷன்–9' என்பதாக தற்காலிகமாக இதற்குப் பெயரிடப்பட்டிருக்கிறது. என். டி. ராமராவ், சிவராவ், 'சாவுகார்' ஜானகி, ஜமுனா முதலியோர் ரோகிணியின் இந்தப் புதுப் படத்தில் தோன்றுகிறார்கள். சென்ற இரண்டு மாதங்களாக இதன் படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது.

எம். ஜி. ஆர். புரொடக்ஷன்ஸ்

எம். ஜி. ராமச்சந்திரன் சொந்தமாக ஆரம்பித்திருக்கும் படக் கம்பெனி இது. விரைவிலேயே படப்பிடிப்பும் ஆரம்பமாகி விடும் என்று தெரியவருகிறது. மு. கருணாநிதி இப் படத்திற்கான கதை வசனத்தை எழுதி வருகிறார்.

கஷ்ட ஜீவி

ஆர். ஆர். பிலிம்ஸார் தயாரிக்கவிருக்கும் கஷ்டஜீவி படப்பிடிப்பு இம்மாத மத்தியி லிருந்து ஆரம்பமாகும் என்று தெரிய வருகிறது. மனிதன் பிறக்கும்போதே அவனுடன் இன்பமும் துன்பமும் பிறந்துவிடுகின்றன. 'கஷ்ட ஜீவி' இந்த உலக வழக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுகிறது. கிரிஜா, லக்ஷ்மீ, சாரதா, லிங்கமூர்த்தி, ரேலங்கி, செல்லம் முதலியோர் டி. ராமராவ் டைரக்ட் செய்து வரும் இப்படத்தில் நடித்து வருகிறார்கள். தெலுங்கு பாஷை ஒன்றில் மட்டுமே இப்படம் தயாராகி வருகிறது.

தேவதாஸ்

வெளிவர விருக்கும் நல்ல படங்களில் ஒன்ருக தேவதாஸ் இருக்கும் என்று நிச்சயம் கூறலாம். நரசு ஸ்டுடியோவில் இந்தப் படம், பிரபல வங்காள நாவலொனறைத் தழுவி எடுக்கப்பட்டிருக்கிறது. சாவித்திரி, நாகேஸ்வரராவ், லலிதா முதலிய நக்ஷத்திரங்கள் தேவதாஸில் பிரகாசிக்கின்றனர். வேதாந்தம் ராகவய்யா டைரக்ட் செய்துள்ள இந்தப் படம் விநோதா பிக்சர்ஸாரின் தயாரிப்பாகும்.

பழிக்குப் பழி

காதல் இருக்கிறதே அது அணுகுண்டையும்விட மகாக் கொடியது. உயிர் நண்பர்கள் இருவர்களிடையே ஒரு பெண் மனப்போராட்டத்தையும் வேற்றுமையையும் விளைவித்து விடுகிருள். இதனுல் ஒருவரையொருவர் கொன்று பழிவாங்கவும் முனைந்து, பல சாகஸச் செயல்களில் ஈடுபடுகின்றனர். முடிவில் அவர்களிடையே இருந்த வேற்றுமைகள் மறைந்துவிடுகின்றன. 'காரவன்' என்ற பெயரில் பிரபல பிரிட்டிஷ் தயாரிப்பாளரான ஆர்தர் ராங்க் ஸ்தாபனத்தார் இந்தக் கதையை படமாக்கியிருந்தார்கள். இதை 'பழிக்குப் பழி' என்ற பெயரில் தமிழில் அவர்கள் 'டப்' செய்திருக்கிருர்கள். இப்படத்திற்குப் பின்னணியில் எம். எல். வஸந்தகுமாரி, ஜிக்கி முதலியோர் பாடியிருக்கின்றனர். மேலை நாட்டு பின்னணி இசைக்கேற்ப தமிழ் பாடல்கள் பாடப்பட்டிருப்பது இதுதான் முதல்தடவை. கோடம்பாக்கம் பிலிம் செண்டர் ஸ்டுடியோவில் இதன் 'டப்'பிங் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

ஸினி டெக்னீஷியன்கள் கூட்டம்

தென்னிந்திய சினிமா டெக்னீஷியன்கள் சங்கத்தின் மூன்ருவது மகாநாடு மார்ச் மாதம் 29-ம்தேதி பிற்பகல ஹிந்தி பிரசார சபையில் நடைபெற்றது. வாஹினியின் ஒலிப்பதிவு என்ஜினியர் ஏ. கிருஷ்ணன் இந்த மகாநாட்டிற்குத் தலைமை வகித்தார். சென்னைசர்க்கார் மந்திரி என். ரங்காரெட்டி இந்த மகாநாட்டை ஆரம்பித்து வைத்தார்.

சங்கக் காரியதரிசியின் வரவேற்பு அறிக்கைக்குப் பிறகு மகாநாட்டை ஆரம்பித்து வைத்தார் மந்திரி. பின்னர் தலைமையுரையை நிகழ்த்திஞர் கிருஷ்ணன்.

டைரக்டர் ராம்நாத், டாக்டர் பி.வி. பதி, எம். ஈ. நாகராஜன், என். கிருஷ்ணஸ்வாமி, ஹார்பான் ஸிங் முதலியோர் பேசினர். வந்தனோபசாரத்துடன் சுமார் ஐந்து மணிக்கு மகாநாடு முடிவடைந்தது.

இதைத் தொடர்ந்து அதே இடத்தில் மாலை சுமார் 6-மணிக்கு ஸினி டெக்னீஷியன்கள் சங்கத்தின் ஒன்பதாவது ஆண்டு விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. சென்னை சர்க்கார் நிதி மந்திரி ஸி. சுப்ரமண்யம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது. சங்கத்தலைவரான டைரக்டர் ராம்நாத்தின் வரவேற்புரைக்குப் பின் ஆண்டு அறிக்கையை காரியதரிசி ரஜினிகாந்த் வாசித்தளித்தார். பின்னர் தஞ்சை புயல் நிவாரண நிதிக்காக சென்னை மேயரிடம் ஒரு பண முடிப்பு சங்கத்தின் சார்பில் அளிக்கப்பட்டது.

தணிக்கை பிரச்னை

சென்ற மாதம் 22-ம் தேதியன்று தென்னிந்திய :பிலிம் வர்த்தக சபையின் படத்தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள் அங்கத்தினர்களின் கூட்டமொன்றுநடைபெற்றது. மத்திய தணிக்கை போர்டின் அக்ராசனரையும் அங்கத்தினர்களையும் சந்தித்து தணிக்கை விதிமுறை பிரச்னைகளைப் பற்றி ஆலோசனை நடத்தவே இக் கூட்டம் கூடியது

அன்றுமாலை உட்லண்ட்ஸில் இவர்களுக்கு ஒரு தேநீர் விருந்தளிக்கப் பட்டது.

நல்ல சிபார்சு!

சமீப சில மாதங்களாக சினிமாவுக்கான வருமானம் குறைந்து கொண்டு வருகிறது. இந்த இக்கட்டான நிலையிலும் தமாஷா வரியைக் குறைக்காமலிருப்பது நல்ல தல்ல என்பதாக தென்னிந்திய சினிமா டெக்னீஷியன்கள் சங்கத்தார் எடுத்துக்காட்டியிருக்கின்றனர். ''தியேட்டர்களில் படங்களுக்கு வசூல் குறைந்து வருவதால்

பிலிம் விசாரணைக் கமிட்டி சிபார்சு செய்துள்ள 20 சதவித தமாஷா வரியையே ஒரே சீராக எல்லா மாகாணங்களுக்கும் விதிக்க வேண்டும். தமாஷா வரியில் பாதியை சினிமா தொழிலின் வளர்ச்சிக்கே திருப்ப வேண்டும்" என்பதாக சமீபத்தில் நடந்த டெக்னிஷியன்கள் சங்க கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது

கேன்ஸ் விழா

சென்ற மாதம் 15-ம் தேதியன்று கேன்ஸ் நகரத்தில் ஆருவது சர்வ தேச சினிமா விழா ஆரம்பமாகியது. எகிப்தின் மாஜி மன்னர் பருக் மற்றும் பல பிரபல சினிமா நக்ஷத்திரங்கள் இந்த விழாவிற்கு வந்திருந்தனர். மற்றும் 28-நாடுகளிலிருந்துபிரதிநிதிகள் இதன் ஆரம்ப விழாவுக்கு வந்திருந்தனர். தினசரி காலை, பகல், மாலை ஆக மூன்று காட்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. இரண்டு வாரங்கள் விழாவுக்கென வந்திருக்கும் படங்கள் திரையிடப்படும்.

இவ்விழாவில் கலந்துகொள்வதற்கென 30 முழு நீளப்படங்களும் 46 துண்டுப் படங்களும் வந்துள்ளன.

வந்திருக்கும் படங்களில் சிறந்தது எது என்பதைத் தேர்ந்தெடுக்க 13 பேர்கள் (ஜூரிகள்) கொண்ட தேர்வுக் கமிட்டி நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து நான்கு படங்கள் விழாவுக்கு அனுப்பப்பட்டன.

நூர்ஜஹான் டாக்கீஸ்

சென்னைக் கடுத்த சைதாப்பேட்டையில் நூர்ஜஹான் டாக்கீஸ் என்றொரு புதிய சினிமா கொட்டகை சென்ற மாதம் 17-ம் தேதியன்று திறந்துவைக்கப்பட்டது. செட்டிநாடு அரசர் ராஜா ஸர் முத்தய்யா செட்டியார் இந்தக் கொட்டகையைத் திறந்து வைத்தார். ஜூபிடர்-லாவண்யாவின் 'மனிதன்' தற்போது அங்கு காட்டப்பட்டுவருகிறது.

பிலிம் விசிறிகள் சங்கம்

சென்னை பிலிம் விசிறிகள் சங்கத்தின் புது வருட நிர்வாகிகள் தேர்தல் சென்ற மாதம் 12-ம் தேதியன்று நடைபெற்றது. சங்கத்தின் உப தலைவரான ஏ. அருணாசலம் இதற்கு தலைமை வகித்தார். சங்கத்தின் ஆண்டு அறிக்கையை கூட்டுக் காரியதரிசி சமர்ப்பித்தார்.

கீழ்க்கண்டவர்கள் 1953-54 ஆண்டுக்கு நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்:

வி. ஸி. கோபாலரத்னம்-தலைவர்; ஏ. அருணாசலம், ராஜம்மாள் அனந்தராமன்-உபதலைவர்கள்; ஈ. பி. சாமுவேல் - பொதுக்காரியதரிசி; என். ராஜரத்னம்-கூட்டுக்காரியதரிசி; கே. சுப்ரமண்யம்-பொக்கிஷதார். இவர்கள் தவிர எட்டு பேர்கள் கமிட்டி அங்கத்தினர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.



நமது பிரசுராலய வெளியீடுகளின் ஏஜெண்டும், மதராஸ் நியூஸ் ஏஜென்ஸியின் முதலாளியும், ஸௌத் இந்தியா அச்சக சாலையின் நிர்வாக டைரக்டருமான ஸ்ரீ டி. தணிகாசலம் சென்ற மாதம் 23-ம் தேதியன்று ஐரோப்பாவுக்குப் புறப்பட்டுச் சென்றிருக்கிறார். வியாபார விஷயமாகச் செல்லும் இவர் ஐரோப்பாவிலுள்ள பல நாடுகளுக்கு விஜயம் செய்து விட்டு தாய்நாடு திரும்புவார்.

பண்டரிபாய்......

(29-ம் பக்கத் தொடர்ச்சி)

'ஹரிதாஸ்' படத்தில் 1944–ல் ஒரு சிறு பாத்திரத்தில்—ரஸிகர்களுக்கு அறிமுகமாக முடியாத பாத்திரத்தில் தோன்றினார் பண்டரி. இதனால் வெறுப்புற்ற அவர் மீண்டும் காலக்ஷேப உலகில் புகுந்தார். 1947–ல் சினிமா உலகம் மீண்டும் அவரை இழுத்தது. ஹொன்னப்ப பாகவதர் சுரபி பிக்சர்ஸ் என்ற படக் கம்பெனியை ஆரம்பித்து 'பக்த கும்பரா' என்ற படத்தைக் கன்னட பாஷையில் தயாரித்தார். அதில் கதாநாயகியாக நடிக்க பண்டரியை அழைத்து வந்தார். ஆனால் படம் வெளிவந்தபோது பண்டரிக்கு ஒரு சிறு பாத்திரம்தான் கிடைத்திருப்பதை ரஸிகர்கள் பார்த்தார்கள்.

பக்தகும்பராவில் தனக்குக் கிடைத்த பாகத்தை திறம்படச் செய்துமுடித்தார் பண்டரி. அத்துடன் அவருக்கு மேக்–அப் அருமையாக அமைந்ததாலும் அவரே இயற்கையில் நல்ல அழகியாதலாலும் பட உலக பிரமுகர்களின் கழுகுக் கண்கள் அவரைக் கூர்ந்து நோக்கின! நக்ஷத்திர உற்பத்தியாளரான ஏவி. மெய்யப்ப செட்டியார் பண்டரியை இரண்டு வருஷத்திற்கு மாதச் சம்பளத்தில் அமர்த்தினார்.

கன்னடத்திலேயே பேசிக்கொண்டு தமிழ் பேசுகிறவர்களைப் பார்த்துத் திருதிருவென்று விழித்த பண்டரியைத் 'தமிழ்ப் படுத்தும்' வேலை ஏவி.எம்.மில் நடைபெற்றது. ஹாஸ்ய நடிகரும், கதை இலாக்காவிலிருப்பவருமான பி. டி. சம்பந்தம் பண்டரிக்குத் தமிழில் எழுதப் படிக்கச் சொல்லிக் கொடுத்தார்.

அப்போது 'பிரம்மா' ஏவி. எம். 'வேதாள உலகத்தைச் சிருஷ்டித்துக்கொண்டிருந்தார்! அதற்கு மாகாளியின் அருளும் தேவை என்று நினைத்தார். காளி என்றால் கோரப் பற்களுடன்தான் இருந்தாக வேண்டும் என்பதின்றி அழகாகவும் இருக்கலாம் என்று நினைத்தோ என்னவோ, பண்டரியை அழகிய காளியாக்கி விட்டார். தொடர்ந்து அவரது 'வாழ்க்கை'யில் மீனாக்ஷியாகத் தோன்றி அவர் நடிக்க ஏற்பாடாகியிருந்தது. ஆனால் பலவித காரணங்களை முன்னிட்டு அது நடைபெற முடியவில்லை. ஏவி.எம்.முடன் அவரது ஒப்பந்த காலமும் முடிந்து விட்டது.

பட உலகின் மீது பண்டரிக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்திருக்க வேண்டும். ஆனால் வரவில்லை. இதற்குக் காரணம் அவரது பொறுமைதான். இப்போது படங்களில் சோக கட்டங்களில் அழுது தொலைக்க வேண்டுமென்பதற்காகத்தானோ என்னவோ அப்போது வருத்தத்தை அடக்கிக் கொண்டார்!

டைரக்டர், தயாரிப்பாளர் பி. புல்லையா 'தூக்குத் தூக்கி' படத்தைத் தயாரிக்கத் திட்டமிட்டு பண்டரிபாய், மகாலிங்கம் முதலியோரை ஒப்பந்தம் செய்தார். ஆனால் அது ஏனோ தயாரிக்கப்படவில்லை. அதன் பிறகு 1948–ல் அவர் கன்னட தயாரிப்பாளரான கெம்பராஜின் 'ராஜ விக்ரமா' படத்தில் நடித்தார். தமிழ், கன்னடம் இரு பாஷைகளிலும் வெளியான இப்படம் தோல்வியுற்ற போதிலும் பண்டரி அதிலிருந்து பட உலகில் காலை ஊன்றிக் கொண்டு விட்டார்.

பிரபல படத்தயாரிப்பாளர்களான ஜூபிடர் பிக்சர்ஸார் பண்டரியை மூன்று வருஷங்களுக்கு ஒப்பந்தம் செய்து கொண்டனர். 'மர்மயோகி'யில் அவர் நடித்தார். அதைத் தொடர்ந்து ஏவி. எம். தனது ஹிந்தி 'பஹார்' படத்திற்கு அதே மீனாக்ஷி பாத்திரத்திற்கு பண்டரியை ஒப்பந்தம் செய்தார். ஆனால் அவர் அதன் மூலம் வடநாட்டிலும் புகழ் பெற்றாலும் அவரது பெயரை தயாரிப்பாளர் பத்மினி என்று மாற்றி அந்தப் 'பெயருக்குப்' பிரதான்யமும் விளம்பரமும் கொடுத்து விட்டதால் பண்டரிபாய் 'பெயரில்' ஒரு அகில இந்திய நக்ஷத்திரமாக ஆகவில்லை.

பஹாரைத் தொடர்ந்து நேஷனல் பிக்சர்ஸாரின் வெற்றிப் படமான 'பராசக்தி'யில் அவர் விமலாவாக நடித்தார். விமலா அந்தப் படத்தின் சூத்திரதாரி. கதாநாயகனை நல்ல பாதையில் திருப்பி, கதாநாயகியின் குழந்தையைக் காப்பாற்றி, பிரிந்த

அவர்கள் குடும்பத்தை ஒன்று சேர்த்து வைத்த ஒரு ஆதர்ச மங்கை விமலா. அந்தப்பாத்திரத்திலே அழகாகத் தோன்றி அருமையாக நடித்த பண்டரி அதிலிருந்தே 'நடிகை' ஸ்தானத்திலிருந்து 'நக்ஷத்திர' ஸ்தானத்திற்கு உயர்ந்து விட்டார். அடுத்தபடியாக அவர் நடித்த பரதேசி (பூங்கோதை) தோல்வியுற்றாலும் அவர் வரை நன்கு நடித்தார்.

சமீபமாக வெளிவந்து ஓடிக் கொண்டிருக்கும் படங்களான 'சத்திய சோதனை'. 'வாழப் பிறந்தவள்', குமாஸ்தா', 'மனிதன்' ஆகியவற்றில் பண்டரியின் நடிப்பு மிகவும் உயர்தரமாக இருக்கிறது.

சத்திய சோதனையில் கதாநாயகியாகத் தோன்றுகிறார் பண்டரி. ஒரு வியாபாரியின் உத்தம மனைவி அவள். அவளது கணவனின் இளைய சகோதரன், தன் அண்ணன் அவளை மணம் செய்யுமுன்பே அவளைக் காதலிக்கிறான். ஆனால் இது அவளுக்குத் தெரியாது.

மற்ற சமீபத்திய படங்கள் பலவற்றிலும் வந்ததைப் போல, ஒரு நாள் இரவு அவள் கணவன் அவளுடனிருந்து விட்டு வெளியூர் சென்று விடுகிறான். அவள் கர்ப்பமுற்று விடுகிறாள், அவளை வீட்டை விட்டுத் துரத்த பஞ்சாயத்தார் தீர்மானிக்கின்றனர். கடைசியில் உண்மை தெரிந்து அவளுக்கு நல்லது நடக்கிறது.

ஒரே சோகமயமான இந்தப் பாத்திரத்திலே பண்டரியின் நடிப்பு நமது உள்ளங்களை உலுப்பிக் கண்ணீர் சொரியச் செய்கிறது. ஒரு படத்தைப் பார்க்கிறோம்; நடிப்புக்காக அந்தப் பாத்திரதாரி அழுகிறாள், என்ற நினைப்பே நமக்கு ஏற்படுவதில்லை. அவ்வளவு சிறந்த முறையில் பாத்திரத்துடன் ஐக்கியமாகி நம்மையும் ஐக்கியமாகிவிடச் செய்கிறார் அவர்.

குமாஸ்தாவில் அவர் கதா நாயகி சுசீலாவாகத் தோன்றுகிறார். ஆரம்பத்திலிருந்தே அவரது நடிப்பு மெருகிட்ட தங்கம்போல் பிரகாசிக்கிறது. சோகக் கட்டங்களில் தற்போதைய நக்ஷத்திரங்களில் இவரது நடிப்பு சிறந்து விளங்குகிறது. நடிப்பு என்பதை மறந்து பாத்திரத்துடன் லயித்து நம் உள்ளத்தைத் தொடுகிறார் அவர், சரஸா கள்ளங்கபடமற்ற ஒரு பெண்.

ஜெயந்தியின் 'பொன்வயல்' படப்பிடிப்பில் மைனாவதி

தன் சகோதரனிடம் அவள் உயிரையே வைத்திருக்கிறாள். ஆனால் அவன் தன் தோழியின் கற்பைக் களவாடியதறிந்தபோது பெண்களின் பிரதிநிதியாய், கற்பின் பெருமையறிந்த கண்ணகியாய்த் தோன்றி அருமை அண்ணன்மேல் அனலாகக் கக்குகிறாள். தோழியின் நல்வாழ்வுக்குப் பாடுபடும் அவளுக்கு நல்ல எதிர்காலமில்லாமலா இருக்க முடியும்? மனிதன் படத்தில் அண்ணனிடம் சீறும்போதும் சுரேவுக்குப் புத்தி புகட்டும் போதும் பண்டரியின் நடிப்பு தரமாயிருக்கிறது.

தற்போது பண்டரி 'செல்ல பிள்ளை', 'கண்கள்', மாடர்ன் தியேட்டர்ஸின் புதுப்படம் முதலியவற்றில் நடித்து வருகிறார். அவரை சோக கட்டங்களில்தான் கதற விட வேண்டும் என்ற அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டு மற்ற பாத்திரங்களிலும் நடிக்கச் செய்ய பட முதலாளிகள் முன் வர வேண்டும்.

பண்டரியின் இளைய சகோதரி மைனாவதி தற்போது பட உலகில் புகுந்திருக்கிறார். அக்காவின் அரவணைப்பில் அவரும் சிறந்த நடிகையாக மாற 'பொன்வய'லும் கண்க'ளும் வழி செய்யுமென எதிர்பார்க்கலாம். சஹஸ்ரநாமத்தின் இந்தக் கண்கள் நாடகமாக மேடையேற்றப்பட்டபோது பண்டரியும் மைனாவதியும் நடித்தார்கள். கண்கள் படத்திலும் சகோதரிகள் நடிக்கிறார்கள்.

பண்டரி காலக்ஷேபம் செய்யக் கூடியவர் என்று சொன்னேன். அதனால் அவர் இயற்கையிலேயே நன்கு பாடும் திறமை பெற்றிருப்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் இரவல் வாங்கிப் பழக்கப்பட்ட பட உலகம் சொந்தக் குரலுக்கு எங்கே இடமளிக்கப் போகிறது?

மங்களூரைப் பிறப்பிடமாகக் கொண்ட பண்டரிபாய் சாரஸ்வத பிராமண வகுப்பைச் சேர்ந்தவர். அவரது தாய்ப் பாஷை கொங்கிணி என்பதாகும். அத்துடன் அவருக்கு கன்னடம், மராத்தி, தெலுங்கு, தமிழ், ஹிந்தி ஆகிய பாஷைகளில் நிறைய பயிற்சியுண்டு. சில நக்ஷத்திரங்களைப் போல், 'எனக்கு எங்கே ஸார் நேரமிருக்கு?' என்று சொல்லாமல் எல்லா பாஷைப் படங்களையும் அடிக்கடி பார்ப்பதாகச் சொல்லுவதிலிருந்து, நடிப்புத் திறமையை விருத்தி செய்து கொள்ளுவதில் அவருக்குள்ள ஆர்வம் நன்கு விளங்குகிறது. சமீபத்தில் தியாகராயநகரில் வீடு வாங்கி கிரஹப்ரவேசமும் செய்து விட்டார் பண்டரிபாய்.

அவரது வீட்டில் நுழைந்தால் அது ஒரு நக்ஷத்திரத்தின் வீடு என்ற சூழ்நிலையே இருக்காது. அதுவும் இப்போது 'பண்டரிபாய்' சீஸன் நடப்பதற்கு ஏக அமளி இருக்க வேண்டுமல்லவா?—மற்ற இடங்களில் நடப்பதைப்போல. ஊஹூம் அதெல்லாம் மூச்சுவிடக் கூடாது! வாசலிலேயே மேக்-அப் இல்லாமல் வந்து வரவேற்கும் ஒரு அழகிய முகம், தன்னடக்கமும் சரளமாகப் பேசும் தன்மையும் கொண்டதாக இருக்கும்போது அது பண்டரிபாய்தான் என்று தீர்மானிக்கச் சில நிமிஷங்களாகும் நமக்கு. இவ்வளவு நல்ல குணமும் அகம்பாவமின்மையும் கொண்ட பண்டரி பட உலகில் முன்னேறுவதில் ஆச்சரியமில்லை.

கடைந்தெடுத்த தந்தம் போன்ற உடலமைப்பும், கண்கவர் கட்டழகும் கொண்டவர் பண்டரிபாய், மேக்-அப் இல்லாமல் தைரியமாக நடமாடக் கூடியவர் — நடமாடுகிறவர் — அவர். அவருக்குத் தெய்வ பக்தி அதிகம். அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்பதில் 'அசைக்க' முடியாத நம்பிக்கை கொண்டவர் அவர். அவரது உறவினர்கள் அவருடன் வசித்து வருகிறார்கள். குடும்பப்பெண் என்பதற்கேற்ப அவருக்கு நன்கு சமைக்கத் தெரியும், ஆனால் அவர் சமைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தால் பட உலகம் சும்மா விட்டு விடுமா?

பட உலகிலும் ரஸிகர்கள் உள்ளத்திலும் நிரந்தர ஸ்தானம் பெற்றுவிட்ட பண்டரி எதிர்காலத்தில் ஒரு ஆதர்ச நடிகையாக விளங்குவார் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. அவரது பாதையிலேயே செல்லும் மைனாவதியும் அந்த ஸ்தானத்தை விரைவில் பெற்று விடுவார் என்று நம்பலாம்.

—எஸ். வி. ஸம்பத்குமார்.

அருணா பில்ம்ஸ்

குமாஸ்தா

திரைக்கதை

காட்சி 1

ரங்கநாதன் ஒரு ஏழை குமாஸ்தா. அவரது சிறு வருமானத் தொகையில் அவரது பெரிய குடும்பம் வாழ வேண்டும். கல்லூரியில் படிக்கும் இளைய சகோதரன் கோபு; மனைவி சீதா; மணப் பருவத்தை எட்டிப் பிடித்திருக்கும் சகோதரி சுசீலா; தன் இரு குழந்தைகள்; யமனுடன் போராடிக் கொண்டு படுத்திருக்கும் கிழத் தந்தை. இத்தனை பேரும் அவர் நிழலிலேதான் வாழ வேண்டும். வறுமை அவரை வாட்டியது. இத்தனையையும் மீறி அவர் தலையெடுப்பது எப்படி? தன் சகோதரனைக் கடன் வாங்கி வர ஒரு நண்பரிடம் அனுப்பியிருந்தார் ஒரு நாள். அவன் திரும்பி வந்ததும் அவர் ஆவலுடன் கேட்டார்.

பாத்திரங்கள் :

வி. நாகய்யா	ரங்கநாதம்
மனோஹர்	கோபு
நரசிம்மபாரதி	ரவி
பண்டரிபாய்	சுசிலா
ஜெயம்மா	சீதா
கே. ராமசாமி	பிரதர்

வசனம் :
ஏ. டி. கிருஷ்ணசாமி பி. ஏ.

டைரக்ஷன் :
ஆர். எம். கிருஷ்ணசாமி

ரங் : கோபு! பணம் கிடைச்சுதா?

கோபு : இல்லே, அவர் கையிலே பணமில்லேன்னு சொல்லிட்டாரு.

ரங் : காலேஜ் சம்பளம் இன்னிக்கி கட்டல்லேன்னா பேரெ எடுத்துடுவாங்களா?

கோபு : நேத்தே பேரெ எடுத்தாச்சு!

ரங் : சொல்லவே இல்லியே நீ.

கோபு : எல்லாந் தெரிஞ்சு எதுக்காகச் சொல்றது?

ரங் : அடடா, சுசீ! என்னம்மா இது ஒரே பொகெ?

சீதா : பாவம், அதென்ன செய்யும்? பச்சை கட்டை.

ரங் : பாழாப் போன வீடு. பொகை போறத்துக்காவது அவ்வளவு வழிவச்சுத் தொலைச்சானா, படுபாவி!

கோபு : ஏன், மழைத் தண்ணி ஒரு சொட்டுகூட வெளியே போக வொட்டாமெ கட்டி வச்சிருக்கானே, மகராஜன்!

தபால்காரன் வந்து கடிதம் கொடுக்கிறன்.

பாலு: அப்பா! ஆபீஸிலே யிருந்து வரும்போது இன்னிக்கு எனக்குப் பென்ஸில் வாயிண்டு வாப்பா! நல்ல சொக்கா தச்சுக் கொடுத்தாத்தான் நான் ஸ்கூலுக்குப் போவேன்.

சின்னி: எனக்கு சாக்லெட் வாயிண்டு வாப்பா. இல்லாபோனு ரயில்லே ஏறிகிட்டு ஜிகுஜிகுஜிகுன்னு பாட்டி வீட்டுக்குப் போயிடுவேன்.

சீதா: யாருகிட்டே யிருந்து வந்திருக்கு?

ரங்: தாசில்தார் காசிலிங்கம் குடும்பத்தோட புறப்பட்டு இன்னிக்கு வர்ருராம்.

கிழ: யார் வர்ருங்களாம்?

கோபு: சொந்தக்காரங்கப்பா, நம்ப சொந்தக்காரங்கப்பா!

கிழ: சீதா! யாரம்மா?

சீதா: தாசில்தார் காசிலிங்கம்.

கிழ: காசிலிங்கமா? டேய் ரங்கா, இங்கே வா! ஒரு சமாசாரம் கேட்டுட்டுப்போ.

ரங்: என்னப்பா?

கோபு: வேறென்ன சொல்லப் போகிருர். சுசீலா கல்யாணத்தெப் பத்திதான்! அது ஒண்ணுதானே அப்பாவுக்குக் கவலேயே?

கிழ: காசிலிங்கம் ரொம்ப நல்ல மனுஷர். நான்கூட அவரிடம் குமாஸ்தாவாயிருந்தேன். அவர் பிள்ளை நல்லா படிச்சிருக்கான். இந்தச் சம்பந்தத்தை விட்டுவிடக் கூடாது. எப்படியாவது சுசி கழுத்திலே மூணு முடிச்சு விழுந்துட்டா...?

ரங்: ஆகட்டும்ப்பா.

சீதா: கடையிலே யிருந்து சாமான் வந்துதான் சமையல் ஆகணும்.

ரங்: டேய் கோபு! நான் சொன்னேன்னு சொல்லி ஸ்டோருக்குப் போயி என்னென்ன வேணுமோ கேட்டு வாங்கிட்டு வா.

கோபு: பழைய பாக்கி அப்படியே இருக்குதே அண்ணு?

ரங்: நீ போய்க் கேள், கொடுப்பான்.

கோபு: இப்படிக் கடன் பட்டுக் கௌரவம் சம்பாதிச்சுக்கல்லேன்னு என்ன முழுகிப் போயிடும்?

ரங்: டேய் நீ வாயை மூடிக்கிட்டுப் போறயா இல்லியா?

கோபு: சரி, நான் சொல்றது இப்பல்லாம் அர்த்தம் புரியாது.

(போகிருன்.)

காட்சி 2

ரவி ஒரு பணக்காரன். அவனது நண்பன் 'பிரதர்.' டைரி எழுதுவது ரவியின் முக்கிய வேலைகளில் ஒன்று.



ஒரு நாள் ரவி டைரி எழுதிக் கொண்டிருக்கிறான்.

'சுசி நேற்று தண்ணீர் எடுக்க வந்தபொழுது தனியாகப் பேசச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை!'

சுசீலா ரவியின் வீட்டில்தான் தண்ணீர் பிடிக்க வருவது வழக்கம். அவள் மீது அவனுக்கு ஆசை. அன்று அவன் டைரி எழுதி முடித்தவுடன் நண்பன் 'பிரதர்' பப்பி என்ற ஒரு நடனமாதுடன் வருகிறான்.

ரவி: குட் மார்னிங் பிரதர்!

பிர: ஹல்லோ, குட்மார்னிங் பிரதர்! மீட் மிஸ் பத்மினி பி.ஏ. செல்லப் பேரு பப்பி. பிரமாத டான்ஸர். அப்கோர்ஸ் அமெச்சூர். இவர் மிஸ்டர் ரவீந்திரநாத், எம்.லிட். குருநாதம் பிள்ளை ஸன். நம்ப பிரதர் ரவி. பிறவிக் கவி, வரகவி, சிவகவி, அமர கவி! கலையிலே – கலைநிதி – கலைக் கோட்டை – கலை வள்ளல்!

பப்: ஹௌ டு யூ டு?

ரவி: நமஸ்தே!

பிர: புது மாடலா இல்லே? அது அவுங்க பழக்கம். பாடிக்கிட்டே நடப்பாங்க, நடந்துகிட்டே ஆடுவாங்க.

பப்: (அழைப்பிதழைக் கொடுத்து) எங்க ஸ்கூலிலே பழைய மாணவிகள் சங்கக் கொண்டாட்டம். அதிலே நான் டான்ஸ் பண்ணப் போறேன். அதுக்கு அவசியம் நீங்கள் வரணம். நீங்க வந்து பார்த்து ரஸிச்சு சந்தோஷப் பட்டா எனக்குத் திருப்தி.

பிர: எங்களுக்கென்ன சொல். அப்போ நாங்க வர்ரோம்.

பப்: நீங்க அவசியம் வரணும். மறந்துடக்கூடாது,

பிர: அந்த விஷயமா சந்தேகமே வேண்டாம். டைரி எழுதர பேர்வழி. நீ தைரியமா இரு. எதையும் விடாமே எழுதறவரு இதை எழுதாம விட்டுடு வாரா? எழுதுவார், எழுதினபடி வருவார்.

ரவி சுசியிடம் காருக்கு ஜலம் கேட்கிறான்.

ரவி: கொஞ்சம் தண்ணி கொடுக்கிறீங்களா, காரு ரொம்ப ஹீட்டாயிடுச்சு.

சுசி: எடுத்துக்குங்க.

ரவி: ரொம்ப தாங்ஸ்! (தலை குனியும்போது இருவர் தலையும் முட்டுகிறது)

ரவி: வெரி சாரி, வெரி சாரி! தண்ணிலே ஏதோ வாசனை வருதில்லே. முனிஸிபாலிடிகாரங்க ஏதோ மருந்த போட்ருங்க...அதனுலேதான்..நல்லதுதான். நல்லதுதான். ஊரெல்லாம் தண்ணி இங்கேயே வந்து பிடிக்குதா. நீ கொஞ்சம் காலையிலே வந்துட்டா......

(சுசீலா குடமெடுத்துத் திரும்பும் போது பிரதருடன் பப்பி வருகிருள்)

பப்: ஹல்லோ சுசி! லல்லல்லலா. இங்கே இருக்கயா? உனக்காகத்தான் வர்றேன்.

சுசி: நான் தண்ணி பிடிச்சிக்கிட்டுப்போக இங்கே வந்தேன்.

பப். சுசி! நம்ம ஸ்கூல்லே நாளை வெள்ளிக்கிழமை பழைய மாணவிகள் கொண்டாட்டம். எங்க டான்ஸ் இருக்கு. கட்டாயம் வரணும், என்ன?

சுசி: ஆகட்டும்.

பப்: ஓ.கே, பார்த்தியா மறந்தே போச்சு. என் மூளையைச் சொல்லு. மிஸ் சுசி என்கூடப் படிச்சவ.... இவங்க மிஸ்டர் பிரதர்! என்ன முழிக்கறே? அவர் பேரே அதுதான்.

பிர: ஆமாம் ஸிஸ்டர் சுசி! நான் எல்லோருக்கும் பிரதர்.

பப்: போய்ட்டு வர்ரோம்.

காட்சி 3

ரங்கநாதத்தின் வீட்டில் சீதா பால் வாங்கிக் கொண்டிருக்கிருள்.

சிதா: இன்னிக்கு மனுஷாளெல்லாம் வராங்க, ரெண்டாழாக்கு கூடவே போட்டுட்டுப் போ.

பால்காரி: போட்ருங்க, போட்ருங்க, போட்டதுக்கே பணத்தைக் காணும். இதென்னம்மா மரியாதை?

கோபு: எங்க மரியாதை மலை யேறி ரொம்ப நாளாச்சம்மா.

பால்: கொடுக்க வேண்டிய பாக் கியை எண்ணி கீழே வச்சுடு. இல்லேலே, அம்மாமேலே ஆவேசம் வந்தா வாயிலே என்னப் பேச்சு வரும்னு எனக்கே தெரியாது.

கோபு: பால்காரம்மா, உள்ளதை உள்ளபடிச் சொல்றேன். உனக்கு இப்பல்லாம் பணம் கிடைக்காது. உன்மேலே ஆவேசமே வந்தாலும் சரி, ஆண்டவனே வந்தாலும் சரி.

அவளோடு சண்டை போட்டு கோபு அனுப்பியதும் வீட்டுக்கார ரின் காரியதரிசி வாடகைக்கு வரு கிறார். அவருக்கும் டோஸ் கொடுக் கிறான் கோபு. பால்காரி ரங்கநாதனை பார்க்கும் போது கண்டபடி ஏசுகி றாள்.

* * *

ரங்கநாதனைக் கேளாமலேயே பாலு தவிர மற்றவர்கள் யாவரும் பள்ளி விழாவுக்குப் போகின்றனர். திரும்பும்போது ரவி அவர்களை ரங்க நாதனின் வீட்டில் கொண்டு விடுகி றான். மனைவியுடன் இது விஷய மாகச் சண்டையிட்ட ரங்கநாதன் சுசீயைக் கோபிக்கிறார்,

ரங்: சுசி! ஏன் கார்லே வந்தே?

சுசி: நான் வர்லேண்ணு...

ரங்: வாயைத் திறந்தா கொன் னுப்புடுவேன். மானம், ஈனமில்லாத மரக்கட்டை! நாளையிலேருந்து தண்ணி கொண்டார நீ அங்கே போகக்கூடாது. காலே எடுத்து வச்சே,வெட்டி பலி போட்டுடுவேன். தெரியுமா?

ரவி: மன்னிக்கணும் ஸார்! தப் பெல்லாம் என்மேலேதான். சுசிலா மேலேதப்பே இல்லே. நான்தான்......

ரங்: தப்பு யார் மேலே யிருந்தா லும் தண்டனை எங்களுக்குத்தான் ஸார். நாங்க பெண்ணைப் பெத்த வங்க, அதோடே பணமில்லாத வங்க. அந்தக்கவலே உனக்கு அடி யோட இல்லே. காரணம் நீ ஆம்பளை, பணக்காரன். அதோடே படிச்சவன். தரித்திரத்தாலே நாங்க தவிக்கிறது போதும். எங்க தலைமேலே அவ மானத்தைச் சுமத்தி எங்களை அடி யோடே நாசமாக்காதேப்பா. உனக் குப் புண்ணியமுண்டு. போயிட்டு வா.

ரவி: ஸார்! எம்பேச்சை கொஞ் சம் காது கொடுத்துக் கேளுங்க.

ரங்: ஒண்ணும் கேட்கவேண்டிய தில்லே. நீ படிச்சவன். உனக்கு இவ ளவுகூட... நீ போயிட்டுவாப்பா. உனக்கு ஒரு நமஸ்காரம்.

கிழ: அதுக்குத்தான் கெட் டையோ குட்டையோ ஒண்ணு பாத்து சீக்கிரம் கல்யாணத்தெ முடிச் சுப்புடுன்னு தலைமாடா அடிச்சுக்க றேன். கேக்கறியா?

ரங்: அப்பப்பா...அவ கலியாண மில்லே. என் கருமாந்திரத்தை முடிச் சிப்புடுங்கோ மொதல்லே. நிம்மதி யாப் போயிடும்.

காட்சி 4

ரவி உடல் நலிவுற்றவன். அவ னுக்கு மணமாவது அவன் உயி ருக்கே ஆபத்து. ஆனால் அவன் சுசீயை மனமாரக் காதலிக்கிறான். சுசீயை மணக்க வீட்டிலே ஒரு நாட கம் நடக்கிறது. பால்கனியிலிருந்து குதிக்க முயலுகிறான் ரவி. பிரதர் தடுக்கிறான்,

பிர: ரவீ ..ரவீ!...ஏய் ரவீ!!

ரவி: விடு...விடு. விடு பிரதர்!

பிர: நில்லு நில்லு! என் பேச் சைக் கேளு பிரதர்! நீ செத்துட்டா என்ன சாதிக்க முடியும்? உயிர் இருந்தா உப்பு போட்ட கஞ்சியாவது குடிக்கலாம்.

ரவி: விடு பிரதர் என்னை. விடு! நான் செத்துதான் ஆகணும். உயி ரோடு இருந்து என்ன பிரயோஜனம்? உண்மைக் காதல் நிறைவேறாத வாழ்வு ஒரு வாழ்வா? விடு பிரதர் என்னை! அரசகுமாரிக்காக உயி ரைக் கொடுத்து அழியாப் புகழை அடைந்தான் அம்பிகாபதி...

பிர: சுசிலாவிற்காக உயிரைக் கொடுத்து நீ பேப்பர் புகழாவது அடையலாம்னு நினைக்கிறே!

ரவி: குறுக்கிடாதே, ஒதுங்கு பிரதர்!...என்ன பிரதர் என்னை விட்டுட்டே?

பிர: லக்ஷ்மி பார்த்துட்டுப் போயாச்சு. வா பிரதர்!

ரவி: பிரதர்! இப்போ சுசி என்னைப் பாத்தா என்ன பிரதர் நினைப்பா?

பிர: என்ன நினைப்பா? ஒண்ணுமில்லாத லவ்வுக்காக இப்படி உயிரை விட்டுட்றேன்னுரே. நாளைக்கு குடும்பத்திலேசிக்கிக்கிட்டா இவரு எப்படிக் குப்பைக் கொட்டுவாருன்னு நினைப்பா.

ரவியின் தாயார் ஓடி வருகிருள்.

தாயா: அட கண்ணு ரவி!...ரவீ என்னடாப்பா?

பிர; (ரவியின் காதோடு) மிரள மிரள முழி!

(ரவி முழிக்கிருன்)

தாயா: கண்ணு! உனக்கென்ன கஷ்டம் வந்துடுச்சுடா? என் தலை மேலே கல்லைப் போட்டுட்டுப் போக பார்க்கறயேடா! ஏண்டாப்பா இப்படி மிரள மிரள முழிக்கிறே?

பிர: ஸ்...இப்படி வாங்க மதர்! பெத்த பிள்ளைக்கு எந்தக் கஷ்டம் வந்தாலும் அதைத் தீர்க்கக் கூடியவங்க பெத்த தாய்தான். அதனுலேதான் சொல்றேன். உங்க குழந்தை பக்கத்து வீட்டுக் குழந்தை சுசீலாமேலே அளவுக்குமீறின ஆசை வைச்சுடுச்சு. உங்கபிள்ளை உயிரோடு இருக்கணுமின்ன, அந்தப்பொண்ணைப் பிடிச்சுக் கட்டிப் போடணும், இல்லே..

அவன் பயமுறுத்தலினுல் ரவியின் தாயார் சுசீயைத் தன் மகனுக்கு மணமுடிக்கிருள். நிச்சயமான வுடனேயே சுசீ தகப்பனை இழக்கிருள். ஆயிரம் ரூபாய் கடன்வாங்கி அவள் மணத்தை முடிக்கிருர் ரங்கநாதன். மணமான அன்று ரவிக்கு மார்வலி வரவே சுசிலாவை யாவரும் துரதிருஷ்டசாலி என்று கூறுகின்றனர். அவனுடன் அன்றிரவு தங்கக்கூடாதென எச்சரிக்கிருர்கள். மனம் வருந்தி அவள் தனித்திருக்கும் போது அவளிடம் வருகிருன் ரவி.

ரவி: சுசீ...! சுசீ!!

சுசீ: ஆ, நீங்களா? இப்போ எப்படி இருக்கு? டாக்டர் நாள் பூரா படுக்கையை விட்டே அசையக் கூடாதுன்னு சொன்னுராமே, ஏன் வந்திங்க?

ரவி: டாக்டர் சும்மா பயப்படுத்திட்டாரே ஒழிய எனக்கு ஒண்ணுமில்லே சுசீ!

ஒரு மாதிரியாகப் பேசி பின் அவளை எப்படியோ தனக்கு இணங்க வைத்து விடுகிருன். அதன் பலன் பிரமனும் யமனும் ஒரே நாளில் தங்கள் கடமையைச் செய்து விடுகின்றனர்! அந்த ஒரு நாள் சேர்க்கையிலேயே சுசீ கருவுற்று விடுகிருள். தன் மனைவியுடன் தான் கூடியிருந்ததை டைரியில் குறித்து விட்டுப் படுத்த ரவி மறுநாள் எழுந்திருக்கவேயில்லை!

காட்சி 5

சுசீலா கணவன் வீட்டில் தங்கியிருக்கிருள். அவள் கர்ப்பிணி என்பதறிந்த அவள் மாமியார், அதற்குக் காரணம் 'பிரதர்'தான் என்று தீர்மானித்து வீட்டைவிட்டே துரத்தி விடுகிருள். தரித்திர நாராயணனுகி விட்ட ரங்கநாதன் மனமிடிந்து போய் சுசிலாவையே ஏசுகிருர்.

ரங்: என்ன அவமானம்? இந்த மானங்கெட்ட வாழ்வு வாழாமே மடிஞ்சு போயிட்டா பீடை விட்டுப் போகுது.

சிதா: என்னங்க இது! நீங்ககூட அவுங்களாட்டம்...

ரங்: மூடு வாயை!

சுசீ: அண்ணு! அப்படியே செய்யறேன். கட்டாயம் அப்படியே செய்துட்றேன். ஆனு நீயும் இதை நம்பறையாண்ணு?

ரங்: நான் நம்பறேன், நம்பல்லே. அதைப்பற்றி கணக்கில்லே. உலகத்தை எப்படி நம்ப வைப்பே? எப்படி தலை நிமிர்ந்து நடப்பே? உலகத்துக்கு என்ன சமாதானம் சொல்லுவே?

கோபு: உலகம்..... உலகம்......! எங்கே இருக்குது அந்த உலகம்?

ரங்: நாளைக்கு நாலுபேர் நடமாட்ற எடத்துலே நடந்து போனாத் தெரியும். ஊர்லே நாலுபேர் காரி உமிஞ்சாத் தெரியும். உன்னை. என்னை. அவளை. நம்ம வம்ச பரம்பரையை இழுத்து கண்டபடி பேசினா அப்போ தெரியும். உலகம் எது. எங்கே இருக்குதுன்னு.

கோபு: உலகமும் இல்லே. மண்ணாங்கட்டியும் இல்லே. 'உலகம் அப்படிச் சொல்லும்; பத்துப்பேர் இப்படி பேசுவாங்கன்னு நினைச்சு நினைச்சே நாம் இந்த நிலைமைக்கு வந்திருக்கோம். இனிமே இந்த உலகத்துக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டிய அவசியமே இல்லே.

ரங்: கட்டுப்படாமெ கெட்டு அலையப் போறியா?

கோபு: கெட்டு அலைய வேண்டிய அவ்வளவு கேவலமான தப்பு நாம் எதுவும் செய்துடலே.

ரங்: உலகம் ஒப்புக்க முடியாதது எது செய்தாலும் அது தப்புத்தான். பத்துப்பேர் சம்மதம் பெற்று செய்ய வேண்டியது சிலது உண்டு. 'என் இஷ்டம் இது. நான் 'சொல்றேன்'னு அதை நம்பவேண்டிய அவசியம் உலகத்துக்கு இல்லே.

கோபு: அப்போ உலக நிந்தனைக்காக அவளை உயிரைவிடச் சொல்றியா?

ரங்: இந்த வாழ்வு வாழறதை விட...

கோபு: அண்ணா! உங்கள் உலகத்துக்கு பயந்து, என் பேச்சையும் கேளாமல், உத்தம சகோதரியின் வாழ்க்கையைப் பாழாக்கி விட்டாய். ஒரே ரத்தம் ஓடும், உன் உயிரைப் போல் பாதுகாத்த சகோதரி சுசிலாவை அவளது உள்ளம் அறிந்த நீயே நம்ப மறுக்கிறாய். நீ லஞ்சம் வாங்கியதாக உலகம் நம்பறது. ஆனால்... நீ...

ரங்: அதனாலேதான் அதனுடைய பலனை அனுபவிக்கிறேன்.

கோபு: அண்ணா! அப்படி அனுபவிக்க நாங்கள் தயாராயில்லை. உலகத்தை எதிர்க்கிறோம். பார்ப்போம் உலகம் என்ன செய்யும் என்று. பணமுள்ளவர்களுக்குப் பல்லைக் காட்டி சாஷ்டாங்க தண்டனிடும் இந்த உலகத்துக்குப் பயந்து சாக நாங்கள் சித்தமாயில்லே. வாம்மா சுசிலா, வா, இந்த உலகம் நம்மை என்ன செய்கிறதென்று பார்ப்போம்.

சுசி: அண்ணா.. அண்ணா...

கோபுவுடன் வெளியேறிய சுசிலா சில மாதங்களில் ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுக்கிறாள்.

ரூ. 5க்கு
15 ஜூவெல் கைக்கடிகாரம்



ரூ. 5-க்கு ஒரு பவுண்டன் பேனாவும், 15 ஜூவெல் கைக்கடிகாரமும் அடையலாம். அழகுக்கும், உறுதிக்கும் 15 வருஷ உத்தரவாதம்.

AMERiCAN SWISS
WATCH SUPPLIER

Putli Ghar (P.P.M.) Amritsar.

ரூ. 5க்கு ஒரு ரேடியோ

மின்சாரமோ, பாட்டரியோ இல்லாமல், ஸ்பஷ்டமான, இனிய நாதத்தைக் கொடுக்கும். எமது புதிய திட்டத்தை பிரபலப்படுத்தவே இவ்விதம் கொடுக்கிறோம். குறைந்த அளவே ஸ்டாக் உள்ளது. ஏமாற்ற மடைவதைத் தவிர்க்க உடனே விண்ணப்பித்துக் கொள்ளவும்.

AMERICAN CORPORATION
P. B. No. 86. (P. P. M.) AMRITSAR

காட்சி 5

பிள்ளையார் சதுர்த்தி வருகிறது. குழந்தைகள் ரங்கநாதனைத் தொந்திரவு செய்கின்றனர்.

பாலு: அப்பா, அப்பா! எங்களுக்குக்கூடப் பிள்ளையார் வாங்கிக் குடப்பா! நாங்ககூட பூஜை செய்யரோம்.

சீதா: நீங்க வெளியே போயி வேடிக்கை பார்த்துக்கிட்டிருங்க, அப்பா கடைக்குப் போயி வாங்கிட்டு வருவாரு. என் கண்ணில்லே!

பாலு: வா சின்னி!

இருவரும் போய்விடுகின்றனர். ரங்கநாதன் துக்கம் தாங்காது விழிக்கிருர்.

சீதா: என்னங்க இது? ஏன் அப்படிப் பாக்கறீங்க? எதுக்காக சொல்லுங்க? எனக்கென்னமோ பயமாயிருக்குது. இப்படிப்பாருங்க.

ரங்: சீதா! ....

ரங்; நம்ம கல்யாணம் கவனமிருக்குதா உனக்கு?

சீதா: அந்த விஷயம் இப்போ எதுக்கு?

ரங்; நீ மறந்திருப்பாய். என் மனத்திரையில் அந்த விஷயம் என்றும் மாருது. அன்ற நீ கட்டழகு வாய்ந்த கன்னிகா ரத்னம். நான் கவலே யுணராத கல்லூரி மாணவன். கலைமகள் போன்ற உன் வீணுகானம் கவிதை நிறைந்த என் உள்ளத்தில் அலைமோதச் செய்தது. நாதமும் கீதமும் கலந்த அந்தக் கானுமுதத்தைக் கணவன் மனைவியாகப் பருகப் பேராவல் கொண்டேன். எண்ணம் ஈடேறியது. ஆனுல் மின்னல் போல் மறைந்து விட்டது, நம் இன்ப வாழ்வு. வாழ்க்கைப் படகு வழி தப்பியது. உன் குரலில் உள்ள குளுமையும் போச்சு.

சீதா: என்னுங்க. நீங்க சும்மா இருக்கமாட்டீங்க? எனக்கென்னமோ பயமாயிருக்குது.

ரங்: சீதா! அந்தப் பங்களா—அந்த மூணு மாடி வீடு, எப்பவாவது நல்ல நிலவுகாலத்துலே நீ பார்த்திருக்கிருயா?

சீதா: ஏன்?

ரங்: பார்க்கும்போது உனக்கு என்ன தோணுது.

சீதா: நல்லா இருக்குதுன்னு தோணுது?

ரங்: அவ்வளவு தானு? நம்ம வாழ்நாள்ளே ஒருநாள்—வேண்டாம் ஒரு க்ஷணநேரமாவது அதிலே இருந்து அனுபவிக்கணும்னு உனக்கு ஆசை தோணலியா?

சீதா: நல்லா இருக்குது! எல்லாருக்கும் பங்களா வாசம் கிடைக்குமா? வீணு ஆசை பட்டு என்ன பண்றது?

ரங்: ஆசையில்லே சீதா. பங்களா வேண்டாம்; லக்ஷ லக்ஷமா பணம் வேண்டாம்; ஒரு நாளாவது எவ்வித கஷ்டநிஷ்டூரமில்லாமெ — கவலேயில்லாமெ — காலங் கழிக்கிற.பாக்யம் கிடைக்குமா, நம்ம வாழ்நாள்ளே? கிடையாது சீதா, கிடையாது!

சீதா: என்னங்க இது? சும்மா இருங்க. இப்படிப் பாருங்க. பண்டிகை நாள். அதுவும் நம்மோடெ இருந்தா அக்கறை இல்லே. குழந்தைகளுக்காகவாவது எங்கேயாவது ஒரு ரெண்டு ரூபா வாங்கி வந்திங்கன்னு......

அப்போது குழந்தைகள் வரவே அவர்களுடன் கடைத்தெருவுக்குக் கிளம்புகிருர் ரங்கநாதன். குழந்தைகளைக் கொன்று மனைவியுடன் தானும் சாகத் தீர்மானித்த அவர் சின்னியைக் கிணற்றில் போட்டதைக் கண்டு பாலு ஓடி வந்துவிடுகிருன். குழந்தையைக் கொன்றதற்காகப் போலீஸார் முன் நிற்கிருர் அவர்.

ரங்: பாவமோ, புண்ணியமோ, எனக்கு எதுவும் தெரியாது; சட்டப் பிரகாரம் நான் செய்தது அக்கிரமமாயிருக்கலாம். ஆனு எனக்கு அதை விடச் சிலாக்யமான வழி தோணலே. நான் செத்து என் குழந்தை குட்டிகளும் என் மனைவியும் அனதையா

பிச்சை யெடுத்துப் பிழைக்கிறது எனக்கு இஷ்டமில்லே. அவங்களை யெல்லாம் முதல்லே கொன்னுட்டு நான் சாகறதுதான் நல்லதுண்ணு நெனைச்சுட்டேன். இந்த மாதிரி அகப் பட்டுக்காமெ இருந்தா, அந்த ரெண்டு குழந்தைகளையும் கிணத் திலே போட்டுட்டு, என் மனைவிக்கு விஷம் கொடுத்து நானும் சாப்பிட்டு சாகறதாகத் தீர்மானம். அது நடக் கல்லே. இப்பவும் நீங்க உத்தரவு கொடுத்தா அது போலவே செய்யத் தயார். வாழறதுக்கு உதவாத சமுகம், சட்டம் சாகறதுக்கு தடங்கலா நிக்குதே!

கோபு விஷயமறிந்து ஓடி வருகி ருன். ஆனுல் ரங்கநாதன் சிறைத் தண்டனை பெறுகிருர். அவர் மகன் பாலு வளர்ந்து படித்து குமாஸ்தா வாக வேலை ஏற்கிருன். சுசீலாவின் குமாரி ராணி, கல்லூரியில் படிக்கி ருள். அவள் சங்கர் என்ற கல் லூரி மாணவனைக் காதலிக்கிருள். அவன் எழுதிய காதல் கடிதம் சுசி லாவின் கைக்குக் கிடைக்கிறது. கோபுவிடம் ஓடிவருகிருள்.

சுசி: அண்ணு, அண்ணு!

கோபு: என்ன சுசி? குடிமுழுகிப் போனுப்பலே இந்த நேரத்திலே...

சுசி: குடிதான் முழுகிப்போச் சண்ணு.

கோபு: என்ன விஷயம்?

சுசி: நம்ம ராணி......

கோபு: ராணிக்கு என்ன?

சுசி: இதைப் படிச்சுப் பாரு. சில நாளாகவே எனக்குக் கொஞ்சம் சந்தேகம். ஆனு இவ்வளவு தூரத் துக்கு வந்துடும்னு எதிர்பார்க்கல்லே.

கோபு: என்னசெய்யச் சொல்றே?

சுசி: அதென்ன அண்ணு அவ்வ ளவு அலட்சியமா கேட்கிறே? வயசு வந்த பொண்ணு......

கோபு: அவளை நீ கட்டுத்திட்டத் திலே கொண்டு வந்திருக்கணும்.

சுசி: என்னுலான வரைக்கும் புத்திமதிகளெல்லாம் சொல்லித் தான் வளர்த்தேன். ரொம்ப கட்டுத் திட்டத்திலே வைக்கலாம்னு, காலே ஜிலே படிக்கிற பொண்ணு. அதிகமா கண்டிச்சா அவ மனசு என்ன கஷ் டப்படுமோ...

கோபு: அப்போ நான் கண்டிக் கவா?

சுசி: அதுக்காகச் சொல்ல வர் லேண்ணு. அறியாத வயசு. ஆழம் தெரியாமெ விழுந்து அவ வாழ்வும் என் மாதிரி ஆயிடாமெ...

கோபு: சுசி! என்ன இது, சின் னக்குழந்தை மாதிரி? என்ன செய்ய ணும்னு சொல்லு. இப்பவே செய்ய றேன்.

சுசி: சீக்கிரமா அவ கல்யா ணத்தை முடிச்சு ஒருத்தர் கையிலே பிடிச்சுக் கொடுத்துட்டா..

கோபு: அவ்வளவுதானே. நல்ல இடமா பாத்துக் கொடுத்துட லாம்.

சுசி: அவ மனசுக்குப் பிடிச்ச இடமே நல்ல இடம். வேறே இடம் எதுக்காகண்ணு தேடணும்?

கோபு: எனக்கு எல்லாம் தெரி யும். இந்த சங்கர் நம் ஜகன்னுதத்தி னுடைய பிள்ளை. நல்ல பையன். அவரைப் பார்த்துப் பேசி கல்யா ணத்தெ முடிச்சுப்புடுவோம். கவலைப் படாமெ இரு, என்ன?

சுசி: பெண்ணுச்சே அண்ணு? பிள்ளையானு கவலையே இல்லே, ஏதோ நம்ம கடமையை நாம் செய் துட்டா...

கோபு: கடமையைச் செய்துடு வோம். நீ மட்டும் கண்ணீர் சொரி யாமெ இரு, என்ன?

திருமண ஏற்பாடு முடிந்ததும் கோபுவும் சுசீலாவும் ரங்கநாதன்வீட் டிற்குச் செல்கிருர்கள். அவர் அப் போதுதான் விடுதலை பெற்று வந் திருக்கிருர்.

பாலு: யாரு......யாரு நீங்க......? அத்தே...சித்தப்பா?

சுசி: யாரு.... பாலுவா? பெரிய ஆம்பிள்ளே ஆயிட்டியே?

கோபு: தேவலேயே, ஆளைப் பார்த்தவுடனே அடையாளம் கண்டு பிடிச்சுட்டானே!

சுசி: அண்ணி .. அண்ணி!

சிதா: எவ்வளவு காலம் பொறுத்து நமக்கு இந்தப் பாக்கியம் கிடைச்ச தம்மா! இந்த ஜன்மத்திலே பார்க்கப் போறமான்னு ஆயிட்டது.

சுசி: உங்களைக்கண்டு பிடிக்க நாங்க தேடாத இடமே இல்லே அண்ணி.

கோபு: அண்ணுவை எத்த னேயோதரம் கேட்டுப் பார்த்தேன். சொல்லலே. ஏன் அண்ணி, நீங்க இருந்த இடம் அவருக்காவது தெரி யுமா?

பாலு: தெரியாமெ என்ன?

கோபு: அப்பொ தெரிஞ்சுமா சொல்லலே?

சிதா: எப்படியோ. இப்பவாவது ஒண்ணு சேர்ந்தோமே...வா உட் காரு.

பாலு: ஏன் சித்தப்பா, நாங்க இருக்கிற இடம்தான் உங்களுக்குத் தெரியலே. போகட்டும்! நீங்க இருக் கிற இடத்தையாவது எங்களுக்குத் தெரியப்படுத்தக் கூடாது?

கோபு: தெரியப்படுத்தியாச்சுடா தெள்ளுமணி, உங்க அப்பா கிட்டே.

பாலு: அவர் எங்ககிட்டே சொல் லவே இல்லேயே!

கோபு: அதுதாண்டா உங்கப்பா வினுடைய உயர்ந்த குணம்.

(ரங்கநாதன் வருகிறார்)

பாலு: அப்பா..அத்தே, சித்தப்பா எல்லாம் வந்திருக்காங்க.

சுசி: அண்ணு.....!

(ரங்கநாதன் மௌனம் சாதிக் கிறார்.)

கோபு: நாங்க வர்றோம்,அண்ணி!

சிதா: என்ன கோபு, வந்ததும் வராததுமா போறேன்றே?

கோபு: பின்னே, வீடு தேடிவந்த வங்களோடெ வீட்டுக்குப் பெரியவர் முகங் கொடுத்துப் பேசாமெ இருந்தா வேறென்ன செய்றது அண்ணி?

சிதா: இப்போ அவர் மனசு ஒரு நிலேயிலே இல்லே. உனக்குத் தெரி யாத விஷயமா கோபு......?

கோபு: அண்ணு! ஒரு முக்கிய மான விஷயத்திலே உங்க அபிப்பி ராயத்தைத் தெரிஞ்சுக்க வந்தோம்.

ரங்: என் அபிப்பிராயம் தெரிஞ்சு உனக்கென்ன ஆகணும் கோபு? அதுவும் நான் இப்போ இருக்கிற நிலேயில்?

கோபு: அசந்தர்ப்ப சூழ் நிலேயி னல் ஒருவர் மீது நமக்குள்ள அன்பு, அபிமானம் இவைகளை மாற்றிவிடக் கூடாது. தாங்கள் சிறை சென்றதற் காக இந்தச் சீர்கெட்ட சமூகம் தங்க ளைக் குறைகூறலாம். அதற்காக நீங் கள் சித்தம் கலங்க வேண்டாம். அவ சியமே இல்லே. இந்த உளுத்துப் போன உலகமும் சீர்கெட்ட சமூக மும் உங்களை இன்னமும் விட்டபா டில்லே அண்ணு.

சிதா: பாலு. ஆபீஸுக்கு நேர மாகலே?

பாலு: போயிட்டு வரேன் சித்தப்பா, இருப்பீங்கள்ளே?

கோபு: உம்...அண்ணு நம்ப சுசிலாவினுடைய பொண்ணுக்குக் கலியாணம் பண்ணலாம்னு யோசனே.

சிதா: சுசிலாவுக்குப் பொண்ணு? சுசி! அவளே ஏன் அழைச்சிட்டு வரலே?

சுசி: காலேஜுக்குப் போயிருந்தா, அண்ணி.

சிதா: படிக்கிற பொண்ணுக்கு அதுக்குள்ளே கல்யாணம் எதுக்கு?

கோபு: நல்ல சம்பந்தம் ஒண்ணு கிடைச்சுது. காலாகாலத்திலே கல் யாணம் பண்ணிடுவோம்னு என் அபிப்பிராயம். குடும்பத்துக்கு பெரிய வங்க நீங்க வந்திருந்து நடத்தி வைக் கணும்.

சுசி: கல்யாணத்துக்குன்னு என்ன, நீங்க எல்லாரும் அங்கேயே

வந்துடுங்க அண்ணி. ஏக குடும்ப மாக இருக்கலாம்.

சீதா: அந்த வார்த்தையை கோபு சொல்ல வேண்டாமா சுசி?

கோபு: அண்ணி! தாயைப் போல வளர்த்த நீங்களா இப்படிப் பேசு நீங்க? என் மனசு உங்களுக்குத் தெரியாதா? நான் வேறே என் வாயாலே சொல்லணுமா?

சீதா: சும்மா பேச்சுக்கு சொன் னேன் கோபு. என்னுங்க பேசாமே இருக்கிங்களே? கேட்கிருங்களே சொல்லுங்க.. நீங்க போயிட்டு வாங்க.

ரங்: நீங்க போயிட்டு வாங்க.

கோபு: அப்படின்னு?

ரங்: நான் வரலேன்னு அர்த்தம்.

சுசி: நீ வரமாட்டியா அண்ணு? ..பாவி எனக்குப் பிறந்தது ஒரே பெண். பாவமோ புண்ணியமோ பெற்றேன். பரிந்து வளர்த்தேன். உலகில் உன்னையன்றி எனக்கு வேறு யாரண்ணு? நீ வராமல் நடத்த எங்களுக்கு மனம் வருமா? இன் னுமா இந்தப் பிடிவாதம்?

கோபு: கட்டாயம். அன்றைக் கும் இன்றைக்கும் என்ன வித்தி யாசம்? உன்னை களங்கமற்றவள் என்று உலகம் ஒப்புக் கொண்டதா?

சுசி: அந்த அபாண்டம் என னோடு நிற்காமல் என் குழந்தையின் மீதும் சுமத்தி அழியாப் பழிக்கு நீயே ஆளாக்கப் போகிருயா அண்ணு?

ரங்: அதெல்லா மொண்ணுமில் லேம்மா. நாலு பேர் நடுவிலே தலை நிமிர்ந்து நடக்கற நிலையிலே நான் இல்லே.

சுசி: நமக்குள்ளே என்னண்ணு? நம் மனமே நமக்குச் சாட்சி.

கோபு: சுசி! உண்மையிலே அவ ருக்கு உன் மேலே ஏற்பட்ட அபிப் பிராயம் அணுவளவும் மாறலே. அதை மறைச்சு எதையோ பேசுருர்.

சுசி: அப்படியா அண்ணு? அது உண்மையா...?

ரங்: எதுவாணு என்ன? என்னைக் கட்டுப்படுத்த வேண்டாம். அவங் களை அழைச்சுக்கிட்டுப் போங்க.

சுசி: அப்போ நீ வரமாட்டியா அண்ணு?

சீதா: வருவாரம்மா. வராமெ இருப்பாரா?

சுசி: அண்ணு! நீ வரதில்லேன்னு கட்டாயம் இந்தக் கல்யாணத்தை நிறுத்தி விடுவேன். அவ கலயாண மாகாமெ கன்னியாகவே காலங் கழிக்கட்டும். நல்லா யோசிச்சு சொல்லு அண்ணு. அவள் வாழ்வு உன் கையில்தானிருக்கிறது.

சீதா: என்னுங்க, சரின்னு சொல்லுங்க.

ரங்: சொல்லிட்டியே நீயேதான். பத்து வருஷகாலம் சம்சாரம் நடத்திட் டதுக்காக என்னைப் பார்த்து உனக்கே இவ்வளவு ஏளனமாப் போச்சுன்னு மத்தவங்களுக்குக் கேட்கணுமா? ரொம்ப மதிப்பாங்க;

கோபு: அண்ணு! முகூர்த்த வேளைக்கு வந்து ஆசிர்வாதம் பண் ணுங்க. அதாவது செய்யுங்கண்ணு.

சுசி: என்ன அண்ணு...?

ரங்: சரி, அம்மா!

காட்சி 6

மணவீட்டிலே யாவரும் கூடி யிருக்கிருர்கள். மணப்பெண் ணுக்கு அலங்காரம் நடக்கிறது.

சீதா: இன்னைக்கி ஒருநாளைக்கு மட்டும் வாயெ மூடிக்கிட்டு எங்க பழைய காலத்து பத்ததிபோல சிங் காரிச்சுக்கணும். கொஞ்சம்குனிம்மா. இப்படி நிமிந்து நின்னு எப்படி? என்ன வளந்து போச்சுமமா இந்தப் பொண்ணு? என்னைவிட ஒருபடி ஒசந்துட்டதே!

சுசி: எல்லாம் அவ மாமாவெப் போல.

சீதா: பாலுவா? வாடா வா. வா! அன்னியார் அசலார் இல்லே, உங்க அத்தெ பொண்ணுதான்.

சுசி: என்ன பாலு?

பாலு : அப்பா வந்துட்டாரு.

சீதா : வந்துட்டாரா?

சுசி : அண்ணுவா? அண்ணு...!

ரங் : சுசிலா !

சுசி : அண்ணு! அண்ணு!

ரங் : அண்ணு என்ற பேருக்கு அருகதையற்றவன் அம்மா. தெரிஞ்சோ தெரியாமலோ உனக்குத் துரோகம் செய்து விட்டேனம்மா. உன் வாழ்க்கையைப் பாழாக்கிவிட்டேன் சுசிலா.

சுசி : அப்படியெல்லாம் சொல்லாதே அண்ணு. என் விதி என்னை படாதபாடு படுத்திவிட்டது.

கோபு : நடந்து போனதெப்பத்தி எத்தனை தடவை பேசினுலும் என்ன பிரயோஜனம்? வாங்க முகூர்த்த நேரம் ஆறது...அண்ணு! நம்ம சுசியினுடைய பொண்ணு ராணி.

சீதா : உங்க பெரிய மாமாம்மா!

சுசி : மாமாவுக்கு நமஸ்காரம் பண்ணும்மா.

ராணி : நமஸ்தே மாமா.

சுசி : நமஸ்காரம் பண்ணும்மா. விழுந்து கும்பிடு.

கோபு : ஆகட்டும். ஆகட்டும். முகூர்த்த வேளையாச்சு. அண்ணு போய் ஸ்நானம் பண்ணு.

காட்சி 7

சங்கரின் தகப்பனர் ரவியின் தகப்பனரை வரவேற்கிருர். ரவியின் தாயும் வருகிருள். அப்போது சுசீலா கோபுவிடம் சாவிக் கொத்தைக் கொடுக்கிருள்.

ச. தகப்பனர் : வாங்க. வாங்க. என்ன இவ்வளவு நேரம் பொறுத்து?

ரவி. த : தெபாரு தெபாரு! நாங்களா நேரம் பொறுத்து வர்ரோம்? ரயில் நேரம் பொறுத்து வந்தா நாங்களும் நேரம் பொறுத்து வர்ரோம்.

ரவி. தாயார் : ஆமா .... இப்போ சாவி கொண்டு கொடுத்தாங்களே அந்தம்மா யாரு?

ச. தாயார் : அவங்களா; கல்யாணப் பொண்ணினுடைய அம்மா சுசிலா.

ர. தா : நீயா? அடி ஈனம் மானம் கெட்டவளே! பெத்து வளத்துக் கலயாணம் கூடப் பண்றயா?

சங். தகப் : என்னம்மா, என்ன சங்கதி?

ரவி. தாயார் : சொல்றேன் வாங்க.

ச. தா : நிறுத்துங்க. ஈரேழு ஜென்மத்துக்கும் இந்த மாதிரி சம்பந்தம் வேண்டாம். இந்த அவமானத்தெ யாரு தாங்கறது ?

கோபு : என்ன, என்ன சமாசாரம் நடந்தது ?

சங். தா : எதுவும் நடக்கறதுக்கு முன்னயே உண்மை தெரிஞ்சுட்டது. கண்ணெ முழிச்சுக்கிட்டோம். நீங்க பெரிய லட்சாதி பிரபுவா இருக்கலாம். உங்க பணத்தை பாத்து உங்க பங்களாவெப் பாத்து—உங்க பொண்ணினுடைய அழகெப் பாத்து நாங்க சம்பந்தம் பண்ணிக்க வரல்லே. நல்ல வம்சம்; நல்ல குலம்; மானம் மரியாதை உடையவங்கன்னு நெனேச்சு ......வந்தோம்?

கோபு : இப்ப எங்க வம்சத்துக்கும் மானம், மரியாதைக்கும் என்ன குறைவு வந்துவிட்டது?

ச. தா : எது வந்தா எங்களுக்கென்ன? இந்தக் கல்யாணம் நடக்கக் கூடாது. உங்க பொண்ணு எங்களுக்கு வேணடாம். அவ்வளவு தான்.

கோபு : ஏம்மா பேச்சை வளர்த்த றீங்க? என்ன நடந்தது? விஷயத்தைச் சொல்லுங்க.

ச. தா : நாங்க எதுக்காகச் சொல்லணும்? அதோ அவங்களைக் கேளுங்க. சொல்லுவாங்க.

சங்கர் : அம்மா! என்னம்மா இது?

ச. தா : என்னவா? அதோ அந்தம்மா, உன் அழகான மாமியார் இருக்கிருளே, அவள் புருஷன் செத்

துப்போனப்புறம் கர்ப்பமானுளாம். இந்தப் பொண்ணு, கட்டின புருஷனுக்குப் பொறந்ததில்லியாம்.

சுசி: மாமி! அவளுடைய வாழ்வு பாழாக வேண்டியதுதானு? இப்பவாவது என் பேச்சை நம்பமாட்டீங்களா? நான் ஒரு பாவமும் அறியமாட்டேன். இவள் உங்க பேத்தி உங்கள் பிள்ளையின் பெண். அவர் ஆத்மா மேல் ஆணை. அவளுடைய வாழ்க்கை உங்கள் கையில்தான் இருக்கிறது. மாமி. மாமி! பழி பாவம் அறியாத பால் வடியும் அவள் முகத்தைப் பார்த்தாவது சொல்லுங்க. அவள் மேலே கூட ஓங்களுக்கு வஞ்சமா?

மாமியார்: மாமி என்னடி மாமி? எங்களுக்கென்ன வஞ்சம்? எங்களுக்குள்ள சிநேகத்தை ஓட்டி உண்மையைச் சொல்லவேண்டி வந்தது. உங்க பொண்ணெ அவுங்க கட்டிக்கிறதை நாங்களா வேண்டான்னேம்?

ராணி: அம்மா! அம்மா !!

சுசி: இந்த அபாக்கியவதி வயத்துலே ஏம்மா பொறந்தே நீ? எம் பாவத்தையும் ஒன் தலையிலே சுமத்தறத்துக்கெ உன்னெ பெத்தேம்மா.

ராணி: அம்மா!

கோபு: ஒரு நிமிஷம் நில்லுங்க எல்லோரும்...இதோ ஒரு லட்சம். இன்னும் லட்சருபா மதிப்புள்ள ஆஸ்தி கொடுக்கறேன். அதுவும் போதாதென்ருல் என்னுடைய ஆஸ்தி அவ்வளவையும் கொடுக்கறேன்.

ரங்: கோபு! என்னடா, உன் பைத்தியம்?

கோபு: பைத்தியமில்லேஅண்ணு பணம்! பணத்தெக் குடுத்து மாப்பிள்ளையை வாங்கறேன். இந்தப் பாழும் சமூகம் பணத்துக்கு அடிமை என்றதெ நிருபிக்கப் போறேன். பார்ப்போம், நம்ம ராணிக்குக் கல்யாணம் ஆகாமெ போறதான்னு? என்ன சொல்றீங்க?

சங்: அப்பா! எது எப்படியிருந்தாலும் சரி! இந்தக் கல்யாணம் நடக்க வேண்டியதே.

ச. தா: சங்கர்! பணத்தைப் பார்த்தா?

சங்: பணத்துக்காக அல்ல அப்பா, குணத்துக்காக.

சங். தகப: எதுக்காக ஆனுலும் சரி. இந்த கல்யாணம் நடக்காதப்பா. நடக்க முடியாது.

அப்போது 'பிரதர்' வருகிருன்.

பிர: நடைபெறும். நடந்தே திரும்! இதைக் கொஞ்சம் பாருங்க. கண்ணுடியைத் தொடச்சுப்போட்டுக்கிட்டுப் பாருங்க. அண்ணைக்கு இதை ஓங்களுக்குச் சொன்னேன். இந்த டைரியை எடுத்துப் பாருங்கன்னு. ஆத்திரப்பட்டீங்க, இப்பவாவது நம்புவீங்களா. சுசிலா சுகுணமுள்ளவள்–சீலமுள்ளவள் – பெயருக்கேற்ற பெருமையுள்ளவள்னு? இன்னெரு ரகசியம். சுசீலாவினுடைய வாழ்க்கையை நாசமாக்கியது இந்தப் புண்ணியசாலிகள்தான். இவுங்க பிள்ளை ஒரு குடும்பஸ்தன் ஆகணும்னு ஆசைப்பட்டு, அவனுக்குக் கல்யாணம் பண்ணக் கூடாதுன்னு டாக்டர் சொல்லியிருந்துங்கூட அதைப் பொருட்படுத்தாமல் வியாதியை மறைத்து வைத்து சுசிலாவின் கழுத்துக்குச் சுருக்குப்போட்ட சுத்தமான பேர்வழிகள். சோபனம் நிறுத்தப்பட்டது. ஆனுல் எதிர்பாராத விதமாக ரெண்டு பேரும் ஒரு மனப்பட்டாங்க. அதன் பலன் அவன் போய் விட்டான். மனப் பூர்வமா செய்த ஒரு பெரும் பாதகத்தை மறைச்சு, தப்பையெல்லாம் ஒரு பாவமும் அறியாத சுசிலா தலையிலே போட்டு, விதியென்றும் அதிர்ஷ்டம் என்றும் விளக்கம் பண்ணி தப்பிச்சுக்கிட்டாங்க, இதோ தலை குனிஞ்சு நிற்கிற பெரிய இடத்து தம்பதிகள், தாய் தந்தைகள்! என்ன மதர், சுசிலாவினுடைய குழந்தையை யாவது சுகப்பட விடுவீங்களா?

ரவியின் பெற்றேர்: நீ சொல்றதெல்லாம் உண்மை. சுசி கழுத்துக்குச் சுருக்குப் போட்டது நாங்கதான். அம்மா . சுசிலா...!

ராணி: அம்மா அம்மா!

கோபு: சுசி...சுசி...!!

குடும்பத்தின் மணிவிளக்கான ராணியின் திருமணம் மங்களகரமாக நடந்தேறுகிறது. குலப்பெருமையையும் சுசீலாவின் மானத்தையும் காத்த உயர்ந்த மனேபாவமுள்ள 'பிரதர்' வரவால் எல்லாம் சுபமாக முடிகிறது.



பிரபல பட விநியோகஸ்தரும், சென்னை ஜம்பு புரொடக்ஷன்ஸ் உரிமையாளருமான எஸ். பி.எல். லக்ஷ்மணன் செட்டியார் அவர் களின் குமாரன் திரு. பழநியப்பனுககும் திருமதி முத்துகுமாரிக்கும் மார்ச் மாதம் 30-ம் தேதி யன்று காரைககுடியில் அதிவிமரிசையாக திருமணம் நடந்தேறியது. டைரக்டர் ஸ்ரீராமுலு நாயுடு, எம். வி. ராமன், கே. சாரங்கபாணி போன்ற படவுலகின் பல பிரமுகர் களும் ஏராளமான நண்பர்களும் இத் திருமணத்திற்கு வந்திருந் தனர். ஏராளமான பரிசுகளும் வாழ்த்துச் செய்திகளும் மண மக்க ளுக்கு வந்தன. திருமணத்தை யொட்டி வைஜயந்திமாலாவின் நடன நிகழ்ச்சியும் நடைபெற்றது.

மனிதன்......

(34-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரே: ம். ஆமா. எல்லோரும் அப்படித்தான் நினைச்சுக்கிட்டிருக்காங்க.

ராஜ: ...ம்..

பிரே: ராஜன்! நீ ஏன் இப்படிக் கஷ்டப்படணும்?

ராஜ: சுக மடைய நினைக்கிறதினுலே...

பிரே: சுகம் உன் திறமையினுலே மட்டும வராது. அதுக்குச் சரியான விளம்பரமும் வேணும்.

ராஜ: அதுக்கு வழியிருந்தா என் திறமையே தேவையில்லையே. ஆமா, விளம்பரத்தைப் பத்திப் பேசறியே, ஏதாவது பத்திரிகை கித்திரிகை நடத்திறியோ?

பிரே: இந்த மாதிரி உன் பேச்சைக் கேட்டுச் சிரிச்சுச் சிரிச்சு மகிழ்ந்த காலத்தை என்னுலே மறக்கவே முடியல்லே. ராஜன்! நீயும் தங்கை சரஸாவும் எங்க விட்டுக்கே வந்துடுங்களேன். உன் தொழிலுக்கு வேண்டிய எல்லா உதவியும் நான் செய்யறேன்.

ராஜ: உன்னுடைய வீட்டுக்கா? சேச்சே! என்னேட கஷ்டம் என்னேடே இருந்துட்டுப் போகட்டும். உனக்கு எதுக்கு வீண் சிரமம்?

பிரே: ம்பூ.. சிரமம்! ஒரு சிரமமுமில்லே. என் வீட்டுக்காரர் ரொம்ப நல்லவர். என் சொல்லைத் தட்டமாட்டார்.

ராஜ: அப்படியா?

பிரே: ம்... நீங்க...ரெண்டு பேரும் எங்க வீட்டுக்கு வந்துட்டீங்கன்னு உன் தொழிலுக்கு வேண்டிய எல்லா உதவியும் நான் செய்யறேன். ம். இதோ அட்ரஸ். இந்தப் பங்களாவுக்கு வந்ததும் உன் சிரமம் எலலாம் விலகிடும். அவசியம் வரணும் நிச்சயமா...

ராஜ: கண்டிப்பா!

பிரே: குட் பை!

ராஜ: குட் பை!

ராஜனிடமிருந்து வந்த பிரேமா சாம்பசிவத்தைத் தாஜா செய்து ராஜனுக்கு இடம் கொடுக்க ஏற்பாடு செய்கிருள்

பிரே: ..படம் எழுதறதுக்கு இட வசதி செய்து தரணும்.

சாம்: இவ்வளவுதானே?... கஜேந்திரா! நம்ம விடு ஏதாச்சும் காலியா யிருக்கா?

கஜே: விடா? இல்லீங்களே...!

சாம: இல்லியானு வாடகைக்கு ஒரு விடு பாரு..

பிரே: எதுக்குங்க? நம்ம மேல் புறம் காலிதானே?

கஜே: அது எப்பவும் காலியாத்தான் இருக்கு.

சாம்: அப்போ அதிலேயே..

கஜே: பிறத்தியார் குடியேறிஞ அது என்னத்துக்குங்க ஆகும்?

சாம்: பரவாயில்லேப்பா. நமக்கு ரொம்ப வேண்டியவங்க. பிரேமா! அந்த இடத்திலேயே உன் இஷ்டப்படி அவுங்களுக்கு வேண்டிய சௌகரிய மெல்லாம் செய்து குடு.

* * *

பிரேமாவின் ஏற்பாட்டின்படி ராஜன் தன் சகோதரி சரஸாவுடன் பிரேமாவின் விட்டிற்கு வருகிருன். கஜேந்திரன் அவனைத் தடுக்கிருன்.

கஜே: ஏய்..ய், என்னய்யா இது. மலைபோல இங்கே ஒரு மனுஷன் ஒக்காந்துக் கிட்டிருக்கேன. கேட்காமே கொள்ளாமே நீங்க பாட்டுக்கு தடதடன்னு போயிகிட்டிருக்கிங்களே! என்ன சமாச்சாரம்... இல்லே கேக்கறேன்?

சரஸா: யாரண்ணு இது?

ராஜ: உன் கூடத்தானேம்மா நானும் வந்திருக்கேன். இல்லே, எஜமானியம்மா உள்ளே இருக்காங்களா?

கஜே: என்ன? எஜமானி அம்மாவையா கேக்கிறீங்க?

ராஜ: ஆமா...

கஜே: அம்மா கிட்டே உங்களுக்கு என்ன வேலே?

சாவித்திரி வருகிருள்.

சாவி: கஜேந்திரா! யாரது?

பிரேமா வருகிருள். ராஜன் சாவித்திரியையே பார்க்கிருன்.

பிரே: வா ராஜன், வா! எபபோ வந்தே? வா சரஸா?... எல்லாம் நம்மவங்கதான் சாவித்திரி! உட்காரு ராஜன். சாமானெல்லாம் எங்கே?

ராஜ: எல்லாம் வண்டியில் இருக்கு. (சரஸாவைக் காட்டி) அடையாளம் தெரியுதா?

பிரே: தெரியாமெ என்ன? கொஞ்சம் வளர்ந்திருக்கா.

ராஜ: கொஞ்சமாவது? அவபாட்டுக்கு கிறுகிறுன்னு வளர்ந்துகிட்டே போரு!

பிரே: சாவித்திரி! சரஸாவை உள்ளே அழைச்சுகிட்டுப் போம்மா.

ராஜ: போ சரஸா! ஏனம்மா பயப்படுகிறே? (கஜேந்திரனேக் காட்டி) வந்தவுடனே இவனேப் பாத்தாளா, திமர்னு ஒரு மாதிரி ஆயிட்டாம்...போம்மா!

அவள் போகிருள். சாவித்திரி தன் மூத்தாள் பெண் என்று கூறுகிருள் பிரேமா. சாம்பசிவத்திற்கும் ராஜனுக்கும் அறிமுக மாகிறது.

அன்று ராஜன் சித்திர மெழுதிக் கொண்டிருக்கும்போது பிரேமா வந்து சரஸாவைச் சாப்பிட அனுப்பி விட்டு வர்ணத் தட்டுகளிடம் வந்து ராஜனுக்குப் பின்புறம் நிற்கிருள்.

ராஜ: சிகப்பு எடு.

பிரேமா ஆரஞ்சு கலரை நீட்டுகிருள்.

ராஜ: சிகப்பு எடுன்னு ஆரஞ்சு எடுத்து நீட்டுறியே! (திரும்பியவன் பிரேமாவைக் கண்டு) ஓகோ, நீயா? சரஸா எங்கே?

பிரே: நான்தான் இருக்கேனே!

ராஜ: சரஸா இல்லாமே வேலேயே ஒண்ணும் ஓடாதே.

பிரே: சரஸாவைச் சாப்பிட அனுப்பிச்சேன். கூப்பிடணுமா?

ராஜ: ஊஹூம். வேண்டாம்... வேண்டாம். நானே பாத்துக்கறேன்.

பிரே: நான் வேணுமானு உதவி செய்யறேன் ராஜன்.

ராஜ: ரொம்ப தாங்ஸ். உனக்கு சிரமமா யிருக்கும் பாரு..

பிரே: ஏன், உன் சரஸா செய்யற வேலே எனக்கு மட்டும் சிரமமா யிருக்குமா?

ராஜ: அதுக்கில்லே. சிகப்பு எடுன்னு ஆரஞ்சை எடுத்து நீட்டுறே. படம் என்ன கதியாறது?

பிரே: அடேடே! மாத்தித் தந்திட்டேனு? எனக்குத் தெரியலலே.

ராஜ: தெரியாத விஷயத்திலே எல்லாம் ஏம்மா வந்து தலேயிடுறே?

பிரே: உன் சரஸாமட்டும் எப்படித் தெரிஞ்சுக் கிட்டாளாம்?

ராஜ: பழக்கம்..

பிரே: ராஜன்! சரஸா கல்யாண மாகி அவ புருஷன் வீட்டுக்குப் போயிட்டா? எங்கே ஞாபகம்?

ராஜ: படத்திலே...

பிரே: ஹூம்... கலேஞரே! இப்படிக் கொஞ்சம் திரும்புங்களேன்... ஏன், என்னுேடு பேசறதுக்கு கூடக் கசப்பா இருக்கோ?

ராஜ: என்ன பிரேமா, கற்கண்டு எங்கேயாவது கசக்குமா?

பிரே: பின்னே என்னவாம்?

ராஜ: வேலேயைக் கவனிச்சுக் கிட்டிருக்கிற போது...

பிரே: ஆமா. எப்போ பார்த்தாலும் வேலே. வேலே. வேலே!..

தோணுதா? நீயே என்னைப் பாராட்டல்லேன்னு உலகம் எப்படி பாராட்டப்போகுது. இந்தாம்மா! பச்சை எடு.

அப்போது சாவித்திரி தான் எழுதிய ஒரு படத்தோடு அங்கு வருகிருள்.

சர: படத்தை முடிச்சிட்டியா சாவித்திரி?

சாவி: ஓ! நல்லா இருக்கா?

சர: அடே!

ராஜ: பேஷ்.. பிரமாதம்... இதை கொஞ்சம் பாருங்க.

தான் எழுதிய அவள் படத்தைக் காண்பிக்கிருன்.

சாவி: என்னுடைய படமா?

ராஜ: ஏதோ முயற்சி பண்ணியிருக்கிறேன்.

சாவி: ஏன் சரஸா! நான் இவ்வளவு அழகாவா இருக்கேன்?

சர: என்னைக் கேட்டால்? நீயே பாரேன்.

சாவி: படம் என்னவோ அழகாத்தான் இருக்கு...

ராஜ: உங்க கிட்டே அழகு இல்லாமே படத்திலே மட்டும் எப்படி வரும்?.. தெய்வீக அழகு! அழகைக் கண்ட இடத்திலே ஆராதிக்க வேண்டியது கலைஞனுடைய கடமை. அந்த முறையிலேதான் இதை எழுதினேன். இன்னும் பினிஷ் பண்ணலே. டச்சிங்தான பாக்கி சிரமம் பாக்காமே ஒரு ரெண்டு நாளைக்கு நீங்க வந்து கொஞ்ச நேரம்... உட்காந்திங்கன்னு முடிச்சுடலாம்.

அப்போது பிரேமா வந்து சாவித்திரியையும் சரஸாவையும் அனுப்பிவிட்டு ராஜனிடம் நடிக்க ஆரம்பிக்கிருள்.

பிரே: அடே! அதுகுள்ள எழுத ஆரம்பிச்சுட்டியா? அப்பப்பா...! இந்தா இதைச் சாப்பிடு.

ராஜ: என்ன பிரேமா! வேலையிலே கவனமா இருக்கும் போது வந்து தொல்லை கொடுக்கறியே?

பிரே: அடேயப்பா. பிரமாத வேலே! அந்தக் குட்டிகளோடெ அரட்டையடிக்கிறபோது மட்டும்...

ராஜ: என்ன. அரட்டையா அடிச்சுக்கிட்டிருந்தோம்?

பிரே: பின்னே என்ன?

ராஜ: ஆர்ட்டைப் பத்திப் பேசிக்கிட்டிருந்தோம்.

பிரே: அதை என்னேடுதான் கொஞ்சம் பேசேன்.

ராஜ: உனக்குத்தான் அந்த டேஸ்டே இல்லையே!

பிரே: ராஜன்...அடியோடு மாறிப் போயிட்டியே!

ராஜ: காலம் மாறுது. மனுஷனும் மார்ருன்.

பிரே: என் மனசு மட்டும் மாறவே இல்லே ராஜன். அங்கே நீதானே இருக்கே....

ராஜ. ம்...அப்படி இருக்கப் படாதே! பெரிய தவறு செய்யறே பிரேமா.

பிரே: தவறுன்னுதான் உலகம் சொல்லும். அதனலே என் வாழ்க்கையையும் பாழாக்கிக் கொள்ளணுமா? என்னென்ன திட்டமோ போட்டோமே ராஜன...!

ராஜ: போட்ட திட்டந்தான் புகைஞ்சு போயிட்டுதே!

பிரே: இல்லே ராஜன்! போட்ட திட்டம் போட்டபடியே நடக்கும். நீ மனசு வச்சா. என்னைப் பாரேன்... என் மேலே உனக்கு அன்பே இல்லேயா?

ராஜ: எப்படி இல்லாமே போகும்? உன் மேலே நான் வச்சிருக்கிற அன்பு பரிசுத்தமானது பிரேமா.

பிரே: உனக்காக என் கையாலே செஞ்சது ராஜன். கொஞ்சமாவது சாப்பிடேன்.

ராஜ: பிரேமா...

இதற்குள் சரஸா வரவே பிரேமா சமாளித்துக் கொள்ளுகிருள்.

பிரே: சரஸா! அண்ணு காலேயிலே இருந்து ஒண்ணும் சாப்பிடாமே இருக்கார். நீ கவனிக்கிறதே காணுமே? இந்தாம்மா, அண்ணுவைச் சாப்பிடச் சொல்லு. என்ன பொண்ணு போ...சேச்சே!

சரஸாவிடம் தட்டைக் கொடுத்து விட்டு வெளியே சென்று ஒட்டு கேட்கிருள்.

ராஜ: சரஸா! எங்கேம்மா அடிக்கடி போயிடறே? போனு சீக்கிரம் திரும்பறதில்லே. உம் ...... இனிமே எங்கேயும் போகாதேம்மா. இங்கே தானே இரு. பெரிய உபத்திரவமா இருக்கு. என்ன?

பிரேமா உடனே திரும்பி வந்து தேவர் ஹாலில் ஒரு நடனக் கச்சேரி இருப்பதாகவும் சனிக்கிழமை போகலாமென்றும் சரஸாவிடம் கூறுகிருள். ஆனல் சனியன்று தலைவலி என்று சொல்லி சரஸாவை சாம்பசிவத்துடன் அனுப்பிவிட்டு, கஜேந்திரனையும் சினிமாவிற்கு அனுப்பிய பின் ராஜனின் அறைக்கு வருகிருள்.

ராஜ: என்ன பிரேமா, தியேட்டருக்குப் போகலே?

பிரே: அவுங்களை யெல்லாம் அனுப்பிச்சுட்டேன்.

ராஜ: நீ?

பிரே: உடம்பு என்னவோ போலே...

ராஜ: அப்போ, போய் ரெஸ்ட் எடுத்துக்கோ.

பிரே: ராஜன்...! இந்தமாதிரி படமெல்லாம் உன்னுலே எப்படி எழுத முடியுது? உம்..!

ராஜ: (பிரஷ்ஷைக் காட்டி) இதனுலேதான்!

பிரே: ...ம்... இதபார்! ஆமா, இந்த பொண்ணு என்ன செய்யருளாம்?

ராஜ: என்ன செய்யறதாக நினைக்கிறே?

பிரே: ஊ...ம்...! ராஜன், ராஜன்! இங்கே பாரேன்!... (படத்தின் ஸ்டைலில் நின்று கொண்டு) சரியா இருக்கா?

ராஜ: ஸ்டைல் கரெக்ட்! ஆனல் பாவம் வேறே. அந்தக் கண்களிலே எழுச்சி. உன் கண்களிலே ஏக்கம்.

சோபாவில் உட்கார வைக்கிருள்.

பிரே: அப்பா...! இப்பவாவது புரிஞ்சுதே உனக்கு!

ராஜ: எப்பவோ புரிஞ்சுகிட்ட விஷயம் பிரேமா!

பிரே: ம்...ஹூம்...

அவன் தோளைக் கட்டிக் கொள்ளுகிருள்.

ராஜ: ஸ்...தொந்தரவு பண்ணுதே! காலம் வீணுகிறதை நான் விரும்புகிறதே இல்லே.

பிரே: அதைத்தானே நானும் சொல்றேன். கொஞ்ச நேரமாவது ரெஸ்ட் எடுத்துக்கோ.

ராஜ: பிரேமா! எனக்கொரு உதவி செய்வியா?

பிரே: உதவி என்ன ராஜன்? உத்திரவு போடு!

ராஜ: தயவு செய்து எல்லாத்தையும் மறந்துடு. உன மனசை மாத்திக்க.

பிரே: மாத்தவா? மறக்கவா? அதைவிட, ராஜன், நீ என்னை இறக்கச் சொல்லி இருக்கலாமே.

ராஜ: ஸ்...தலைவேதனே!

பிரே: ஹா, தலைவலியா? அப்போ சூடா காப்பி சாப்பிடறியா?

ராஜ: ஆமா... சாப்பிட்டா தேவலே... ஆனு இப்ப யாரும இருக்க மாட்டாங்களே?

பிரே: நானே போட்டுக் கொண்டு வர்றேன்.

ராஜ: சரி, பிரேமா!

அவள் சென்றதும் பலகையில் 'நானும் நாடகத்திற்குப் போகிறேன்' என்று எழுதிவிட்டுச் சாவிக்

திரியின் தனிமையைக் கலைக்கச் செல்கிருன் ராஜன்! பிரேமா காப்பியுடன் வந்து ஏமாந்து தேவர் ஹாலுக்குக் கிளம்புகிருள். ராஜன் சாவித்திரியிடம் பேச்சை ஆரம்பிக்கிருன்.

ராஜ: ஆகா! எங்கு பார்த்தாலும் நல்ல நல்ல புஷ்பங்கள்! இந்தப் புஷ்பங்களின் மணத்தை யெல்லாம் அள்ளிக் கொண்டுவரும் தென்றல்! இந்தத் தென்றலை அனுபவித்து மகிழக்கூடிய பறவைகள்! இவைகளுக்கிடையிலே முற்றுகையிடப்பட்ட மானைப் போல நீங்கள்! என்னடா, இந்த அழகையெல்லாம் ரஸித்து மகிழாமல் இந்தப் பெண் அசடா இருக்கேன்னு உங்களைப் பார்த்து சிரித்துக் கொண்டே சொலற அந்த நிலவு .. (ஒரு மலரை எடுத்து) ஆகா. இதைப் பார்த்திர்களா? ச்சு க்சு! எவ்வளவு ஏக்கம்; எத்தனை மனவேதனை இந்த மலருக்கு? என்னடா. தன்னுடைய மணத்தை அனுபவிக்கத் தெரியாத இந்தப் பெணணுக்கு எதிரில் எதுக்காகத்தான் மலரந்தோம்னு அப்படியே வாடி வதங்கி கருகி....

சாவி: ஐயோ...பாவம்!

ராஜ: பார்த்திர்களா! உங்கள் உள்ளம் ரொம்ப மென்மையானது, கடற்பாசியைப் போல.

சாவி: கடற்பாசியா?

ராஜ: கடற்பாசி பார்த்ததில்லை. கடற்பாசி? உங்கள் உள்ளத்தைப் போலத்தான் இருக்கும். அடேடே... கரிய கூந்தலுக்கு நறுமணத்தைக் கொடுக்கும் இந்த மலர் என் கையிலா இருப்பது? ..

சாவி: ...ஸ்வாரஸ்யம் நிறைந்த உங்கள் பேச்சால் நேரம் போனதே தெரியவில்லை.

ராஜ: காலம் நமக்காகக் காத்திருக்குமா? பார்த்திர்களா, திரண்ட மேகக் கூட்டம் ஒன்று சேரும் அழகை...அதன் நெஞ்சம் வெடித்தால் நிலஞ் செழிக்கும். பயிர் தழைக்கும்.

சாவி: ஐயையோ...மழை வரும் போலிருக்கே?

ஒரு ஒட்டை விடுதிக்குள் ஓடுகிருள். ராஜன் நனைந்து கொண்டு வெளியே நிற்கிருன்.

சாவி: நனைகிறீர்களே, இப்படி வந்து நில்லுங்கள்!

இடி மின்னலின் பயங்கரத்தில் மருண்ட சாவித்திரியை அணைக்கிருன் ராஜன். பால் நிலவு நிறைந்த அந்த இரவு வீண் போகவில்லை!

காட்சி 5

மாதங்கள் சில கழிகின்றன ராஜனின் சேர்க்கையால் சாவித்திரி கருவுற்று விடுகிருள். அவள் மனம் தன் தவறுக்காகத் தவிக்கிறது. அவளைப் பல நாள் சந்திக்காத ராஜன் ஆவலுடன் ஓடி வருகிருன். அவள் பாம்பெனச் சீறுகிருள்.

ராஜ. சாவித்திரி! ரொம்ப நாளாச்சு பாத்து,... ஏன், என்ன சாவித்திரி? சித்தி சண்டை போட்டாளா? அப்பா ஏதாவது சொன்னரா? ம் ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கறியே?

சாவி: சொல்ல என்ன இருக்கு?

ராஜ: ஏன் இப்படி எரிந்து விழுறே?

சாவி: இல்லே! சந்தோஷந்தான் படணும்.

ராஜ: அப்படி என்னதான் வந்துட்டது இப்போ?

சாவி: தீராத பழி என் தலையிலே. நம்முடைய பாபச் செயலின சின்னம் வளர்ந்து வருகிறது.

ராஜ: ஹா! சாவித்திரி! உண்மையா?

சாவி: ஊர் அறிந்து சிரிக்கப் போகிற உண்மை. பெண்புத்தி தடுமாறியது. பலமிகுந்த உங்கள் ஆண்புத்தி ஏன் சிதைந்தது? என்னை சுடுகாட்டுக்கனுப்பவா? கலைஞர்; உலகானுபவம் நிறைந்தவர், உங்கள் தெளிந்த அறிவு என்னைக் காப்பாற்றியிருக்கலாமே! என் பலவீனத்தை எடுத்துச் சொல்லி கண்டித்திருக்கலாமே! கலையழகு உங்கள் கண்களை

மறைத்து விட்டதா? என் வாழ்க்கையைப் பாழாக்க திட்டம்போட்டே செய்தீர்களா? உங்களுக்கென்ன? ஆண் மகன்! வீரம்பேசித் திரியலாம் ஆண்மையின் அடிச்சுவட்டில் மிதிபுண்ட என் பெண்மை? கலைஞனின் கரம் பட்டுக் கசங்கிப்போன என் அழகு? உடற் பசிக்கு இரையாகி உருக்குலைந்த எனது உள்ளம்? பெண்மை பறி போயிற்று: அழகு அழிந்தது; உள்ளம் தீய்க்துவிட்டது. இனி என்ன? நீங்கள் போங்கள். போய் விடுங்கள்.

ராஜு: சாவித்திரி...!

சாவி: சாவித்திரி! புருஷன் உயிருக்காக எமனோடு போராடிய ஒரு புனிதவதி அவள்...கொண்ட கணவனுக்குத் துரோகம் செய்து தீராப் பழியைத் தேடிக் கொண்ட இந்த சாவித்திரி இனி உயிரோடு இருக்க மாட்டாள்.

ராஜு: கலங்காதே சாவித்திரி!

சாவி: கலங்கா திருக்க தைரியம் உங்களுக்கு இருக்கலாம். உங்களுக்கு இதெல்லாம் விளையாட்டு. உணர்ச்சி வசப்பட்டு உலைக்களத்திலே விழுந்து அழியாச் செல்வத்தைப் பறிகொடுத்த எனக்கு சாவைத் தவிர வேறு வழி?

ராஜு: நான் சொல்றதைக் கேளேன். மறுபடியும் யோசித்துப் பாரு.

சாவி: எதற்கு? மரணத்துக்குப் பயந்தா? இல்லை, விபசாரி என்ற பட்டத்துடன் வாழ்வதற்கா?

ராஜு: எந்தப் பட்டமும் உன்னை அணுகாமெ நான் செய்யறேன்.

சாவி: அதை ஏற்று வாழ மனமில்லை எனக்கு. களங்க மடைந்த என் தேகம் பற்றி யெரியும்போது அந்த ஜ்வாலை பட்டு உங்கள் குற்றம் மறைந்து விடலாம். வாழுங்கள் சந்தோஷமாக!

ராஜு: இதுதானு சாவித்திரி உன் முடிவு?

சாவி: சீர்கெட்ட ஆரம்பத்திற்குச் சிறந்த முடிவு இதுதான்...ஒன்று கேட்கிறேன்! உங்கள் ஆண்மையின் பெயரால் கேட்கிறேன்; உங்கள் அறிவு தெளிந்திருந்தால் அந்த அறிவின் பெயரால் கேட்கிறேன்; உங்கள் கலையின் பெயரால் கேட்கிறேன், செய்வீர்களா?

ராஜு: என்ன செய்யணும்? எது வேண்டுமானாலும் கேள். செய்யறேன் சாவித்திரி.

சாவி: என் நிலையில் உள்ள வேறு எந்தப் பெண்ணையும் இந்தக் கதிக்கு ஆளாக்காம விருப்பீர்களா?

ராஜு: சாவித்திரி! இதுவே என் வாழ்க்கையில் நான் செய்த முதல் தவறு. உள்ளத்தில் எஞ்சியிருக்கும் கலை உணர்ச்சியின் பேரால் ஆணையிட்டுச் சொல்கிறேன். உன் வாழ்வை அழித்தவனுக்கு இனி வாழ்வு ஏது? இல்லை ...இல்லை...!

காட்சி 6

தவருன பாதையில் சென்று வயிற்றிலே வளரும் கருவைக் கரைத்து விடும்படிக் கேட்கும் ஒரு ஸ்திரீக்கு நீதிபோதிக்கிறுன் சுகுமார்.

சுகு: சகோதரி! தகர்ந்துபோன உள்ளத்தைச் செப்பனிடும் சக்தி எனது வார்த்தைகளுக்குக் கிடையாது. நீ கேட்கும் உதவியும் என்னுல் செய்ய முடியாதம்மா...

ஸ்தி: உங்களால் செய்ய முடியாததை நான் செய்யும்படிக் கேட்கவில்லையே டாக்டர்?

சுகு: இல்லை ... நான் செய்யக் கூடாத ஒன்றைத்தான் செய்யும்படிக் கேட்கிருய்.

ஸ்தி: நீங்கள் செய்யக் கூடாத ஒன்றை என் மரணம் செய்திருக்குமே. பின் ஏன் என்னைக் காப்பாற்றினீர்கள்? இந்த அவமானத்தோடு எப்படி உயிர் வாழ முடியும்? உணர்ச்சிக்கு வசமாகி உடலை அழித்துக் கொள்ள உரிமை எனக்கு இருந்தபோது...

சுகு: அறிவிழந்த செயலுக்கு எல்லாம் உரிமை கொண்டாட முடியாதம்மா. நான் சொல்வதைக்

கேள். உன் அவமானச் சின்னத்தை வயிற்றிலிருந்து வெளிப்படுத்தி விட்டால் கறைப்பட்ட உன் உள்ளம் பரிசுத்த மடைந்து விடுமா? சொல்லு சகோதரி!.. நீ கற்பைத்தான் இழந்தாய், கடமையிலாவது தவருதே. உன் வயிற்றில் வளர்ந்து வருவது பூத்து வரும் புதிய சமுதாயத்திற்குச் சொந்தமானது. நீ அதன் தாய். அதை வளர்ப்பது உன் கடமை. மனித சமுதாயம் மடிந்து மண்ணோடு மண்ணுகும் வரை, ஒரு தாய் அவள் கடமையைச் செய்துதான் தீர வேண்டும். இது நியதி.

ஸ்தி : டாக்டர்!

சுகு : கலங்காதே அம்மா. என்னுல் முடிந்த உதவிகளை உனக்குச் செய்கிறேன்.

காட்சி 7

பிரேமா படுத்திருக்கிருள். அவளிடம் வந்த சுரேயும் பிரண்டும் அவள் ஒரு மாதிரியிருப்பதறிந்து, கிழவர் சாம்பசிவம் இருக்குமிடம் செல்கின்றனர். அவர் ஒரு ஆபீஸருடன் பேசிக் கொண்டிருக்கவே ஒட்டுக் கேட்கின்றனர்.

சாம் : எனக்கும் வயசாச்சு. குடும்ப காரியங்களையெல்லாம் ஒரு ஒழுங்கு பண்ணி வச்சிடலாமனு நினைச்சேன்.

ஆபீ : அதுக்கெல்லாம் என்ன அவசரம் இப்போ?

சாம் : இல்லே தம்பி, எதுக்கும் முன் ஜாக்கிரதை வேணும் பாருங்க. திடீர்னு மண்டையைப் போட்டேன், என்ன ஆகும்? என்னமோ, இருக்கிறதையெல்லாம் மாப்பிள்ளை பேருக்கும் பொண்ணு பேருக்கும் எழுதி வச்சிட்டா நம்ம கவலை விட்டது. அதுக்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் கூட செய்ஞ்சு வச்சிருக்கேன்.

சுரே : பார்த்தியா பிரண்ட்? கமான்! (சகோதரியிடம் வருகிருன்.)

சுரே : இப்ப தெரியுது உன் கவலைக்குக் காரணம்?

பிரே : என்னடாது?

சுரே : என்னவா, ஏன ஸிஸ்டர் மறைக்கிறே?

பிரே : மறைக்கிறேனு?

சுரே : நீ இருக்கிறபோது மக பேருக்கும் மாப்பிள்ளை பேருக்கும் சொத்தை எழுதி வச்சிடுவானு அந்தக் கிழவன்?

பிரே : என்ன, என்ன? அது வேறே நடக்குதா?

சுரே : நடக்குதாவது? அப்போ இதைப் பத்தி உனக்கு ஒண்ணுமே தெரியாதா?...பார்த்தாயா பிரண்ட்! கிழட்டுப்பய என் ஸிஸ்டரை மோசம் செய்யறதுன்னு நினைச்சிட்டான்... நீ கவலைப் படாதே ஸிஸ்டர்! ஒரு கை பார்த்துக்கிறேன், அந்தக் கிழட்டுப் பயலே.

பிர : நீ பார்த்துகிட்டே இரு, காரியமும் தானு நடந்து முடிஞ்சுடும்.

சுரே : முடிஞ்சுடுமா? முடியாமெ இருக்கிறதுக்கு ஒரு யோசனை சொல்லேன்,

பிர : இது வந்து சொத்தைப்பத்தின பிரச்னைதானே?

சுரே : ஆமா!

பிர : ஆமான்னு விஷயம் முடிஞ்சுது.

சுரே : எப்படிடா?

பிர : கிழவருடைய சொத்திலே நம்ம பிரேமா அக்காவுக்கும் ஜீவனும் சம் நிச்சயம் கிடைக்கும். தட்ஸ்ஆல்!

சுரே : இந்தப் பிச்சைக் காசுக்காகவா என் ஸிஸ்டர் கிழவனை கட்டிக் கிட்டா?

பிர : எஸ்... அதுவும் யோசிக்க வேண்டியதுதான் ஏம்பா! நான் வேணுமானு பெரியவரோட பேசி அக்காவுக்கும் ஒரு பங்கு கிடைக்கிறாப்போலச் செய்யட்டுமா?

பிரே : ஒண்ணும் வேண்டாம் பிரண்ட். இந்தப் பணங் காசு எல்லாம் யாருக்கு வேணும்?

சுரே : என்னது? யாருக்கு வேணுமா? ஏன் ஸிஸ்டர், இப்படி

செஞ்ச் ஆயிட்டே? பணத்துக்காகத் தானே இந்தக் கிழவனை கட்டிக் கிட்டே? என்னைப் படிக்க வைக் கிறேன்னே. கல்யாணம் செஞ்சு வைக்கிறேன்னு சொன்னே, பங் களா கட்டித் தரேன்னு சொன்னே! ம்... எல்லாம் என்ன ஆகிறது?

பிரே: தண்ணிலே எழுதறது!

சுரே: உனக்கு வேண்டாம்னு போகட்டும். எனக்கு வேணும் பணம்...

பிரே: ஆமாமா... சம்பாதிக்கிற துக்கு வேறு வழி தெரியாது அக்கா.

சுர: பிரண்ட்! கிழவனுடைய பணங்காசிலே ஒரு செப்புச் சல்லி குறையாமெ எனக்குக் கிடைச்சாக னும்.

பிர: அப்போ நீ அவருக்கு மக னப் பொறந்திருக்கணும்!

சுரே: மச்சினனுக்கு இல்லாத உரிமை மகனுக்கு ஏதுடா? எனக் கென்ன திறமை யில்லையா? படிப் பில்லையா?

பிர: ஆல் இந்தியா அழகன்டா நீ!

சுரே: இன்னொரு தடவை சொல்லு.

பிர: ஐயோ...

சுரே: என்னை ஏன் இந்த எஸ் டேட்டுக்கு மானேஜராக்கி யிருக்கப் படாது கிழவன்?

பிர: சுரே! கிழவர்களுக்கு எப் போதும் முன் யோசனை அதிகம்!

சுரே: பிரண்டு...

பிர: உன்னை மானேஜராக்கினு என்ன நடக்கும்னு அவருக்குத் தெரி யுண்டா பூல்! நடக்க முடியாத விஷ யத்துக்கு நாக்கைப் பிடுங்கிக்கிருன், நான்சென்ஸ்!

சுரே: நடக்க முடியாதா...? கிழ வனை தீர்த்துட்டா?

பிர: தீத்தட்டு ஜெயிலிலேயே போய் ஜோராய்க் கம்பி எண்ணலாம்!

சுரே: நோ.. நோ... நோ! அது நம்ம கௌரவத்துக்கு கொறவு. டேய்! ஒரு யோசனை தோணுதுடா!

பிர: அப்படியானு அது நிச்சயம் பெய்லியர்தான்!

சுரே: நீ தான் ஒரு யோசனை சொல்லேண்டா.

பிர: இந்தமாதிரி விஷயங்களுக்கு என் மூளை வேலை செய்யாதுடா மண்டம்.

காட்சி 8

கிழவர் சாம்பசிவத்திடம் ஆபீஸர் ஒருவர் பேசியதி லிருந்து சுகுமார் வரப்போவதை யறிந்த சரஸா அதைச் சொல்ல சாவித்திரியிடம் ஓடுகிருள்.

சர: அட இங்கேயா இருக்கே? உன்னை எங்கேயெல்லாம் தேடுறது சாவித்திரி! அவுரு வரப்போருரும்.

சாவி: யாரு சரஸா?

சர: அவர்தான் சத்தியவான்!

சாவி: ம்... சத்தியவானு, அவரு யாரு?

சர: ஓகோ... சரி சரி... இந்த சாவித்திரி வேறயா? வரப்போறவர் என் சாவித்திரியின் வீட்டுக்காரர்!

சாவி: அவர் வரப்போருரா...?

சர: ம்..

சாவித்திரி அதிர்ச்சியால் மயக்க மாகி விடுகிருள். சிறிது நேரத்தில் மயக்கம் தெளிகிறது அவளுக்கு. சரஸா பயந்துபோய் விடுகிருள்.

சர: என்ன செய்யுது சாவித்திரி. என்னவோ போல ஆயிட்டியே? டாக்டருக்கு ஆள் அனுப்பட்டுமா?

சாவி: வேண்டாம் சரஸா. வேண்டாம்! இது டாக்டர்களாலே தீர்க்கக் கூடியதில்லே.

சர: பைத்தியமா என்ன? பேசாமெ இரு.

சாவி: பைத்தியத்தை விடக் கேவலமான நிலை. என்னைப் பார்

சரஸா, அழகு எங்கே? அமைதி எங்கே? ஆசைக் கனவு எங்கே? எல்லாம் ஒரு விநாடியிலே, கண் இமைக்கிற நேரத்திலே உருக் குலைந்து போய் விட்டது சரஸா!

சர: ஏன்? அப்படி என்ன உனக்கு? ஒண்ணும விளங்கலியே சாவித்திரி?

சாவி: விளங்காமெ என்ன?... உன்... மதிப்புக்குரிய தோழியில்லே நான்? பாசததிற்குரிய மகளில்லே... அன்பிற்குரிய மனைவியுமில்லே... போதுமா? பெருமை குலைஞ்சு போயி டுச்சு, என் பெண்மை...சரஸா! விலையில்லாத அந்த மாணிக்கத்தை இழந்துவிட்டேனே பாவி.

சர: ஹா...!

சாவி: உறிஞ்சி விட்டார் என் ஜீவனை உன் அண்ணு.

சர: அண்ணுவா... என் அண் ணுவா?

அப்போது 'சரஸா' என்று அழைத்தபடி வருகிருன் ராஜன்.

ராஜ: ஒரு முக்கியமான விஷயம் சரஸா!

சர: எது முக்கியம்? கலையைப் போற்றுத நாட்டைக் குறை சொன்ன நாட்கள் முக்கியமா? வறுமைச் சுழ லில் வாடி வதங்கிய அந்தவருடங்கள் முக்கியமா? எது முக்கியம்? கேவலம் ஜீவனத்திற்கு வழியின்றி ஒரு பெண ணின் உதவியை நாடி வந்தது முக்கி யமா? அன்றி சித்திரத்தைக் காட்டி இவளின் சிந்தையைச் சிதறடித்தது முக்கிமா? எது முக்கியம்? உங்கள் வாழ்க்கைச் சரித்திரத்தில் பொன் னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய அந்த முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி எது? சொல்லுங் கள்!

ராஜ: சரஸா..!

சர: அழகை ஆராதித்து இந்த அபலையின் அருந்தனத்தைக்கொள்ளை யிட்ட ஓர் துஷ்டனுடன் பிறந்த அந்த சரஸா செத்து விட்டாள்.

ராஜ: ஐயோ...சகோதரி!

சர: உங்களுக்குச் சகோதரியும தாரமும் தாயும வெவவேறு?

ராஜ: என்னை வதைக்காதே சரஸா!

சர: வதைத்தது யார்? வதைக்கப் பட்டது யார்? இதோ இந்த இன்பக் கோவிலின் இதயத்தைச் சுற்றி முட் களைச் சொருகியது யார்? நீங்கள் கலைஞரா? ஆறறிவு படைத்த மனித ஜீவனு?

ராஜ: இல்லை...நான் மனிதனே இல்லை சரஸா.

சர: இருக்க முடியாது. மனித சமுதாயத்தின் பரம விரோதி–மதிப் புள்ள குடும்பத்தை மாசுபடுததிய துரோகி–மதியிலலை; மானமில்லை; நெறியில்லை; நேர்மையில்லை; உணர்வு மட்டும் இன்னும் இருக்கிறதா? போங்கள்–போய் விடுங்கள்! உங் கள் கால்கள் சக்தியை இழக்கு முன் இந்த இடத்தை விட்டே போய்விடுங் கள். உங்கள் உடல் உணர்வை இழக்கு முன் இந்த ஊரைவிட்டே போய் விடுங்கள்! சாவித்திரி! சாவித்திரி!!

சாவித்திரியைத் தொடர்ந்து ஓடி விடுகிருள் சரஸா. பிரேமா இவ்வள வையும் ஒட்டுக்கேட்ட பின் ராஜ ரிடம் வருகிருள்.

பிரே: ராஜன்!... மிஸ்டர் ராஜன்!

ராஜ: பிரேமா!

பிரே: ஏன் ஒரு மாதிரியா இருக்கே, தலைவலியா? சூடா காப்பி சாப்பிடுறியா?

ராஜ: உடம்புக்கு ஒண்ணு மில்லே பிரேமா.

பிரே: ஓகோ, மனம் சரியில்லை போலிருக்கு. ஆமாமா, குடும்பத் தொல்லை அதிகம். குழந்தைக்கு வேறு தகப்பனுகப் போறே!

ராஜ: பி...ரே...மா...!

பிரே: ம்...? ஏன் நடுங்கறே? சும்மா தைரியமா யிரு!

ராஜ: பெரிய துரோகம் செய்திட் டேன் பிரேமா...

பிரே: துரோகமா? இல்லே ராஜன, உப்பிட்ட குடும்பத்துக்கு உறமுறையானுகிட்டே!

ராஜ: அழகு என் அறிவை மயக்கி விட்டது பிரேமா.

பிரே: என்னை வஞ்சித்துக் கொண்டே வந்தே. அறிவு உன்னை வஞ்சித்தது பார்த்தியா? சரி, அதெல்லாம் போகட்டும் ஒண்ணு கேட்கிறேன் உன்னை...!

ராஜ: என்ன பிரேமா?

பிரே: இப்போதாவது சொல்லு, உன் மனசிலே எனக்கு இடம் உண்டா?

ராஜ: இந்த நிலையில் கூடவா?

பிரே: எந்த நிலையானா என்ன? சந்தர்ப்பம் தானா வருது உனக்கு. அதை வீணாக்கி விடாதே!

ராஜ: அதே சந்தர்ப்பம் செய்த சதியினாலேதான் பிரேமா அழிஞ்சு போயிட்டேன்.

பிரே: ஒரு குடும்பத்தை அழிச்சிட்டேன்னு சொல்லு ராஜன். உன் பயங்கரமான தவறுதலைப் பத்தி யோசிச்சுப் பாத்தியா? ஒரு வார்த்தை சொல்லு, எல்லாம் தானா மறைஞ்சுடும். நான் இருக்கிறபோது நீ ஏன் வீணாக் கவலைப் படறே?

ராஜ: உன்னால் முடியுமா?

பிரே: பாரேன்...!

ராஜ: என்ன செய்யப் போறே பிரேமா?

பிரே: எதுவோ செய்வேன்!

ராஜ: நீ மட்டும் இந்த உபகாரம் செய்வியானா...?

பிரே: சந்தேகமா உனக்கு? சத்தியம் செய்து தரட்டுமா?

ராஜ: எப்படியாவது என் மானத்தைக் காப்பாத்து பிரேமா.

பிரே: மானத்தை மட்டுமில்லே, உன்னையே என் இதயத்திலே வச்சிப் போற்றி வளர்ப்பேன்.

ராஜ: பிரேமா! உன் உதவியை மறக்கவே மாட்டேன்.

பிரே: அப்பொ என்னை மறந்துடுவே.

ராஜ: உன்னை மறக்க முடியுமா?

பிரே: அ..ப்..பா..! ராஜன்...!

அவர்கள் அணைக்கப் புகும்போது 'இந்நிலையிலே உள்ள வேறு எந்தப் பெண்ணையும் இந்தக் கதிக்கு ஆளாக்காமே இருப்பீங்களா?' என்று சாவித்திரி தன்னிடம் கேட்டது ஞாபகம் வரவே, பிரேமாவைத் தள்ளிவிட்டு ஓடுகிறான் ராஜன்.

காட்சி 9

சாம்பசிவம் உட்கார்ந்திருக்கும் போது அவரிடம் சுரேயும் பிரண்ட்டும் வருகின்றனர்.

சாம்: வா...சுரே! (பிரண்டிடம்) உக்காரு! வருவதாகத் தகவலே இல்லியேப்பா.

சுரே: திடீர்னுதான் புறப்பட்டோம்.

பிர: உடம்பெல்லாம் சௌக்கியம் தானே மாமா?

சாம்: என்னவோ இருக்கேன்.

சுரே: டாக்டர்கிட்டே யிருந்து லெட்டர் வந்ததோ?

சாம்: வந்தது. அவன் வர்லியே!

சுரே: சரிதான், அவர் வருவார்னு வேறே நினைக்கிறீங்களா?

சாம்: ஏன் சுரே, அப்படிச் சொல்றே?

சுரே: அந்த மனுஷனுக்குக் கொண்டு போய் பெண்ணைக் குடுத்திங்களே; கிணத்திலே தள்ளி யிருக்கப்படாது?

சாம்: என்னப்பா ஒண்ணும் விளங்கல்லியே?

சுரே: வேறே என்னத்தான் பட்டணத்திலே குஷாலா யிருக்கிற மனுஷன் அவர்.

சாம்: யாரு? மாப்பிள்ளை சுகுமாரனா? பட்டணத்திலேயா? என்னப்பா, நீ? இப்பத்தான் அவரு சிநேகிதரு வந்து சொல்லிவிட்டுப் போறாரு, அவர் வார்றதுக்கு இன்னம் ஒரு மாசம் ஆகும்னு ...

சுரே: ஐ ஸீ! இந்த ஏற்பாடு வேறே செய்துட்டாரா?

சாம்: நீ நல்லாப் பார்த்தியோ?

சுரே: பாத்தோம், பேசினோம், விருந்துகூடச் சாப்பிட்டோம் ஏன் பிரண்ட்?

பிர: (கிண்டலாக) ஆமாம், சாப்பிட்டது இன்னும் ஜெரிக்கல்லே.

சாம்: ஏன் சுரே, நீ சொல்றது.. பட்டணத்துக்கு வந்த மனுஷன் வீட்டுக்குவராமே...

சுரே: அந்த மனுஷனுக்கு நம்ம குடும்பத்தைப் பத்தியே நினைப்பு இல்லே.

சாம்: நினைப்பே இல்லியா? இந்த நாலு வருஷத்துள்ளேயா இப்படியெல்லாம் மாறிபோயிட்டான்?

சுரே: மனுஷன் மார்றதுக்கு நாலு வருஷமா தேவை?

பிர: நாலு நிமிஷம் போதுமே!

சாம்: என்னாலே நம்ப முடியல்லேப்பா...

பிர: நம்பக்கூடிய விஷயமா என்ன! பயங்கரமான அக்ரமம். நல்ல கதி கிடைக்குமா?

சுரே: அந்த டாக்டருக்கு ...அத்தான்! பிரண்ட் துடியாத்துடிச்சான. ஏன் பிரண்ட், நாம் டாக்டர் வீட்டுக்குப் போனதும்...

பிர: (விழிந்தபடி) ம்...போனதும்...

சுரே: வீடுமாறி வந்துட்டோமாங்கற. சந்தேகம் வந்ததும்...

பிர: ஆமா...மா, உனக்கு வந்ததும்...

சுரே: ஓ மை டார்லிங்னு ஒரு பெண் ஓடி வந்து டாக்டர் கழுத்தைக் கட்டிக் கொண்டதும், 'ஷீ ஈஸ் மை ஹார்ட் சுரே!' என்று அவளை அறிமுகப் படுத்தி வச்சதும்...

பிர: எல்லாம் சினிமாக் காட்சி போல இருக்குதே!

சுரே: அப்படின்னு நீ இப்பப் பிரமிச்சுப் போனதும்...

சாம்: என்னப்பா, ரெண்டு பேரும்சேர்ந்து என்னை குழப்பறீங்க? சுரே! இதெல்லாம் உண்மைதானா? என் மனம் பதறுதேடா?

பிர: எதுலேயும் பதட்டங்கூடாது மாமா!

சாம்: சுரே! பட்டணத்திலே அவன் அட்ரஸ் என்ன சொல்லு?

சுரே: எங்கேடாது?

பிர: எழுதி வச்சிக்க மறந்திட்டியா?

சாம்: போனாப் போகட்டும். உங்களுக்கு இடம் தெரியுமில்ல. என்னோட புறப்படுங்க.

சுரே: (ரகசியமாக பிரண்டிடம்) பிள்ளையார் பிடிக்க குரங்கா முடிஞ்சுதேடா.

பிர: இனிமே குரங்கைப் பிடி! பிள்ளையாரா மாறுதான்னு பாரு.

சுரே: பூல்! சமயந் தெரியாமெ...

பிர: இப்ப நீ ஒரு பொய் சொன்னே. அதை மறைக்கிறதுக்கு ஒன்பது பொய் சொல்லியாகணும். இப்படித்தாண்டா மனுஷன் கெட்டு குட்டிச்சுவராகிறான்.

பிரேமா அப்போது அங்கே வருகிறாள்.

பிரே: எங்கேடா அவரு?

சுரே: பட்டணத்துலே டாக்டர் ஒரு பொண்ணோடெ இருக்கார்னு ஒரு போடு போட்டேன்.

பிர: இவன் சொன்னது நிஜமா பொய்யான்னு தெரிஞ்சிக்கிறதுக்காக பட்டணத்துக்குப் புறப்பட்டிருக்காரு.

சுரே: புறப்பட்டா என்னடா? பட்டணத்திலே யிருந்து அப்படியே

டில்லிவரையிலே கொண்டு போயிட மாட்டேன்.

பிரே: அதெல்லாம் எதுக்கடா? அவரு இந்த வீட்டைவிட்டே வெளியே போகாமே நான் செய்யிறேன பாரு.

சாம்பசிவந்திடம் வருகிருள் பிரேமா.

பிரே: எங்கே புறப்பட்டீங்க?

சாம்: சுரே சொல்றதைக் கேட்டியா பிரேமா?

பிரே: என்னவாம்?

சாம்: நம்ம சுகுமாரன் பட்டணத்துக்கு வந்துட்டானும். யாரோ வெள்ளைக்காரியாம். அவனேடெ குடும்பம் நடத்துருளாம். அதான் போயி பாத்துடலாம்னு புறப்பட்டேன்.

பிரே: அப்புறம் போகலாம் அங்கே. இப்பப் போயி உங்க பொண்ணு பவிசைப் பாருங்க.

சாம்: ஏன் பிரேமா! சாவித்திரிக்கு என்ன?

பிரே: அவளுக்கென்னகொள்ளை! இன்னும் ஆறு மாசத்திலே குழந்தையைப் பெத்து கொஞ்சப் போறவ. என் மானம்ல பறிபோகும்...

சாம்: என்ன?

பிரே: என் மேலே ஏன் பாயிறீங்க?

சாம்: சாவித்திரி களங்க மடைஞ்சிட்டாளா?

பிரே: இல்லே, பத்தினிதான் போங்க.

சாம்பசிவம் சாவித்திரியிடம் ஓடுகிருர். அவர் மனம் பதறுகிறது.

சாம்: சாவித்திரி...!

சாவி: அப்பா...!

சாம்: அப்பான்னு சொல்ல உரிமை உள்ளவள்தானு? ... அதைத்தான் கேட்கிறேன். சொல்லு... சொல்லும்மா...அந்த ஒரு வார்த்தையிலேதான் என் மானம், மரியாதை, பெருமை எல்லாம் இருக்கம்மா... சொல்லு...

சாவி: நான் மகா பாவியப்பா...

சாம்: பாவியா...? என் மகள் பாவியா......? நீ ..... களங்கமடைஞ்சவளா? சீ......மூடப் பெண்ணே..... கண்ணைப் போலப் பாதுகாத்தேனே, அதுக்குப் பலனு இது? என் அன்பையே ஆகாரமா ஊட்டி வளர்த்தேனே, அதுக்கு நீ அளிக்கிற பெருமையா இது? உன் நன்மைக்காகவே வாழ்ந்து வந்த என்னை இந்த அவமானப் படுகுழியில் தள்ளித்தானு சாக அடிக்கணும்? ஒரு துளி விஷத்தைக் கொடுத்து என்னைக் கொன்னுருக்கக் கூடாதாம்மா? இவ்வளவு இரக்கமற்ற பாவியா என் மகள்? என்னைக்கும் மாருத பழியைச் சுமத்திவிட்டு இன்னும் உயிரோடு இருக்கியே. ஒரு முழக் கயிறு கிடைக்கவில்லை? ஒரு சிறு கத்திகூட உன் வாழ்க்கையை முடிச்சிருக்குமே. மகள் விபசாரிங்கற பட்டத்தை வேறே நான் சுமக்கணுமா?

தள்ளாடியபடி தன் ரூமுக்குப் போகிருர்,

மனமுடைந்த நிலையில் வந்த சாம்பசிவம் பிரேமாவைக் கடிந்து கொள்கிருர்.

சாம்: பரம்பரையா மாசு மருவில்லாமே இருந்து வந்த குடும்பத்திலே, எங்கோ கிடந்த ஊர்க்காலிகளைக் கொண்டு வந்து வச்சு, திராப் பழியைச் சுமத்திட்டியே. ஊராரும் அரசாங்கத்தாரும் கௌரவிச்சு வந்த என் குடும்பக் கௌரவம் அடியோடு தொலைஞ்சு போயிட்டுதே. இனி நான் வெளியிலே தலைகாட்ட முடியுமா?

பிரே: முடிஞ்சுதா ...?நீங்க பொண்ணு வளத்த பவிசுக்கு என்னை வேறயா திட்டணும்? ஓங்க பொண்ணு தட்டுக்கெட்டுப் போனு அதுக்கு நானு திட்டு வாங்கணும்னு கேக்கறேன்? அடிக்கடி ஓங்க பொண்ணு சித்திரசாலைக்குப் போறது நல்லபடியா இருக்காதுன்னு அப்பவே சொன்னேன். கேட்டீங்களா? இப்

படி அவ செஞ்ச காரியத்துக்கு என்னைத் திட்டுறீங்க. நல்லாத் திட்டுங்க. உங்க பேச்சும் ஊரார் ஏச்சும் கேக்கத்தானே நான் பொறந்திருக்கேன்...

சாம்: ஹூ...ம்...

கஜே: நான் அப்பவே சொன்னேன், மேல்புறத்திலே பிறத்தியாரைக் குடித்தனம் வைக்க வேண்டாம்னு. கேட்டீங்களா?

சாம்: எல்லாம் நான் கொடுத்த சலுகை. ஈசா, இந்த உயிர் போகவில்லையே இன்னும்!...

பிர: நீங்க நினைச்சவுடனே போயிடுமான்ன?

சாம்: நான் என்னப்பா செய்வேன்?

பிர: நிம்மதியா இருங்க.

கஜே: இந்தப் பழிச்சொல்லோடெ நிம்மதி வேறேயா இருக்குது?

சாம்: செத்தாத்தான் எனக்கு நிம்மதி!

பிர: நிறைய படிச்சவங்க. உலகானுபவம் நிறைஞ்சவங்க, தற்கொலை செய்துகொள்றது மகாப் பாபமுன்னு பிறருக்கு புத்தி சொல்லக் கூடியவங்க. நீங்களே இந்த முடிவுக்கு வரலாமா?

சாம்: நான் சாகல்லேன்னு, ஊர் வந்து சொல்லாலே சுட்டுக் கொன்னுடுமே தம்பி....

பிர: அவங்களுக்கு இந்த விஷயம் தெரிஞ்சாத்தானே?

கஜே: அட என்னப்பா, தெரியாமெ போயிடுமாக்கும்.

பிர: தெரியாமல் நான் செய்யறேன். உலகத்திலே எவ்வளவோ பெரிய காரியமெல்லாம் பரம ரகசியமா நடக்குதாம். இந்தச் சுண்டைக்காய் காரியத்துக்கு ஒரேயடியா கலங்குறீங்களே. இந்த மாதிரி காரியங்களுக்கு உதவாமே பிரண்டுன்னு நான் ஏன் இருக்கேன்? எல்லாத்தையும் நான் 'பர்பெக்டா' முடிக்க வேண்டியது—நீங்க மட்டும் கொஞ்சம் கூட தவலையில்லாமே நிம்மதியாயிருக்கவேண்டியது! தட்ஸ் ஆல்!

காட்சி 10

தந்தையின் பேச்சால் மனமுடைந்த சாவித்திரி தற்கொலை செய்து கொள்ள கிணற்றை நோக்கி ஓட முடியாமல் ஓடுகிறாள். சரஸா அவளைத் தொடர்ந்து ஓடி கிணற்றில் விழ விருக்கும் அவளைத் தடுத்து விடுகிறாள்.

சர: சாவித்திரி...!

சாவி: தடுக்காதே சரஸா, தடுக்காதே! அப்பாவினுடைய ஆணை, நான் சாகத்தான் வேண்டும்.

சர: அப்பாவுக்கும் தெரிஞ்சுட்டுதா?

சாவி: தெரியாமெப் போகுமா? என்னாலே இந்தக் குடும்பத்துக்குப் பழிச்சொல் ஏற்படவே கூடாது.

சர: பொறு சாவித்திரி! இங்கே இருக்கிற எல்லாருக்கும் விஷயம் தெரியத்தான் செய்யும்...அதுக்காக...

சாவி: ஐயய்யோ சரஸா! அவுங்க முகத்திலே எல்லாம் எப்படி விழிப்பேன்? என்னைத் தடுக்காதே.

சர: தடுக்கல்லே! தற்கொலை செய்து கொள்வதிலே உன் குற்றம் மறைந்துவிடுமானு, நல்ல முடிவுதான். உன் குடும்பத்துக்குப் பழிச்சொல் ஏற்படாமல் போகுமானு, அது உயர்ந்த முடிவுதான். தகர்ந்துபோன உன் அப்பாவினுடைய மனம சாந்தி அடையுமானு, அது ரொம்ப சிறந்த முடிவுதான். நான் தடுக்கல்லே. ஆனு ...தவறு செய்தவங்களுக் கெல்லாம் தற்கொலைதான் முடிவுன்னு ஜன சமுதாயம் வாழுமா? மனிதர்கள் என்னைக்குமே சாகிறதில்லே சாவித்திரி. செயலால் அவுங்க வாழ்ந்து கொண்டு தான் இருப்பாங்க. நீ உன் உயிரை போக்கிக் கொண்டாலும் உன்னைப் பற்றிய நினைப்பு ஜனங்களிடத்திலே இருக்கத்தான் செய்யும். உன்னையும் குடும்பத்தாரையும் அவங்களும் அவங்க பரம்பரையும் தூற்றிகிட்டே தான் இருப்பாங்க..... இப்போ

சொல்லு. தற்கொலையாலே உனக்குச் சாவு உண்டா? தற்கொலை செய்து கொள்றதில்லேன்னு எனக்கு வாக்கு கொடுத்ததை மறந்திட்டியா?... பாவம், பழிபாவத்தை அறியாத ஒரு ரத்த பிண்டம். குற்றம் குறை அறியாத உன் குழந்தை. மான அவமானம் அறியாத ஒரு ஜீவன்.. பேய் உணர்ச்சியின் பயனாக இருக்கலாம். ஆனாலும் நீ தானே அதன் தாய்? நீ விடும் ஒவ்வொரு மூச்சிலேயும் வளர்ற ஜீவன். நீ அழிஞ்சா அதுவும் அழியுமே! அது மேலே அன்பில்லையா? ஆசையில்லையா? உன் வயிற்றிலே தோன்றினது அதன் குற்றமா சாவித்திரி?

சாவி: சரஸா...!

சரஸாவின் தோள் மீது சாய்ந்து முகம் புதைத்துக் கதறுகிருள் சாவித்திரி.

காட்சி 11

சுரேயும் பிரண்டும் பேசிக்கொண்டிருக்கின்றனர். சரஸா மீது சுரேவுக்குக் காதல்!

சுரே: சரஸா எவ்வளவு அழகா இருக்கா, பாத்தியாடா?

பிர: சரிதான்! உன் கண்ணை அவ மேலே போட்டுட்டியா? சரியான ஆளுப்பா நீ!

சுரே: நான் என்ன செய்வேன்? என் கண்ணைத்தான் இழுக்குதே.

பிர: கண்ணை மட்டுந்தானு? கண்ணை இழுக்கும்போது காது, மூக்கு, வாய், மனம் எல்லாத்தையும் சேத்து குடுத்திடவேண்டாமா?

சுரே: போடா இடியட்! அவ என் மனசிலே குடி புகுந்திட்டா.

பிர: ஏண்டா சுரே? ஒரு காரியம் செய்.

சுரே: என்னடா அது?

பிர: முதல்லே அவளைத் தூக்கி நெஞ்சிலே வைச்சுக்கிட்டா உன் பிளானெல்லாம் ஏரோப்ளேனுயிடும்பா. சுரே! அந்தப் பொண்ணு ஒரு கந்தகசாலை...கொஞ்சம் ஜாக்கிரதை!

சுரே: கந்தக சாலை என்னடா? எரிமலையாயிருந்தாலும் அய்யாவைக் கண்டா அடங்கித்தான திரவேணும். ஏன் தெரியுமா? இவரு கையிலே பணம்...பணம்.

தோட்டத்தில் பச்சிலை பறிக்கும் சரஸாவிடம் போகிருன் சுரே.

பிர: கஜேந்திரா! நீ சினிமாப் பாக்கறது உண்டா?

கஜே: சினிமாவா? ஏதுங்க நேரம்?

பிர: நேரங் கிடைச்சாலும் உன் வசதிக்கு ஸீட் வேண்டாம்! உன் தேகத்துக்குச் சிரமமில்லாமே, தம்பிடி செலவில்லாமே ஒரு சினிமா காட்சி காட்டுறேன் வா.

கஜே: செலவில்லாமலா?

சரஸாவிடம் சுரே கொஞ்ச ஆரம்பிப்பதை மரத்தடியில் மறைந்து கவனிக்கிருர்கள் பிரண்டும் கஜேந்திரனும்.

சுரே: என்ன சரஸா, பறிக்கிறே?

சர: பச்சிலை...

சுரே: எதுக்கு அந்த இலை?

சர: மருந்துக்கு...

சுரே: ஒரு மருந்துக்கா? ஆமா யாருக்கு மருந்து?

சர: எனக்குத்தான்...

பிர: (மறைவிடத்தில்) இதுதான் ஆரம்ப காட்சி. இனிமேதான் டெம்போ ஏறப்போகுது.

சுரே: (சரஸாவிடம்) சரஸா! உன் உடம்பு மருந்து சாப்பிட வேண்டிய உடம்பு இல்லியே?

சர: அது எனக்குத்தானே தெரியும்?

சுரே: கரெக்ட்! ஏன் சரஸா, உன் உடம்புக்கு என்ன?

சர: எதுக்கு இந்த அவசியமில்லாத விசாரணை யெல்லாம்?

சுரே: தெரிஞ்சா, ஏதோ என்னுலான உதவியைச் செய்யலாமேன்னு தான் கேட்டேன.

சர: உங்கள் உதவி ஒண்ணும் தேவையிருக்காது.

சுரே: கரெக்ட்.. கரெக்ட்.

கஜே: (பிரண்டிடம்) அடிசக்கே! அய்யா போடு போடுன்னுல்ல போடுறுரு!

பிர: வாங்கு வாங்குன்னு இப்போ வாங்கப் போறுரு பாரு!

சுரே: (சரஸாவிடம்) சரஸா! இந்த சுரேந்திரனைப் பத்தி சாதாரணமா நெனைச்சிருந்தா, அது தவறு.. அதைத் தலைகிழா மாத்திக்கோ. இந்த இலை யாருக்காகப் பறிக்கிறே இப்போ? எதுக்காக பறிக்கிறேங்கிறது எனக்கு நல்லாத் தெரியும்....

சர: எல்லாந்தான் தெரிஞ்சிருக்கே. பின்னே என்ன?

சுரே: ஆமா, உன் அண்ணன் எங்கே?

சர: எங்கேயோ?

சுரே: இனிமே இந்தப் பக்கம் திரும்பமாட்டானே?

சர: தெரியாது.

கஜே: (பிரண்டிடம் மறைவிடத்தில்) தம்பி ரொம்ப முன்னேறுதே.

பிர: பின்வாங்கற கட்டமும் வரப்போகுது.

சுரே: (சரஸாவிடம்) ஆமா, உனக்குத் துணை?

சர: நானேதான்.

சுரே: சேச்சே! என்ன பயித்தியக்காரத்தனம்! ஒரு இளம் பொண்ணு... ஆம்புளை துணையில்லாமே இருந்தா உலகம் என்ன சொல்லும்?

சர: உம்மைப் போல வெறிபுடிச்சவங்களை பொண்ணு வேட்டையாடச் சொல்லும்.

சுரே: சரஸா, சரஸா! என்னை அப்படி நினைச்சுட்டியே சரஸா! நமக்கு உடல்தானே இரண்டு. உயிர் ஒண்ணு இல்லியா?...நீ லவ் லெட்டர்; நான ஸ்டூடண்ட். நீ ஹல்வா; நான் பிளேட். யூ ஆர் மை ஸ்விட் ஹார்ட் சரஸா... சரஸா!

சர: ரொம்ப நல்லா இருக்கே!

சுரே: ஏன்? என்ன குறைச்சலாம்?

சர: மூளை...

சுரே: ஏய், என்ன வாய் ரொம்ப நீளுதே.

சர: உங்க கொட்டத்தை அடக்க.

சுரே: அவ்வளவு தைரியமா?

சர: அதுகூட ஆணுடைய பிறப்புரிமையா?

சுரே: சரஸா! நீ ரொம்ப மேலே போறே!

சர: இல்லே, தரையில்தான் நிக்கிறேன்.

சுரே: சரஸா! நீ வார்த்தைக்கு வார்த்தை பதில் சொல்றதே, அடடா என்ன அழகா இருக்கு தெரியுமா?

சரஸாவின் கையைப் பிடிக்கிறுன் சுரே. புலியெனச் சீறும் அவள் அவன் கன்னத்திலே பளீரென்று அறைந்துவிட்டு ஓடிவிடுகிருள், பிரண்ட் மறைவிடத்திலிருந்து வெளியே வருகிருன்.

பிர: டேய் சுரே! என்னடா எங்கேயோ போறேன்னுட்டு இங்கே வந்து...

சுரே: போடா நான்சென்ஸ்.. இடியட், பூல்!...சந்தர்ப்பம் தெரியாமே!...

பிர: ஏன், சூடு பலமோ?

சுரே: யாருக்கு பலம் சூடு? என்னடா உளர்றே வந்து?

பிர: இல்லே, சடார்னு ஒரு சத்தம் கேட்டுது. அந்த சத்தத்துக்கு அஞ்சு விரலும் பதிஞ்சிருக்கணுமே!

சுரே: அப்பவே வந்துட்டியா?

பிர: பின்னே நீ லவ் மாட்டர்லே பிரவேசிக்கிறேன்னு ஒரு வார்த்தை சொல்லியிருக்கப்படாது? என் மூளையைக் கடன் கொடுத்திருப்பேனே, பாவம், கனியாத பழம், அதை தடிகொண்டு அடிச்சா...

சுரே: கனியாத பழமும் கனியும்.

பிர: தேர் ஈஸ் னோ டேஸ்ட். ருசி இருக்காதுடா முண்டம், வா!

சாவித்திரிக்கு சரஸா மருந்து அரைக்கும்போது பிரேமா வந்து அவளை ஏசுகிருள்.

பிரே: என்னடீது?

சர: சாவித்திரிக்கு மருந்து.

பிரே: அட எழவே.. பத்துப் பிள்ளைக்காரிக்கு மலடி மருத்துவம் பார்த்தாளாம்!...என்னடி முழிக்கிறே ரோசங்கெட்ட மூதேவி. அண்ணன் குழந்தையை அலங்காமே நலுங்காமே பாதுகாக்கிறியா? விவஸ்தை கெட்டவளே! நானு இருந்தேன்னு அப்பவே நாக்கைப் பிடுங்கிட்டிருப்பேன். நிற்கிறதைப் பாரு. விதியத்த கழுதைக்கு விடு வேறே! சொரணை இல்லாத எருமைக்குச் சுகமான சாப்பாடு! (சரஸாவைத் தள்ளிவிட்டு) போடி போ அதான் வழி போ!

சரஸா கிளம்பும்போது சாவித்திரி வந்து தடுக்கிருள்.

சாவி: நில்லு சரஸா! அவ ஏன் போகணும் சித்தி?

பிரே: அடியம்மாடி! நாத்தனுருக்குப் பரிஞ்சு பேச வேறே வந்துட்டியா? நல்ல மரியாதைதாண்டி! தட்டுகெட்ட வேசிக்கு மட்டுமரியாதை எங்கேடி இருக்கும்? மானங்கெட்டவளே!

சாவி: போதும் சித்தி! நான் மறுக்க விரும்பலே. நான் செஞ்ச தவறுக்காக என் ஜீவன் அணுவணுவாப் போயிகிட்டு இருக்கு சித்தி! உன்னைப்போல மறைச்சு வாழவும் விரும்பலே!

பிரே: ஏண்டி, என்னடி சொன்னே?

சாவி: எல்லாம் தெரியும். உலகம் என்னை ஏசத்தான போகுது. ஆனு என்னைத் திட்டுறதுக்கு உனக்கு யோக்கியதை உண்டான்னு யோசிச்சுப்பாரு. இவ அண்ணனை இங்கே அழைச்சு வந்ததும். சித்திரசாலை அமைச்சுக் கொடுத்ததும் ஒரு நாளைக்குப் பத்து தடவை நீ சித்திரசாலைக்கு போய் போய் வந்ததும்—எதுக்குன்னு எனக்குத் தெரியும் சித்தி. என்னைப் பழிக்க உனக்கு வாயுமில்லே. இவளை விரட்ட உனக்கு உரிமையுமில்லே. வா சரஸா!

சாவித்திரியும் சரஸாவும் போனவுடன் ஒரு தந்தியுடன் பிரேமாவைச் சந்திக்கிருன் சுரே.

சுரே: ஸிஸ்டர்! நம்ம கவலையெல்லாம் பினிஷ்ட்!

பிரே: என்ன, என்ன சுரே?

சுரே: இதோ தந்தி! உங்க மாப்பிள்ளை டாக்டர் சுகுமார் பத்தாந் தேதி பாம்பே துறைமுகத்திலே இறங்கப் போருர். பன்னண்டாந் தேதி இங்கே வரப்போருர்.

பிரே: ஹா, வரப்போகிருரா?

சுரே: ஏன், என்ன ஷாக் அடித்த மாதிரி நடுங்கறே?

பிரே: அவர் வந்துட்டா நம்ம காரியமெல்லாம் கெட்டுப் போயிடுமே.

அப்போது அங்கு வரவிருந்த பிரண்ட் இவர்களிவரும் ரகசியம் பேசுவதறிந்து மறைந்து கேட்கிருன். சுரே அதையறியாது தொடருகிருன்.

சுரே: யூ ஆர் ராங் ஸிஸ்டர், ராங்! நல்லா மூளையைப் போட்டு அலசிப் பாரு. முடியல்லே, நான் சொல்றதைக் கேளு. டாக்டர் பன்னண்டாந் தேதி வருவார். வருவாரா! வந்ததும் சாவித்திரியைப் பத்தித் தெரிஞ்சுகுவார். தெரிந்ததும் அந்த அதிர்ச்சியிலே மூச்சு விடுறதையே நிறுத்திடுவார். அத்தோடே டாக்டர் பினிஷ்ட தென். கிழவனு, அவரும் இப்ப உயிரை விட்டுக்கிட்டே இருக்கார். அதைச் சரிப்படுத்த நம்ம பிரண்டை. கூடவே வச்சிருக்கேன். டாக்டருடைய சமாசாரத்தைக் கேள்விப்பட்டதும் கிழவரும் பினிஷ்ட். அப்புறம் யாரு. சாவித்திரிதானே? கேளு. புருஷன் இல்லாமே புள்ளையைப் பெத்துட்டான்னு ஊர் சிரிப்பாங்க. வெளியிலே தலைகாட்ட முடியாது. அப்புறம் என்ன நடக்கும்? அம்மா ஒரு முழக்கயிற்றிலே ஊசலாடுவா! இல்லே இருக்கவே இருக்கு. நம்ம கைவரிசையைக் காட்டிடுவோம்; அதோடு அவளும் பினிஷ்ட்.

பிரே: எக்ஸலண்ட் சுரே!

சுரே: தாங்யூ ஸிஸ்டர்.:எனக்கு ஒரு கப் காப்பி குடு.

பிரே: உன் சக்கரை வாய்க்கு காப்பி மட்டும்தானு.. ஸ்வீட் எல லாம் தர்றேன் வா.

போய் விடுகிருர்கள். பிரண்ட் தனக்குள் பேசிக்கொள்கிருன்.

பிர: மைகாட்...கொஞ்சம் தவ றிட்டாங்க. பிரண்டையும் இந்த வீட்டை விட்டு அனுப்பிச்சுட்டில்லே இவுங்க திட்டத்தைப் போட்டிருக்க ணும்...ரைட். திட்டம் போட்டவங்க கஷ்டம் அடையுராங்க, தட்ஸ் ஆல்!

தன்னுடைய தீர்மானத்துக்கு சரஸாவின் உதவி தேவை என்று நினைத்து அவளிடம் போகிருன் பிரண்ட். அவள் வீட்டை விட்டு வெளியேற மூட்டை கட்டிக் கொண் டிருக்கிருள்,

பிர: எங்கே சரஸா, புறப்பட்டுக் கிட்டிருக்கே?

சர: எங்கேயாச்சும் போய்த் தானே ஆகணும்?

பிர: சாவித்திரியை இந்த நிலை யிலே விட்டுட்டா?

சர: நான் இருக்கிறதுனுலே சாவித்திரிக்குத்தாண்ணு துயரம் அதிகம்!

பிர: நீயும் போயிட்டியானு சாவித்திரி தற்கொலைதான் செய்து கொள்வா.

சர: நான் இருந்தா மட்டும் என்ன? எப்போவானுலும் அவ ளுக்கு அந்த முடிவுதான். இந்த அவமானத்தோட அவ உயிர் வச்சி ருப்பான்னு நினைக்கிறீங்களா?

பிர: ஏன் சாகணும்? எனக்குப் புரியலேமமா! இந்த மாதிரி தவறு செய்யிற எந்த ஆணும் தற்கொலை செய்து கொண்டதாக நான் கேள்விப் பட்டதே இல்லியே.

சர: அதனுலே ..பெண்கள் கெட் டுப் போகலாம்னு சொல்றீங்களா?

பிர: நான் சொல்லல்லியே. பெண்களைக் கெடுத்து நடுத்தெரு விலே அலையவிட்ட ஆண்கள் மட்டும் உல்லாசமா வாழலாம், இல்லியா? அவசரத்திலே மதி இழந்து கொலை செய்யிற குற்றவாளிக்குக்கூட நீதி பதிகள் கருணை காட்டுருங்க. செய்த தவறுக்காக உருகி உருகிச் சாகிற சாவித்திரிக்கு மன்னிப்பே இல்லையா? கொலையைக் காட்டிலும் கோர மானதா அவ செய்த தவறு? என்ன சரஸா, கொஞ்சங்கூட இரக்கம் இல்லாமே நீயும் பேசறியே.

சர: இரக்கம் இல்லாமலா? என் அண்ணன் செய்த தவறுக்குப் பரி காரமா நான் எதையும செய்யத் தயா ராயிருக்கேன். இந்தக் குடும்பத் திலே படிஞ்ச கறையைப் போக்கிற துக்கு வழி இருந்தாச் சொல்லுங்க. அதுக்காக என் உயிரை வேணு மானுலும் கொடுக்கிறேன். சாவித் திரி மேலே பழியே இல்லாமே போகு மானு அவ குழந்தைக்கு நானே தாயாக இருக்கேண்ணு ..

பிர: பத்தாம் தேதி டாக்டர் பாம் பேக்கு வரப் போருர் சரஸா!

சர: ம் ..சாவித்திரிக்குத் தெரி யுமா அண்ணு?

பிர: தெரியாது. பெரியவருக்குக் கூடத் தெரியாது. தெரியவும் கூடாது. நீ உடனே பாம்பேக்குப் போயி அமர் ஜோதி கப்பல்லே வந்து இறங்கற டாக்டரை அங்கேயே தடுத்து நிறுத் தணும்.

சர: எப்படி அண்ணு முடியும்?

பிர: எப்படியோ முடிக்கறது தான உன் வேலை. டாக்டர் மட்டும் இந்தச் சமயம் இங்கே வரவே கூடாது. சாவித்திரியை உயிருக்குயி ராய் நேசிக்கிற அவருக்கு விஷயம் தெரிஞ்சா பிராணனையே விட்டுவிடு வாரம்மா. எத்தனையோ ஜீவன் களுக்கு உபகாரியான அந்த மனுஷ னுக்கு இந்தக்கதி வரலாமா? சொல்லு ..! உன் அண்ணனுலே இந் தக் குடும்பமே சர்வ நாசமாக ணுமா?

சர: நான் எப்போண்ணு புறப் படணும்?

பிர: இந்த நிமிஷமே,...

சர: நான் டாக்டரைப் பார்த்தது கூட கிடையாதே.

பிர: போட்டோ தர்றேன். போய்ச் சேர்ந்ததும் உடனே லெட்டர்போடு. பிறகு நீ என்ன செய்யணுங்கறதைப் பத்தி நான் எழுதறேன்.

சர: சரியண்ணு...

பிர: இன்னொரு விஷயம்...மறந்துடாதே. இங்கே என் அட்ரஸ், பிரண்ட், கோர்ஆப் போஸ்ட் மாஸ்டர் ஞாபகமா எழுதி வச்சுக்க. சரி, சுரே வருன். நீ போ.

பம்பாய்த் துறைமுகத்தில் வந்திறங்கிய டாக்டர் சுகுமார் நேரமாகி விட்டதால் அவசரமாக விக்டோரியா டெர்மினஸுக்கு டாக்ஸியில் சென்று விடுகிருன். அவனைத் தேடிவந்த சரஸா விஷயமறிந்து ஸ்டேஷனுக்கு வேருெரு டாக்ஸியில் போகிருள். டாக்டரின் கார் போகும் வேகத்தில், மனம் வெறுத்து அலேயும் ராஜன் வந்து மாட்டிக் கொள்கிருன். உடனே சுகுமார் அவனை மேனன் நர்ஸிங் ஹோமுக்குத் தூக்கிச் செல்கிருன். அங்கே அவனுக்கு ஒரு காலே எடுத்தாக வேண்டுமென்று டாக்டர் கூறுகிருர். பிறகு ராஜனிடம் வருகிருன் சுகுமார்.

சுகு: இப்போது எப்படியிருக்கிறது நண்பரே?

ராஜ: எவ்வளவோ தேவலே.

எழுந்திருக்க முயற்சிக்கிருன்.

சுகு: ஊஹும். எழுந்திருக்க வேண்டாம். அப்படியே படுத்திரும். கால் அசையவே கூடாது.

ராஜ: ஒண்ணும் சிரமமில்லே!

சுகு: ரொம்ப பொறுமைசாலி தான் நீர். உம்மைப்போல ஒரு நல்ல மனிதருக்கு என்னுல் இந்த கதி எற்பட்டதே.

ராஜ: உங்களாலா? இல்லே. இல்லவே இல்லே. உங்களாலே எதுவுமில்லே.

சுகு: தைரியமாய் இருங்கள். கூடவே இருந்து உம்மைக் கவனித்துக் கொள்ளுகிறேன்.

ராஜ: உங்கள் வேலேயெல்லாம் விட்டுவிட்டு வீணுகக் கஷ்டப்படுகிறீர்களே.

சுகு: உமது காயத்தைக் குணமாக்குவதுதான் என் முதல் வேலே. நானும் ஒரு டாக்டர்தான் நண்பரே!

டாக்டர் இல்லாதபோது வெளியே நொண்டியபடி கைத்தடிகளுடன் கிளம்பி விடுகிருன் ராஜன். சுகுமார் வந்து தடுக்கிருன்.

சுகு: ஏன் ராஜன், படுக்கையை விட்டு எழுந்து வந்துவிட்டீர்?

ராஜ: நான் போக வேண்டும் டாக்டர்!

சுகு: போக வேண்டுமா? ஊஹும். கூடவே கூடாது. நல்ல காரியம் செய்தீர்! இந்த நிலேயில் நீர் நடப்பதே ஆபத்து... இப்படி உட்காரும்.

ராஜ: உடம்பெல்லாம் சொஸ்தமாகி விட்டது டாக்டர். இங்கே எனக்கு அமைதியே யில்லே—

சுகு: ஏன் ராஜன், உம்முடைய குடும்பத்தார் எந்த ஊரில் இருக்கிருர்கள், சொல்லும்?... நான் தந்தி கொடுத்து அவர்களை வரவழைக்கிறேன்.

ராஜ: குடும்பமேது டாக்டர்.

சுகு: உறவினர்கள்?

ராஜ: யாருமில்லே.

சுகு: ச்சு ச்சு ச்சு அனுதையா?

ராஜ: அனுதைதான் டாக்டர்.

சுகு: அட பாவமே! இந்த நிலேயில் எப்படி வேலே செய்து ஜீவிக்க முடியும்? நண்பரே, நீர் எங்கும் போக வேண்டாம். என்னுடனேயே இருந்துவிடும்.

ராஜ: முடியாது டாக்டர்!

சுகு: ஏன், உமக்கு வேண்டிய செளகரியங்கள் எல்லாம் நான் செய்து தருகிறேன்.

ராஜ: செளகரியமா? இந்த ஈன ஜென்மத்திற்கு செளகரியம் வேறு வேண்டுமா? என்னையும் ஒரு மனிதனுக நினைத்து உங்கள் பொன்னுன நேரத்தை வீணுக்க வேண்டாம் டாக்டர்.

சுகு: ஏன் நண்பரே, இவ்வளவு விரக்தி?

ராஜ: டாக்டர்! என்மீது இரக்கம் காட்ட வேண்டியது அவசியமென்று உங்களுக்குத் தோன்றுகிறதா?

சுகு: அவசியமில்லாமல்...?

ராஜ: அவசியமே இல்லை. டாக்டர், அவசியமே இல்லை. என்னை மனித இதயம் படைத்தவன் என்று எண்ணுகிறீர்கள் டாக்டர்?

சுகு: வேறு எப்படி எண்ணுவது?

ராஜ: ம்... உங்களுக்கு உலகமே தெரியாது டாக்டர், உலகமே தெரியாது.

சுகு: இல்லையே! அப்படி நீர் என்ன செய்தீர் நண்பரே?

ராஜ: செய்தேன், மனிதனை நிர்மூலமாக்கும் செயல் ஒன்றைச் செய்தேன் டாக்டர்,

சுகு: கொஞ்சம் அமைதியாச் சொல்லும். அவ்விதம் என்னதான் செய்திருக்க முடியும்? ஏதாவது பொய் சொன்னீரா?

ராஜ: பொய்..பொய் கூட இந்தக் காலத்திலே ஒரு குற்றமா?

சுகு: பின்பு எங்கேயாவது திருடினீரா?

ராஜ: அதெல்லாமில்லை டாக்டர். அதெல்லாமில்லை. அப்படி நடந்திருந்தால்தான் அதற்காக தண்டிக்கப்பட்டு என் வாழ்வும் முடிஞ்சிருக்கும். அதைப்பற்றி என்னை ஒன்றும் கேட்காதீர்கள் டாக்டர்.

சுகு; நண்பரே! நான் அறிந்தால் உம்மை வெறுப்பேன் என்று நினைக்கிறீரா?

ராஜ: இல்லை, என் ராட்சஸச் செயலை எண்ணி உங்கள் அருமையான மனம் புண்படுமே.

சுகு; அப்படி ஒன்றும் நேரிடாது. சொல்லும் நண்பரே! என்னிடம் சொல்வதற்கென்ன. தாராளமாய்த் தெரிவிக்கலாம். சொல்லுங்கள், யோசிக்கவே வேண்டாம்.

ராஜ: ஒரு பெண்...
சுகு: ம்...ஒரு பெண்...?
ராஜ: இளம் பெண்...
சுகு: ஊம்...ம்...

ராஜ: அவளைக் கெடுத்துவிட்டேன் டாக்டர்!

சுகு: நல்ல மனிதரய்யா நீர்! ஓர் இளம் பெண்—நீரும் அழகான வாலிபர்! இது இயற்கைதானே!

ராஜ: அவள் வாழ்வைப் பாழாக்கி விட்டேன் டாக்டர்.

சுகு: அதெப்படி ஐயா பாழாகும்? அந்தப் பெண்ணை நீரே கல்யாணஞ் செய்து...

ராஜ: டாக்டர்! அந்தப் பெண...

சுகு: ஓகோ, அந்தப் பெண்ணின் தாய் தகப்பன் இந்த விஷயத்திலே குறுக்கே நின்றார்கள். அப்படி இருந்தபோது உங்கள் தொடர்பு ஏற்பட்டுவிட்டது...

ராஜ: டாக்டர், நான் சொல்வதைக் கேளுங்கள்.

சுகு: இரும்... இரும்... இதுமாதிரி எத்தனையோ கேஸ்கள். பெற்றோர்களின் மூடத்தனத்திற்குப் பலியான உயிர்களுக்குக் கணக்கே இல்லை. இருக்கட்டும், இந்த விஷயத்தில் எந்த அளவு முடியுமென்று பார்க்கிறேன். அந்தப் பெண்ணைப் பற்றிய எல்லா விபரமும் சொல்லும். முதலில் அந்தப் பெண்ணுக்கும் உமக்கும் எப்படித் தொடர்பு ஏற்பட்டது? படிக்கும்போதா?

ராஜ; இல்லை டாக்டர்! அவள் தந்தையின் ஆதரவுபெற்று சித்திரந் தொழில் நடத்திக்கொண்டிருந்தேன் அவள் வீட்டில் ஒரு பகுதியில்.

சுகு: ஓஹோ, நீர் சித்திரம் எழுதுபவரா?...ம் ..சரி, சரி ..அப்புறம்?

ராஜ: நான் படம் எழுதும்போது அவள் அடிக்கடி வந்துபார்ப்பதுண்டு. ஓவியன் விரும்பும் அழகு அவளிடத்திலே ..

சுகு அவ்வளவு அழகான பெண்ணு?

ராஜ: பெண் சித்திரம் டாக்டர்! பெண் சித்திரம். என் ஓவியங்கள் அவள் உள்ளத்தைக் கவர்ந்தன.

சுகு; கேட்பானேன், முதலில் ஓவியத்தில் மயங்கினாள்—பின்னா... இது இயற்கைதான் நண்பரே.

ராஜ: நான் மனித உணர்வையே இழந்து விட்டேன் டாக்டர், நான் மனித உணர்வையே இழந்து விட்டேன்.

சுகு: கண்டிப்பாக! அந்தப் பெண்ணும் அதே நிலையில்தான் இருந்திருப்பாள். இது பருவ எழுச்சி. சந்தர்ப்பம் வாய்த்தது; சூழ்நிலை உதவியது... இதில் யாரைக் குற்றம் சொல்ல முடியும்? இவ்விதமான இரு உள்ளங்கள் சேரும்போது— அவர்களின் வாழ்வு எவ்வளவு சிறப்பாக இருக்கும் தெரியுமா? நீர் அந்த பெண்ணைத்தானே மணந்திருக்க வேண்டும்? ஏன் அப்படி நடைபெற வில்லை? அதற்குத் தடையாக இருந்தது. என்ன ஜாதியா?

ராஜ: இல்லை, டாக்டர்! அந்தப் பெண் மணமானவள் டாக்டர்...

சுகு: ம்... அந்தப் பெண்... மணம்...

ராஜ: மணம் செய்யப்பட்டவள்.

சுகு: ஓகோ...ம்... இது போன்ற தவறு சர்வ சாதாரணமாக நடந்து கொண்டுதான் இருக்கிறது. இதனால் சீர்கெட்ட குடும்பங்கள் எத்தனையோ...! நடந்த கொலைகள்.. ஏன் நண்பரே, அப்படி ஏதாவது விபரீதம் நேர்ந்துவிட்டதா?

ராஜ: இல்லை டாக்டர்...

சுகு: பின் ஏன் இவ்வளவு கவலைப்படுகிறீர்கள்?

ராஜ: ஒரு கௌரவமான குடும்பத்தில் ஒரே பெண், டாக்டர்! அவள் வாழ்வு பாழாய்ப் போய்விட்டதே!

சுகு: எந்தக் குடும்பமானால் என்ன? தவறு என்னவோ நடந்து விட்டது.

ராஜ: எங்கள் பாபச் செயலின் சின்னம் வளர்ந்தது. விஷயம் வெளிக்குத் தெரியுமானால், பழிச் சொல்லுக்கு ஆளாகிய அந்தப் பெண்...

சுகு: கணவன் இருக்கும்போது பழிச்சொல் ஏது?

ராஜ: அவள் கணவன் வெளி நாட்டில் இருக்கிறார் டாக்டர்!

சுகு: (திடுக்கிட்டு) என்ன அவரும் அங்கில்லையா? ஓகோ! நீங்க கவலைப்பட்டதின் காரணம் இப்போதுதான் நன்றாய்த் தெரிகிறது. மகா பயங்கரமான விஷயம். பெரிய தவறு நண்பரே, பெரிய தவறு. ஊராரின் பழிச் சொல்லுக்காளாக்கி எங்கேயோ நீர் ஓடி வந்துவிட்டீர் தாய், தந்தை, உற்றார், உறவினர்களாலும் வெறுக்கப்படும் அந்தப் பெண் தன்னுடைய சிசுவையும் அழித்துத் தானும் இறக்கத் துணிந்திருப்பாளே. என்ன இருந்தாலும் நீர் அந்தப் பெண்ணை நிராதரவாக வீட்டுவிட்டு வந்திருக்கவே கூடாது. குற்றம் உம்பேரில்தான் இருக்கிறது.

ராஜ: டாக்டர்! அவள் ஒரு சாதாரண பெண்ணல்ல, டாக்டர்! ஏதோ ஒரு அசாதாரணமான நிலை. தன்னை மறந்தாள். மறந்தவள், என்றும் மறந்தவளாக ஆகிவிடவில்லை, டாக்டர்! தவறியவள் தவறின் சிகரமாக ஆகிவிடவில்லை டாக்டர். ஊர் சிரிக்குமே என்றுகூட அந்தப் பெண் அஞ்சவில்லை டாக்டர்! உணர்ச்சி வசப்பட்டு உலைக் களத்திலே விழுந்து அறியாச் செல்வத்தைப் பறி கொடுத்து விட்டேனே என்று அலறினள்... டாக்டர், அலறினள்.

சுகு: ச்சு... ச்சு... என்ன பரிதாபம்... இவ்வளவு உயர்ந்த மனப் போக்குள்ள பெண்ணா அவள்? அப்படியானால் அந்தப் பெண்ணை எப்படியும் காப்பாற்றித்தான் தீர வேண்டும்.. உம்முடைய இந்த நிலையில் நீர் எதுவும் செய்ய முடியாதே! உம்... பரவாயில்லை... முதலில் அந்தப் பெண் எந்த ஊரில் இருக்கிறாள்... ம்.

ராஜ: உங்கள் உத்தேசம் முடியாது டாக்டர். களங்கத்துடன் கணவனின் முகத்தில் விழிக்கவும் விரும்பவில்லை அவள்... உயிர் வாழவும் விரும்பவில்லை... இறந்திருப்பாள் என்று நினைக்கிறேன்.

சுகு: இருந்தாலும் முயற்சித்துப் பார்ப்போம். நண்பரே! அந்தப் பெண்ணின் ஊர் எது, சொல்லும்?

ராஜ: திருச்சி...

சுகு: (கலவரமடைந்து) திருச்சியிலா?

ராஜ. ஆம், டாக்டர்...

சுகு: திருச்சியில் அந்தப் பெண் யார்? அவள் பெயர்...?

ராஜ: சாவித்திரி...

சுகுமார் தடுமாறுகிறன். பதட்டத்துடன் பேசுகிறன்.

சுகு: சாவித்திரி! திருச்சியில் உயர்ந்த குடும்பத்தில் பிறந்த ஒரே பெண்... கணவன் வெளி நாட்டில்...

ராஜ: ஆம் டாக்டர்..

சுகு: அவள் தந்தையின் பெயர்?

ராஜ: சாம்பசிவம்...

சுகு: உம் சாம்பசிவம்...

சுகுமார் மார்பை அழுத்திப் பிடித்துக் கொள்ளுகிறுன், ராஜன் இதைக் கண்டு திடுக்கிடுகிருன்.

ராஜ: என்ன டாக்டர்? என்ன டாக்டர்?

சுகு: ஒன்றுமில்லை... எனக்கொன்றுமில்லை. அந்தப் பெண்ணின் பரிதாபம் என்னைக்கூடக் கலக்கிவிட்டது. சொல்லும்...நீர் சொல்லும்... அவளுடைய கணவனின் பெயர்..?

ராஜ; சுகுமாரன்...

சுகு: சுகுமாரன்...

ராஜ: அவரும் ஒரு டாக்டர்...

சுகுமாரின் உதடுகள் துடிக்கின்றன; உடம்பெல்லாம் வேர்த்துக் கொட்டுகிறது; கைகள் நடுநடுங்குகின்றன. அவர் பார்வை பயங்கரமாக இருக்கிறது. ராஜன், தான் இதுவரை சொல்லி வந்த கதையின் பிரதான புருஷன்—சாவித்திரியின் கணவன் சுகுமாரன்தான் இந்த டாக்டர் சுகுமார் என்பதை யறிந்து கொண்டு விடுகிருன். அவன் மனம் உடைந்து விடுகிறது. உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைத்ததோடின்றி, உபகாரம் செய்த சுகுமாருக்கும் தான் செய்த துரோகம் அவனைக் கொல்லாமல் கொல்லுகிறது.

ராஜ: டாக்டர் சுகுமாரா? நீங்களா? சுகுமார் நீங்களா? ஐயய்யோ டாக்டர்...நான் பாவி டாக்டர்... மகாப்பாவி டாக்டர்..

நொண்டிக் கொண்டே தலையில் கட்டையால் அடித்துக்கொண்டு கிளம்பி விடுகிருன். டாக்டர் ஓடித் தடுக்கிருர்.

சுகு: நண்பரே! எங்கே போகிறீர்?

ராஜ: எங்கோ போகிறேன்... டாக்டர்...எங்கேயோ போகிறேன்... டாக்டர்!

சுகு: இந்த நிலையில் நீர் நடக்கவே கூடாது நண்பரே! நடந்தால் உயிருக்கே அபாயமாகும். வாரும் இப்படி...

ராஜ; என் உயிர் போகட்டும் டாக்டர். என் உடல் அணு அணுவாகச் சிதையட்டும் டாக்டர்...

வேகமாக அவன் நொண்ட முயன்றபோது மாடிப்படிகளில் தடாலென விழுந்து உருண்டு பலமான அடிபட்டு மாண்டுபோகிருன். சுகுமார் பிரமை பிடித்தபடி உட்கார்ந்து விடுகிருன்.

காட்சி 12

இதற்குள் பிரண்ட் மூலம் விஷயமறிந்த சரஸா சுகுமாரைச் சந்திக்க அங்கே ஓடி வருகிருள். சுகுமாருக்குப் பிரமை தெளியவில்லை. நாட்கள் பல ஆகின்றன. பிரண்டின் பண உதவியாலும் யோசனைப்படியும் சுகுமாரை சரஸாவே கவனித்துக் கொள்ளுகிருள்.

சுகுமாருக்கு யோசனைகள் அதிகமாவதால் குழப்பமேற்படுகிறது. ராஜன், சாவித்திரி, தான் முன்பு சொன்னவை எல்லாமாகச் சேர்ந்து அவனைச் சித்திரவதை செய்கின்றன. ஆனுல் 'மன்னிக்கும் சுபாவமுடையவனே மனிதன்' என்றகொள்கையுடைய அவன், மனந்தெளிந்து ஒரு தீர்மானத்திற்கு வந்து விடுகிருன். சரஸாவுடன் ஊருக்குக் கிளம்புகிருன்.

காட்சி 13

சுரே பரபரப்புடன் பிரேமாவிடம் ஓடி வருகிருன். வந்து சாவித்திரியைக் கொல்ல பிரேமாவிடம் விஷம் கொடுக்கிருன்.

சுரே கொடுத்த விஷத்தைப் பாலில் கலந்து சாவித்திரிக்குத் தானே கொண்டுபோய் கொடுக்கிருள் பிரேமா. அதை பிரண்ட் கவனித்து சாவித்திரியிடம் பிரேமா சென்றதும் வந்து ஏதோ சாக்கு சொல்லி விஷத்தை வேறிடத்தில் வைத்துவிட்டுப் போகிருன்.

சாம்பசிவம் விஷயமறிந்து பிரண்டுடன் ஸ்டேஷனுக்கு, சுகுமாரை வரவேற்கப் போகிருர். விஷமிடப்பட்ட பாலை சுரே குடித்து விடுகிருன்.

காட்சி 14

சுகுமாரை பிரண்டும் சாம்பசிவமும் வரவேற்கின்றனர்.

யாவரும் வீட்டுக்கு வருகின்றனர். சாவித்திரி குழந்தையைத் தொட்டிலில் கிடத்திவிட்டு சிறிது வெளியே

போனதும் பிரேமா அதைக் கழுத்தை நெறித்துக் கொன்று விட்டுக் கீழே குழந்தையுடன் வந்து விடுகிருள். சுரே இதைப் பார்த்து விடுகிருன்.

பிரே: ஐயோ, நான் இப்போ என்ன செய்யப் போறேன்? இந்த மாதிரி ஏதாவது செஞ்சுடுவாள்னு தானே என் கண்ணைப் போலப் பாது காத்தேன். சண்டாளி! தன் கையாலேயே உன்னைக் கொன்னுட்டாளே...

சுகு: மாமி...!

பிரே: மாப்பிள்ளை மாப்பிள்ளை! இத்தனை வருஷத்திற்கு அப்புறம் இதைப் பாக்கத்தானு வந்தீங்க? கெஞ்சினேன், கும்பிட்டேன் ..குழந்தையைப் பறிச்சேன், கொன்னுட்டாளே சண்டாளி.

பிர: யார்? சாவித்திரியா?

பிரே: அந்தப் பாவியேதான். பெற்ற மனம் கரையிலியே—வளர்த்த கை துடிக்கலியே...பேயா மாறிப் போய் விட்டாளே.

சுகு: நிர்மலமான முகம்; மாசு மறுவற்ற முகம், உனக்குப் பிறப்பிலே இறப்பா? உன் தாய் செய்த தவறுக்கு தண்டனை உனக்கா?

பிர: டாக்டர்!

சுகு: எல்லாவற்றையும் மறந்து அவளை மன்னித்து மான வாழ்விற்கு வழி செய்ய வந்த எனக்குக் கிடைக்கும் வரவேற்பா இது? பூத்து வந்த புது மலரின் நறு மணத்தை முகர விடாது கசக்கி எறிந்த அவள் ஒரு பெண்ணு? அவ்விதமானல் அந்தப் பெண்ணினமே அழிந்து போகட்டும்.

பிர: டாக்டர்... 89674

டாக்: ஊனைக் கொடுத்து தன் உடலை வளர்த்த ஒரு அற்புத ஜீவனைக் கொல்லத் தாயுள்ளம் துணியுமானல் அந்த [illegible] வர்க்கமே அழிந்து போகட்டும்.

பிர: டாக்டர்...

சுரே: டாக்டர்...! (இருமுகிருன்)

பிர: டாக்டர்

சுரே: குழந்தையைக் கொன்றது சாவித்திரி இல்லை டாக்டர்... என் ஸிஸ்டர்.

பிரே: ஆ...சுரே...!

சுரே: உண்மையைச் சொல்லி விட்டு உயிரை விடுகிருன். பிரேமாவுக்குப் பித்தம் பிடித்து விடுகிறது.

அப்போது குழந்தையைத் தேடி காணுது பயந்த சாவித்திரி கீழே வருகிருள். படிகளில் இறங்[கும்] போதே சுகுமாரைக் கண்டு மய[ங்கி] விழுந்து விடுகிருள். சுகு[மார்] அவளைத் தாங்கிப் பிடித்துப் படு[க்க] வைத்து ஆசுவாசப்படுத்துகிரு[ன்]. அவள் கண்களைத் திறக்கிருள்.

சுகு. இப்பொழுது எப்படியிரு[க்]கிறது சாவித்திரி? எங்கே என்னைப் பார், நீ என்னுடைய பழைய சாவித்திரியே தான், கலங்காதே. கொ[ஞ்]சம் அமைதியாக இரு...

சாவி: அமைதி—! உணர்ச்[சி] வசமாகி உருக்குலைந்த எனக்[கு] அமைதி இனி சாவிலேதான்.

டாக: இல்லை. இல்லை .. உனக்[கு] வாழ்வு உண்டு. உன்னை நான மனப்பூர்வமாக மன்னித்துவிட்டேன் சாவித்திரி!

சாவி: நீங்கள் என்னை மன்னிக்கலாம். ஆனல் என் உள்ளம் என்னை மன்னிக்காது. காய்ந்து கருகிப்போன புஷ்பம் இனி மணம் பெருது.

டாக்; உணர்ச்சிக்கு வசப்படுவது மனித இயல்பு சாவித்திரி!

சாவி: அதை அடக்கி ஆளத்தான் ஆண்டவன் ஆறறிவைக் கொடுத்திருக்கிருன். நான் அறிவை இழந்துவிட்டேன், என்ஞல் உங்கள் வாழ்வு சுகம்பெருது. நீங்கள் ஒப்புயர்வற்ற ஒரு தனி மனிதர். இதோ என் அருமைத் தங்கை சரஸா. உங்கள் உயர்ந்த குணத்திற்கேற்ற உத்தமி ..இவளை ஏற்றுக் கொள்ளுங்கள். நான்... என்னை எல்லோரும் மன்னித்துவிடுங்கள்.

சரஸாவை சுகுமாரிடம் ஒப்படைத்து விட்டு நிம்மதியோடு கண்ணை மூடிவிடுகிருள். வாழமுடியாதவளாகி விட்ட பேதைப் பெண் சாவித்திரி. மன்னித்தும் மனைவியிடம் சேர முடியாது துடிக்கிருன் சுகுமாரன். நல்ல வேளை, கதாநாயகியின் தோழியாக இருந்து கன்னிப் பெண்ணுகவுமிருந்த சரஸாவிற்கு சுகுமாரின் மனைவியாகும் பாக்கியம் கிடைத்தது! தன் வாழ்வை சரஸாவுடன் தொடங்குகிருன் மனித உள்ளம் படைத்த ஆதர்ச புருஷன் சுகுமார்.